# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 21 திங்கட்கிழமை (06.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 284


### அரசமைப்புத் திருத்தத்தை ஆதரிக்குமாறு

# கூட்டமைப்புக்கும் ஜே.வி. பிக்கும்

# அரசாங்கம் பகிரங்க அழைப்பு

கொழும்பு, செப். 06



நாடாளுமன்றத்தில் நாளைமறுதினம் 8ஆம் திகதி சமர்ப்பிக்கப் படவுள்ள அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுக்கு பிரதமர் டி.எம்.ஜயரட்ன பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் டி.எம்.ஜயரட்ன தலைமையில் நேற்று அரசமைப்புத் திருத்தம் தொடர்பான மக்கள் ஆதரவுப் பேரணி கம்பளையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட பகிரங்க அழைப்பை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

முப்பது வருட யுத்தத்தால் நாட்டின் அபிவிருத்தி பின்னடைவு கண்டது. இப்பின்னடைவிலிருந்து நாட்டை மீட்கவும்,துரித அபிவிருத்தியை மேற்கொள்ளவும் சிறந்த தலைமைத்துவம் அவசியம்.

எனவே, எந்தவொரு கட்சியும் (23 ஆம் பக்கம் பார்க்க)

## அஸ்கிரிய பீடாதிபதி ஆதரவு

கண்டி, செப்.06

அரசமைப்புத் திருத்தத்துக்குத் தமது ஆதரவும் ஆசீர்வாதமும் உண்டு என அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீபுத்தராகித்த மகாநாயக்கர் நேற்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக் காலை அஸ்கிரிய பீடாதிபதி உடுகம புத்தரகித்த மகா நாயக்கரைச் சந்தித்து அரசமைப்புத் திருத்தம் குறித்து விளக்கினார். (23 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் முக்கிய கூட்டம் இன்று

கொழும்பு, செப். 6

அரசாங்கம் நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவு நல்குவதா இல்லையா என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று கொழும்பில் கூடி ஆராயவுள்ளனர்.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று கூடி அரசமைப்புத் திருத்தங்கள் குறித்து ஆராயவுள்ளனர் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுத் தெரிவித்தார்.

அரசமைப்புத் திருத்தத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்க வேண்டும் என்று இன்று பிரதமர் கம்பளையில் வைத்து (23 ஆம் பக்கம் பார்க்க)

## 8 ஆம் திகதியை கறுப்பு தினமாக ஐ.தே.க. தொழிற்சங்கங்கள் பிரகடனம்

### கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தவும் திட்டம்

கொழும்பு, செப். 06

அரசமைப்புத் திருத்த யோசனைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் தினமான எட்டாம் திகதியை 'கறுப்பு தினமாக'ப் பிரகடனப்படுத்தி அன்றையதினம் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஐ.தே.கட்சி தொழிற் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

அன்றைய தினம் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சாகும்வரையிலான உண்ணாவிதப் போராட்டத்தில் ஈடுபடக்கூடும் என்றும் அத்தொழிற்சங்கங்கள் நேற்றுக் கூறின.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று ஐ.தே.க. சார்பு தேசிய தொழிற் சங்க சம்மேளனம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய சம்மேளனத்தின் பிரதிநிதிகளே மேற்கண்டவாறு கூறினார்.

சம்மேளனத்தின் தலைவரும், (24 ஆம் பக்கம் பார்க்க)

## சன் சீ கப்பல் ஈழத் தமிழ் அகதிகளுக்கு கனடாவில் புகலிடம் கிடைக்க வாய்ப்பு

கொழும்பு, செப். 06

கனடாவிற்கு ' சன் சீ கப்பல் மூலம் சென்ற 492 இலங்கை அகதிகளுக்கும் அந்த நாட்டில் புகலிடம் அந்தஸ்து வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அகதிகளை உள்வாங்கும் விடயத்தில் கனடா கடைப்பிடிக்கும் நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் கனடா 85 வீதமான தமிழ் அகதிகளுக்குப் புகலிடம் வழங்கியுள்ளது.

2009 ஆண்டில் அது 90.7 வீதமான தமிழர்களுக்குப் புகலிட அந்தஸ்தை வழங்கியது.

2008 ஆம் ஆண்டில் 93 வீதமான தமிழர்களுக்கு கனடா புகலிட அந்தஸ்தை வழங்கியுள்ளது.

ஆஸ்திரேலியாவைக் காட்டிலும் கனடா 14 வீதம் அதிகரித்த நிலையில் இலங்கை தமிழ் அகதிகளை உள்வாங்கியுள்ளது.

2009 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா 76.9 வீத இலங்கை அகதிகளை உள்வாங்கியது. (24 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் முருகப்பெருமானின் எழிற்கோலத் தேர்த்திருவிழா நாளை

### இன்று மாலை 5 மணிக்கு சப்பறம்



யாழ்ப்பாணம், செப். 6

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் நாளை காலை 7 மணிக்கு முருகப் பெருமானின் எழிற்கோலத் தேர் உலா சிறப்புற நடைபெறும்.

கடந்த காலங்களைவிட இம்முறை வெளிநாடுகளில் இருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் இத்திருவிழாக்களில் பல்லாயிரக் கணக்கானோர் பங்குபற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே இதற்கு முன் ஆயத்தமாக பக்தர்களுக்குரிய வசதிகளைப் பொலிஸாரும் மாநகரசபையினரும் மேற்கொண்டுள்ளனர்.

மக்களுக்கு வேண்டிய சுகாதார குடி தண்ணீர் வசதிகள் போன்றவற்றை யாழ். மாநகரசபையும் மற்றும் ஆலயச் சூழலில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்காகவும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தும் வகையிலும் சுமார் 600 பொலிஸார் கடமையில் (23 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய செயலக மாநாட்டில் பங்குபற்ற அரச அதிபர்கள் வருகை

யாழ்ப்பாணம், செப். 6

நாட்டின் சகல மாவட்டங்களினதும் அரச அதிபர்களும் பங்குபற்றும் மாநாடு யாழ். செயலகத்தில் இன்று காலை 9 மணியளவில் செயலகக் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன கலந்துகொள்கிறார். மாநாடுகளில் கலந்துகொள்வதற்காக நேற்று மாலையே அரச அதிபர்கள் யாழ்ப் பாணம் வந்துசேர்ந்தார்கள். இத் தகவல்களைத் தெரிவித்தார் யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார். (23 ஆம் பக்கம் பார்க்க)




உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!
நல்லைக் கந்தனின்
உற்சவ காலத் திருக்காட்சிகள்
தினமும் உங்கள் உதயனின்
வலைத் தளத்திலும்....

www.uthayan.com


### அரசமைப்புத் திருத்தத்திற்கு ஏட்டிக்குப் போட்டியாக...



அரசமைப்புத் திருத்தம் குறித்து கண்டி மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரரிடம் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விளக்கமளித்த பின்னர் அரசமைப்புத் திருத்தம் குறித்த ஆவணத்தைக் கையளிப்பதை முதல் படத்திலும், ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் மகாநாயக்கரிடம் அரசமைப்புத் திருத்தங்களால் ஏற்படும் பாதகங்கள் குறித்து விளக்குவதை இரண்டாவது படத்திலும் காண்க.

# மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












''உதயனின்'' அச்சு ஊடக அனுசரணையில், சக்தி ரீ.வியின் ஏற்பாட்டில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ''சக்தி யாழ்.சங்கமம்'' நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சத்தியதாஸ் வில்லிசைக் குழுவின் வில்லிசை நிகழ்வு முதலாவது படத்திலும், நித்தியஸ்ரீ மகாதேவனின் இசைநிகழ்வை அடுத்தடுத்த படங்களிலும், யாழ்ப்பாணத்து இசைக் கலைஞர்கள் கௌரவிப்பில் வில்லிசைக் கலைஞர் கணபதிப்பிள்ளை (சின்னமணி) கௌரவிக்கப்படுவதை நான்காவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: டிலீப், கரீஸ்)

## 14ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
24 * 10 * 1972

மறைவு
06 * 09 * 1996

### அமரர் இரத்தினம் ஜெயன்

(யாழ்.பல்கலைக்கழக மாணவன்)

கண்ணீரால் பதினான்கு ஆண்டுகள் கரைந்து
மறைந்ததுவே
வையத்தில் வளமோடு வாழ எண்ணி
பல திட்டங்கள் நீர் போட்டீர்
கனவு நனவாகி கனிகின்ற காலம் வர
பாரினை விட்டு அன்னையிடம் சென்றனையோ?
பழைய நினைவுகளை நினைத்துப் பார்க்கின்றோம்
உத்தமமான உங்கள் நினைவு உள்ளம் விட்டு
அகலவில்லை
என்னதான் செய்திடினும் எம் சோகம் மாறவில்லை
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியா

கைதடி தெற்கு,
கைதடி. (102996) குடும்பத்தினர்.

## யாழ். நகரில் இருந்து புறப்பட்ட தனியார் பஸ்ஸில்

# மிதிபலகையில் நின்று பயணம் செய்த நுணாவில் வாசி தவறிவீழ்ந்து மரணம்!

யாழ்ப்பாணம், செப். 6

பஸ்ஸின் மதிபலகையில் பயணித்தவர் தவறிவீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் நுணாவிலில் இடம்பெற் றது.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த நமசிவாயம் இராசரத்தினம் (வயது-58) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவர் ஆவார்.

இந்தச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது :-

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட தனியார் பஸ்ஸின் மதிபலகையில் பயணித்த குறித்த நபர், நுணாவில், அறவழி நிலையம் அருகே இன்னொரு பயணி பஸ்ஸில் ஏறுவதற்காக வழி கொடுத்துவிட்டு, மீண்டும் மிதிபலகைக்குத் தாவினார். இதன் போது சமநிலை தளம்பி அவர் நிலத்தில் பிடரி அடிபடத் தவறி வீழ்ந்தார். தலையில் அடிபட்டதனால் நினைவிழந்த அவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறந்தவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், பஸ்ஸைத் தடுத்து வைத்துள்ளனர் என்றும் சாரதியை விசாரணைகளின்பின் விடுவித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-எ)


## காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் வியாபாரக் கட்டடங்கள் அமைப்பதற்கு ஏற்ற இரண்டு பக்கப் பாதையினைக் கொண்ட 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0772912244


## கலந்துரையாடல்

ஊர்காவற்றுறை,செப்.6

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபை பொது நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப. 10.30 மணிக்கு நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சனசமூக நிலையங்கள், முன்பள்ளி நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் ஆர்வமுடையோரைக் கலந்து கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்தராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஒ-21)

## சோமஸ்கந்தா கல்லூரி புதனன்று ஆரம்பம்

கோப்பாய்,செப்.6

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மூன்றாம் தவணைக்காக நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகும் என்று [illegible] தெரிவித்துள்ளார். (ஒ-72)

## மரண அறிவித்தல்

### திருமதி மரகதம் சபாரத்தினம்



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மரகதம் சபாரத்தினம் நேற்று (05.09.2010) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை பொன்னுவின் மகளும் காலஞ்சென்ற குழந்தைவேலு சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் தேவசேனா (ஓய்வுபெற்ற ஆசிரியை - இராமநாதன் கல்லூரி), சிவபாலன் (ஓய்வுபெற்ற முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி), சிவயோகி (ஓய்வுபெற்ற ஆசிரியை கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்), மாலதி (ஆஸ்திரேலியா), உமாபாலன் (கனடா), மணியம் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பாலகிருஷ்ணேஸ்வரன் (சிமெந்துக் கூட்டுத் தாபனம்) மற்றும் சறோஜாதேவி (ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), காலஞ்சென்றவர்களான தபோதநாயகம் (ஆசிரியர்), நித்தியகீர்த்தி (ஆஸ்திரேலியா), மற்றும் சுகந்தி (கனடா), பூமணி (கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஷாரங்கா (ஆசிரியை), லக்ஷிதா (முகாமைத்துவ உதவியாளர் - யாழ்.மாநகர சபை), ஹம்ஷிதா(யாழ்.பல்கலைக்கழகம், விஞ்ஞான பீட 3ஆம் வருட மாணவி), தர்ஷிகா, மதீஷன் (யாழ்.பல்கலைக்கழகம் மருத்துவ பீட 4ஆம் வருட மாணவன்), அருண் (ஆஸ்திரேலியா), சேயோன் (கனடா), மிதிலா (கனடா), முகுந்தன் (கிளிநொச்சி), தவநேசன் (கிளிநொச்சி), குயிலி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரணவி, நர்த்தவி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2010) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (102995)

தகவல்:
ச.சிவபாலன் (மகன்)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி ஜனனி பஞ்சாட்சரம்



நேற்றுவரை நிஜங்களாக மட்டும் இருந்தவை
இன்றோ ! நினைவுகளாக ......
இன்றுகூட நம்பமுடியவில்லை
இந்தப் பூங்கொத்தில் ஒரு மலர் உதிர்ந்து விட்டதென்று

நோய்களைக் களைய உருவமெடுத்த உன்னை
நோயே கொண்டு சென்ற மாயம் தான் என்னவோ !
எங்களுடன் நீ பழகித் திரிந்த நாள்களின் தடயங்களாய் !
என்றுமே உன் நினைவுகள் இறுதிவரை எம்மோடு !

எமது சக மாணவியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மருத்துவபீட
32ஆம் அணி மாணவர்கள்.

(102986)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## விளைத்த வினை அறுக்கும் காலம் இது...

ஐக்கியதேசியக் கட்சி இந்த நாட்டின் அரசியல் கட்சிகளில் மிக மூத்தது. இந்த நாட்டை பிரிட்டிஷ்காரர்களிடம் இருந்து விடுவித்துச் சுதந்திரம் அடைவதற்கு சிங்களவர்கள், தமிழர்கள்,முஸ்லிம்கள், பறங்கியர்கள் ஆகிய நான்கு இனங்களையும் சேர்ந்தவர்களை, தலைவர்களை உள்ளடக்கியதாக இலங்கையின் விடுதலைக்கு வித்திட்டது. அதில் வெற்றியும் கண்டது. இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங் கியதால் இந்தச் சுண்டங்காய் நாட்டுக்கும் ஒரு வருட கால இடைவெளியில் சுதந்திரத்தை வழங்கி விட்டு வெளியேறியது பிரிட்டன்.

ஆரம்பத்தில் ஐ.தே.கட்சி தனிக்காட்டு ராஜாவாக விளங்கியது. ஒரிரு வருடங்களில் தமிழர்களின், தமிழர் தலைவர்களின் எதிர்ப்பைத் தேடிக் கொண்டது. இது சிங்கள நாடு என்றும் தமிழர் பிரதேசங்களை கபளீகரம் செய்ய வேண்டும் என்றும் திட்டமிட்டது. தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள மக்களை அரச செலவில் குடியேற்றியது. ஆரம்பத்தில் கிழக்கிலும் பின்னர் வடக்கிலும் சிங்களக் குடியேற்றங்களை நடத்தி வெற்றிகண்டது.

அதில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமுறும் நிலை ஆரம்பமானது. அதனால் தமிழர்கள் மத்தியில் ஆதரவும் செல்வாக்கும் இழந்து சிங்களவர்களின் கட்சியாக உருவெடுத்தது.

இந்த ஆறு சகாப்த இடைவெளியில், அது சிங்கள மக்கள் மத்தியிலும் செல்வாக்கு இழந்து, எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆரம்பித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பல தடவைகள் ஆட்சிக் கட்டிலை பறிகொடுத்தது.ஐ.தே.கவின் இன்றைய நிலை பெரும் பரிதாபத்துக்கு உரியது.

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் நாளாந்தம் மஹிந்த அரசின் பக்கம் தாவிக் கொண்டிருக்கிறார்கள். கட்சியின் கட்டுக் கோப்புக் குலைந்து கொண்டிருக்கிறது. இப்போதைய தலைமைத்துவத்தின் பலவீனமும், அரச தலைவரின் கவர்ச்சிப்பொருள்களும் யானையைப் பூனையாக்கிக் கொண்டிருப்பதாகக் கொள்ளலாம்.

முதலாவது பார்வை, மேலெழுந்த வாரியான பார்வை. சற்று உள்ளூரப் பார்த்தால் நிறை வேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தியதே ஐக்கிய தேசியக் கட்சிதான். ஜனாதிபதி இரண்டு தடவைகள் பதவி வகிக்கலாம் என்ற சர்வாதிகார இரத்தத்தை ஏற்றியதும் அந்தக் கட்சிதான். ஜே.ஆர். மட்டும் சர்வாதிகார சுகத்தை அனுபவித்தார்; தமிழர்களுக்கு எதிராக அவர்களுக்குரிய உரிமைகளை அப்பட்டமாக மறுத்தார். இப்போது வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற கையறு நிலை வந்திருக்கிறது.

1995 ஆம் ஆண்டில் சந்திரிகா அரசு நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையை ஒழித்து, நிறைவேற்று அதிகாரம் உள்ள பிரதமர் முறையைக் கொண்டுவர முயற்சித்த போது அதற்குத் தடைக்கல்லாக இருந்ததும் ஐக்கிய தேசியக் கட்சியே.

இரண்டாவது பார்வையில் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கென அவசர காலச் சட்ட விதிகளையும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் தீவிரமாக்கி தமிழ் இளைஞர்களை சிறை யில் அடைத்தல், சுட்டுக் கொல்லுதல் ஆகிய கொடுமைகளைப் பெருக்கியதும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே.

அதற்கும் மேலாக, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முயன்றவேளையில், அதனை நாடி, செய்து கொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படுவதற்கு பின்னணியும் ஐ.தே.கட்சியே. பாதயாத்திரை தொடக்கம் ஒப்பந்தம் நடைமுறைக்கு வராது தடுக்கு முகமாக பௌத்த பிக்குகளை திரட்டிப் போராட்டம் நடத்தி அதனை இல்லாமல் செய்ததும் ஐ.தே.கட்சியே.

ஆகப் பிந்தி தமிழீழ விடுதலைப்புலிகளுடன் 2002ஆம் ஆண்டில் ரணில் அரசு செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாது தடங்கல்களைப் புகுத்தியும் பின்னடிப்புகளைப் பெருக்கியும் தாமதங்களைச் செய்ததாலும் உரிய பலனைப் பெறமுடியவில்லை. இத்தனைக்கும் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் செயற்பட்ட அந்த உருப்படியான முயற்சிக்குச் செயல்வடிவம் கொடுக்கும் திறமையும் மனப்பலமும் விசுவாசமும் ரணில் அரசாங்கத்துக்கு இருக்கவில்லை.

இவை யாவற்றினதும் ஒட்டுமொத்த, கூட்டு வடிவ நிலையே ஐக்கிய தேசியக் கட்சியை பாழ்கிணற்றில் தள்ளிவிட்டிருக்கிறது. ஜனாதிபதி மஹிந்த விரித்த வலையில் வீழ்ந்து ஐ.தே.க. இருந்து குற்றுயிராகும் நிலைக்கு வந்துள்ளது.

அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக இனிப்பு வழங்கப் போவதாக ஐ.தே.க தலைமைத்துவத்துக்கு ஆசை காட்டி, பொறிவைத்து அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தன்பக்கம் இழுத்துவிட்டார் ஜனாதிபதி.

அதனால் ஜனநாயகத்துக்கு குழிபறிக்கும் அரசமைப்புத் திருத்தத்தை தங்கு தடையின்றி நிறைவேற்றப் போகிறார்.

தன்வினை தன்னைச் சுடும்; ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்பது கண்முன்னே நிதர்சனமாகிக் கொண்டிருக்கிறது.

# அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் விக்கினம் இன்றி நிறைவேறும் வாய்ப்பு

நேற்று 05.09.2010 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியற் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி

அரசமைப்புக்கு கொண்டுவரப்படவிருக்கும் 18ஆவதுதிருத்தத்தின் பிரகாரம், 'ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்படும் எந்த ஒரு நபரும் அதற்குப் பின்னர் எத்தனை தடவை வேண்டுமானாலும் அப்பதவிக்கு அவர் மக் களால் தெரிவு செய்யப்படுவதற் குத் தகுதி பெற்றவராவார். அதா வது அப்படி தெரிவு செய்யப்படு பவர் எத்தனை முறையானாலும் அப்பதவிக்கு அவர் போட்டியிட லாம் என்பதாகும்.

ஜனாதிபதியானவர் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நாடாளுமன்றத்துக்கு வருகை தருவார். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருந்து வரும் எல்லாவித சிறப்புரிமைகளும் அதிகாரங்களும் அவருக்கு இருக்கும். அவர் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தலாம். நாடாளுமன்றத்துக்கு தகவல்களையும் அனுப்பிவைக்கலாம். எதுவானாலும் நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும் அதிகாரம் அவருக்கு இருக்கமாட்டாது. மேலும் நாடாளுமன்ற சிறப்புரிமைகளை மீறியதான நிலைமை அவருக்கு ஏற்படமாட்டாது.

### நாடாளுமன்ற சபை

சபாநாயகர், பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர்களிலிருந்து எதிர்க்கட்சியினர் நியமிக்கும் ஓர் உறுப்பினர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரால் நாடாளுமன்ற உறுப்பினர்களிலிருந்து நியமிக்கப்படும் ஒருவர் ஆகியவர்களைக் கொண்ட நாடாளுமன்ற சபைக்கு (Parliamentary Council) ஜனாதிபதி தலைமை வகிப்பார்.

பின்வரும் நியமனங்களின் போது இந்தச் சபையின் அவதானங்களை மட்டுமே ஜனாதிபதி கோரி நிற்பார். அவையாவன:-

### அட்டவணை:1

தேர்தல் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணையம், தேசிய பொலிஸ் ஆணையம், இலங்கை மனித உரிமை ஆணையம் மற்றும் எல்லை நிர்ணய ஆணையம்.

### அட்டவணை : 2

பிரதம நீதியரசரும் உயர் நீதிமன்ற நீதியரசர்களும் மேன் முறையீட்டு நீதிமன்றின் தலைமை நீதிவானும் நீதிவான்களும், நீதிச் சேவைகள் ஆணையத்தின் தலைவர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள்.

### அட்டவணை 3:

சட்டமா அதிபர், கணக்காய்வு திணைக்கள அதிபர், நிர்வாகத்துக்கான நாடாளுமன்ற ஆணையர் (ஒம்புட்ஸ்மன்) மற்றும் நாடாளுமன்றின் செயலாளர் நாயகம்.

ஏற்கனவே அமுலில் உள்ள அரசமைப்பு விதிகளின் படி மேலே அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிக்குரியவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்படி இந்த அதிகாரங்கள் அரசமைப்புச்சபையிடம் இருந்து வந்தது. இந்தச் சபையில் பிரதம மந்திரி, சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள், பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் அங்கம் வகிக்காத எதிர்க் கட்சிகள் இணைந்து நியமிக்கப் படும் ஓர் உறுப்பினர் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

18 ஆவது திருத்தத்தின்படி பொது அலுவலர்கள், அவர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்றுச் செயற்பாடுகள், மற்றும் பதவி நீக்கங்கள் யாவும் அமைச்சரவையின் கீழ் இருந்து வரும். இதற்கு மேலாக நியமனங்கள், பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் ஒழுக்காற்று கட்டுப்பாடுகள், திணைக்களங்களின் தலைவர்களை வேலை நீக்கம் செய்தல் போன்ற பொறுப்புக்களும் அதனிடம் இருந்து வரும்.

இந்தப் பொறுப்புக்கள் இப்

## பொலிஸ் ஆணையத்தின் தலைவரை ஜனாதிபதியே நியமிப்பார்

பொழுது பொதுச்சேவைகள் ஆணையத்திடம் இருந்து வருகின்றன. புதிய மாற்றங்கள் செயல்படும் போது பொதுச்சேவைகள் ஆணையத்திடம் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்று கட்டுப்பாடுகள், பொதுச்சேவையாளர்களை பதவி நீக்கம் செய்தல் போன்ற அதிகாரங்களை மட்டுமே கொண்டிருக்கும்.

### பொலிஸ் ஆணையத்தின் அதிகாரங்கள்

அரசமைப்பின் தற்போதைய தேசிய பொலிஸ் ஆணையத்தின் அதிகாரங்கள் கடுமையாகக் குறைக்கப்பட்டுள்ளன. பொது மக்களிடமிருந்து அல்லது வேறு பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள், பொலிஸ் அதிகாரிகள் அல்லது பொலிஸ் படைக்கு எதிராகக் கிடைக்கும் பட்சத்தில் அவைகளை ஏற்றுப்புலனாய்வு செய்யும் அதிகாரம் மட்டுமே அதனிடம் இருக்கும்.

மாற்றங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதின் பின்னர் ஜனாதிபதியானவர் தேசிய பொலிஸ் ஆணையத்தின் தலைவரை நியமிப்பார். பொதுசேவைகள் ஆணையத்தின் கீழ் பொலிஸ் அலுவலர்கள் கொண்டு வரப்படுவார்கள்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி, அமைச்சர்கள் மத்தியில் பேசிய போது இந்த ஆணையம் கடந்த காலத்தில் சரியான முறையில் செயல்படவில்லையென்று குறிப்பிட்டார். தேசிய பொலிஸ் ஆணையம் இறந்து போன பொலிஸ் அலுவலருக்குப் பதவி உயர்வு வழங்கியிருக்கிறது. பாலியல் வல்லுறவுகளில் ஈடுபட்டவர்களுக்கும் பதவி உயர்வு வழங்கியுள்ளது என்று கூறினார்.

### ஐ.தே.கவிலிருந்து மேலும் இருவர்

ஐ.தே.கவின் மேலும் மூன்று எம்.பிகள் அரசுக்கு ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளார்கள். லக்ஷ்மன் செனவிரட்ண, ஏர்ள் குணசேகர மற்றும் மனுஷா நாணயக்கார ஆகியவர்களே அந்த மூவரும். மேலும் இருவர் அப்துல் காதர் (கண்டி மாவட்டம்),ஸ்ரீரங்கா (நுவரெலியா மாவட்டம்) ஆகியவர்களும் அரசு பக்கம் தாவ இருப்பதாகத் தகவல் பரவியுள்ளது. இடதுசாரிக் கட்சி உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள் என்ற அச்சம் அரசாங்க தரப்பில் நிலவிய போதிலும் அப்படி நடக்கமாட்டாதென் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். அவர்களுடன் ஆலோசனைகள் நடத்தியுள்ள ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்கள் தொடர்பாக மேற்கொண்டும் ஆலோசனைகள் நடத்தி தேவையானால் இன்னொரு அரசமைப்புத் திருத்தத்தை பின்னர் கொண்டுவரலாம் என்று தெரிவித்துள்ள கருத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

ஐ.தே.கவுடன் பொது உடன்பாட்டுக்கு வர முடியாததினால் ஜே.வி.பியினர் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதுடன் அரசமைப்பு மாற்றங்களினால் ஏற்படக் கூடிய கேடுகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக சிறு சிறு கூட்டங்களையும் நடத்தி வருகிறார்கள்.

ஐ.தே.கவுடன் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு ஜே.வி.பி காத்திருந்தது. ஆனால் ராஜபக்ஷ ஐ.தே.க தலைவரை பேச்சு வார்த்தைக்கு அழைத்தமையால் அது சிதைந்து போயிற்று. அத்துடன் அரசுடனான பேச்சு வார்த்தைகள் தொடரக் கூடும் என்று

**தமிழில்: கோகுலன்**

விக்கிரமசிங்க நம்பியதாலும் அதில் அவர் கலந்து கொள்ளவில்லை. மேலும் கட்சித் தலைமைக்கு சஜித் பிரேமதாசாவால் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளை ஓரங்கட்டவும் இது உதவியாக இருந்தது. ஆனால் இப்போது நிலைமை வேறு திசைக்குத் திரும்பிவிட்டது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 59ஆவது வருடாந்த மாநாட்டில் பேசிய போது ஜனாதிபதி ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவை குத்திப் பேசவும் தயங்கவில்லை.

### அரசைக் கவிழ்க்க சதி நடக்கிறது.

எமது கட்சி எவருக்கு எதிராகவும் சதித்திட்டங்கள் தீட்டுவது கிடையாது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு எதிராக எப்பொழுதுமே சதித்திட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. 1964 ஆம் ஆண்டு பத்திரிகைத்துறை சட்டமூலம் செயல்படுத்தப்படவிருந்த வேளையிலும் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசுக்கு எதிராக சதித் திட்டங்கள் தீட்டப்பட்டன. சிறிமா அரசைக் கவிழ்ப்பதற்குத் திட்டம் தீட்டியவர்களின் பிள்ளைகள் இப்போது இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கும் சதித்திட்டம் தீட்டி வருகிறார்கள் -என்று ராஜபக்ஷ கூறினார்.

அப்போது பதவியிலிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசைக் கவிழ்ப்பதற்கு செயலாற்றியவர்களில் ரணில் விக்கிரமசிங்காவின் தந்தையாரான எஸ் மண்ட் விக்கிரமசிங்க பிரதமபங்கு வகித்தார் என்று கருதப்பட்டதுண்டு.

ராஜபக்ஷவின் சொல் அம்பு தற்பொழுது ஐ.தே.க.வில் இணைந்துள்ள மங்கள சமரவீரவையும் குறிவைப்பதாக இருந்திருக்கலாம். அவருடைய தந்தையாரான மகாநாம சமரவீரவும் அப்போதைய பத்திரிகை சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்து அரசு வீழ்வதற்கு பங்களிப்புச் செய்திருந்தார்.

(ப)

## நாளை

ஆவணி 22 07.09.2010
செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| திதி: | : சதுர்த்தசி முஇ.07.03 வரை |
| நட்சத்திரம் | : மகம் பி.இ. 03.23 வரை |
| சுபநேரம் | : 10.34-12.04 வரை |
| ராகுகாலம் | : 03.04-04.34 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 2010 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு.

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்

**Spoken English** பயிற்சி மையம்

ஆங்கிலம் பேசலாம் வாங்க

Come, let's speak fluent English



**veta** ®

Experts in English Training

An ISO 9001:2000 Company

**veta** ஆசியாவில் 140 நகரங்களில் 250 கிளைகள் மூலம் ஆங்கிலத்தைப் பயிற்றுவிப்பதில் வல்லுநர்கள், 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் பேச்சுத் திறமைக்கு ஒளி விளக்காக விளங்கியவர்கள்.

| | |
|---|---|
| veta Foundation ENGLISH | For beginners who want to read and write English. |
| veta Fluent English First Step | For people who are doubtful about their English and want to speak English fluently. |
| veta Fluent English Next Step | For sperkers of English who want to master diction and style. |

**For whom ?**

உயர் கல்விகற்போர், பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்லவுள்ளோர், Student Visa க்கு விண்ணப்பிக்க இருப்போர்க்கு.

யாழில் முதன்முறையாக Online பயிற்சி பாடங்கள். (கணினி ஊடான ஒலி - ஒளி வாயிலான பயிற்சிபாடங்கள்.)

சிங்கப்பூரில் இருந்து பாடப்புத்தகங்கள் மற்றும் சான்றிதழ்கள்.

**veta** புதிய பிரிவுகள் ஆரம்பம்.

*6/9/2010 9.00 a.m.*
*10/9/2010 9.00 a.m.*
*11/9/2010 9.00 a.m. & 3.30 p.m.*

**IELTS**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

நவீன நுட்பங்களுடன் இலகுவான முறையில் ஆங்கிலம் பேசப் பயிலலாம்.

மேலதிக விபரங்களுக்கு

**DMI COMPUTER EDUCATION**

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403

M. M. V. வீதி, (மந்திகை வைத்தியசாலை முன்பாக) நெல்லியடி. Tel. : 021-320 7700



**A/L 2010 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான கணனிக்கற்கைநெறிகள் மானிப்பாயில் ஆரம்பம் !!**

- Advanced Diploma in ICT (ADICT)
- Diploma in Desktop Publishing (DTP)
- Diploma in Accounting Packages
- Diploma in Software Engineering
- Diploma in Computer Hardware
- Diploma in Mobile Phone Repairing
- Diploma in Spoken & Practical English
- Diploma in Website Development
- Diploma in Internet & e - Mail
- Diploma in Ethical Hacking IT Security

அனுமதிப்படிவங்களை எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து பிரிவுகளும் ஆரம்பம் - 12/09/2010

மானிப்பாயில் மிகக்குறைந்த கட்டணத்தில் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்களை வழங்கும் நிறுவனம் என்றால் அது UNI மட்டுமே.

மேலதிக விபரங்களுக்கு **UNI**

**ICT EDUCATION TRAINERS**

Jaffna Road, Manipay. T.P - 021 7429325

(மானிப்பாய் பிரதேச சபைக்கு முன்பாக)


## மரண அறிவித்தல்கள்

### கோவிந்தசாமி பரமசிவம்

நல்லூர் அரசவீதியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட கோவிந்தசாமி பரமசிவம் நேற்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தசாமி மற்றும் நல்லம்மா தம்பதியரின் மகனும் நவநீதரட்ணத்தின் (தேவி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கோபால சாமியின் அன்புச் சகோதரரும் பிரசாத், காயத்திரி, கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

185/1, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.
T.P. : 490302625540 (ஜேர்மனி) (102992)

தகவல் : சி.யோகநாதன் (மைத்துனர்).

### நமசிவாயம் இராசரத்தினம்



மன்னம்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் இராசரத்தினம் நேற்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நமசிவாயத்தின் அன்பு மகனும், காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் மீனாட்சியின் அன்பு மருமகனும் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுகந்தன் (வவுனியா பல்கலைக்கழக 2ஆம் வருட கணிதப்பிரிவு மாணவன்), அகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைநாயகம், குணம், இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகசிங்கம் (வெற்றி), காலஞ்சென்ற யோகலிங்கம் மற்றும் கனகம்மா, சரஸ்வதி, சுந்தரலிங்கம் (வவுனியா பல்கலைக் கழக ஊழியர்) ஆகியோரின் மைத்துனரும், ராஜேஸ்வரி, ராசமணி, கதிர்காமநாதன், யசோதா (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற வைத்தீஸ்வரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணியளவில் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.* (102988)

தகவல் : மனைவி, பிள்ளைகள்.

## விழிப்புணர்வுச் செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தால் யாழ். கோட்டப் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு மாணவர் உடல், உள மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு இன்று திங்கட்கிழமை நடத்தப்படவுள்ளது.

யாழ். வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இச் செயலமர்வு இடம்பெறும்.

இந்தச்செயலமர்வு ஏற்கனவே கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அன்றைய தினத்தில் செயலமர்வு இடம் பெறவில்லை. (எ-10)


## வீடு விற்பனைக்கு

**இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்துக்கு சமீபமாக $1\frac{3}{4}$ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.**

**தொடர்புக்கு: 0776381283**

## ஈசன் திருமணசேவை

புரிபடிச்சந்தி, லட்டுக்கோட்டை உள்நாடு, வெளிநாடு மணமக்கள் உண்டு. ஆசிரியர், டாக்டர், இஞ்சினியர் உட்பட நேரடியாகவும், தபால் மூலம் தொடர்புகொள்ள

T.P.: 0773618507, Home: 021 7900315,
Fax: 021 222 3734,
Mail:esanthirumana service@hotmail.com


## தவறிவிட்டது

மரியநாயகம் விஜேந்தன் ஆகிய எனது இல 253/56, கனல் வீதி, எலகந்த, ஹெந்தளை, வத்தளை எனும் முகவரியுடைய 791864909V எனும் இலக்கமுடைய தே.அ. அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், A.T.M. அட்டைகள் அடங்கிய பேர்ஸ் கடந்த 04.09.2010 அன்று நல்லூர், கோயில் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். அல்லது கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

*இல. 18A, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். 0771095678*

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 06 |
| ★ | ★ |
| 05 | 09 |
| ★ | ★ |
| 1978 | 2006 |

### சிவராசா சிவசேகர்

கருணை பொழியும் கண்களும்
கருத்து நிறைந்த வாக்கும் மழலைக்
கண்ணீர் துடைக்கும் கரங்களும், நன்மை
மறவாத உள்ளமும் கொண்டு வாழ்ந்து
வானுறைந்து நான்காண்டுகள் சென்றாலும்
நாளெல்லாம் உனை நினைந்து
நாம் இங்கு வாடுகின்றோம்.

*இராமலிங்கம் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (102993)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தியாகராசா பாக்கியம்

நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா பாக்கியம் நேற்று (05.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடராசா - தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும் பாக்கியராசா, சாந்தி, சக்கரவர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயகுமார் (ஆசிரியர், யா/ அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி), ஜெகதீஸ்வரி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் பவனுஜா, பிரவீணா, ரஜினா, நிரோஜா, கோபிகா, அனுஷா, கஜலக்ஷன், துளசிகா, மயூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (06.09.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி மத்தி, நீர்வேலி. (சி/570713)

தகவல் : குடும்பத்தினர்.


**Barnabas** இன் மலிவு விற்பனை

★ 29" Sony Flat TV, 21 " Flat TV, 14" TV மிக மிகக் குறைந்த விலையில்.
★ தற்போது 21 " TV , 12,490 ரூபாய் மட்டுமே.....
★ எங்கும் பெறமுடியாத உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய அதி வேகமான சேவையும் எம்மிடம் மட்டுமே உடனே அழையுங்கள் 0777448668
★ மிகமிக இலகுவான கொள்வனவு முறைமைகள் தற்போது நடைமுறையில்
★ எந்த மொத்த வியாபாரிக்கும் வியக்கவைக்கும் விசேட சலுகைகள்




247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரித்தானியா காரை நலன்புரி சங்கம் காரைநகர் மக்களின் குடிதண்ணீர்ப் பாவனைக்காக வழங்கிய தண்ணீர்த் தாங்கி ஊர்தி கையளிப்பு வைபவம் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய முன்றிலில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும், குடிதண்ணீர் விநியோகப் பொறுப்பாளர் வே.நடராசாவிடம் பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கப் பிரதிநிதிகள் கையளிப்பதை இரண்டாவது படத்திலும், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் பிரித்தானியா காரை நலன்புரிச் சங்க பிரதிநிதி சி.சுந்தரதாஸன் ஆகியோர் உரையாற்றுவதை மூன்றாம், நான்காம் படங்களிலும் காணலாம். (250)

# கொலஸ்ரோல், வெல்லம் ஆகியவற்றை நோயாளிகளிடம் குறைவடையச் செய்வதற்கு பனம்பழத்திலிருந்து மருந்து

## -உயிரி-இரசாயனவியல் பேராசிரியர் பொன்னுச்சாமி நவரட்ணம் புதிய தகவல்

பனம்பழத்தின் திண்ம மீதியிலிருந்து கொலஸ்ரோல், வெல்லம் ஆகியவற்றினை நோயாளிகளிடம் குறைக்கும் மருந்தினை உற்பத்தி செய்ய முடியும். அத்துடன் பனம் பழக் கழிவுகளினால் நிலம், நீர், வளி என்பன மாசடைவைத் தடுக்கும் வழிமுறையையும் கண்டுபிடித்துள்ளேன்.

கடந்த 3 சகாப்தகால போர் நடவடிக்கையிலும் இடப்பெயர்வாலும் வடமாகாணத்தின் உயிரி- இரசாயனத்துறை தொடர்பான தொடர் ஆராய்ச்சி இடம் பெற்றது.

இதன் பயனாக சாவகச்சேரி-அல்லாரையில் உள்ள பனங்கள்ளை 'பியர்' ஆக்கும் முயற்சியும், கண்டாவளையில் பதநீரை போத்தலில் அடைக்கும் நடவடிக்கையிலும் யாழ்ப்பாணத் திராட்சையில் இருந்து 'வைன்' உற்பத்தியிலும் நாம் வெற்றிகண்டோம்.

உயிரி-இரசாயனவியல் பேராசிரியர் கலாநிதி பொன்னுச்சாமி நவரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழில் அமிலோசு நொதியத்தை 'இலைக்கன்' எனும் கூட்டு அங்கிமூலம் பெறும் முறையை அறிமுகப்படுத்தினேன்.

இது மாப்பொருளை மோல்ரோசு வரை உடைக்கும் இந்நொதியம் தானியங்களில் இருந்து மோல்ரோசுவை தந்து அதிலிருந்து குளுக்கோசு பெறவும் மதுவத்தாக்கத்தினால் வைன், பியர் என்பவற்றின் உற்பத்திக்கும் உதவியது.

இவ்வாறு பல்வேறு உயிரி-இரசாயனவியல் ஆராய்ச்சிகள் மூலம் வடபகுதி கடந்த காலங்களில் முன்னின்றபோதும் அத்தகைய கண்டுபிடிப்புக்களை 'நிலைத்திருக்கக் கூடிய' அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியாத சூழலே காணப்பட்டது.

தற்போது நாடளாவிய ரீதியில் அமைதி நிலவுகின்றது. மேலும் பல்வேறு அபிவிருத்திகள், கண்டுபிடிப்புக்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாக உள்ளன.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் சூழல் மாநாட்டில் - யாழ்.மண்ணில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் பனம் பழங்களில் உள்ள நுண்ணங்கிகளின் நொதியச் செயற்பாட்டால் தோன்றும் துர்நாற்றம் வளியையும் அதிலுள்ள பல வகைச் சேதன அமிலங்கள் மண்ணையும், மழை காலங்களில் நீருடன் கரைந்து நீர்நிலைகளையும் மாசடையச் செய்கின்றன என்றும்-

இம் மாசடைதலைத் தடுக்க பழங்களில் உள்ள வெல்லத்தை நீர்க்கரை சலாகப் பிரிக்கும் முறையைக் கூறியதோடு திண்மமீதியை உலரவைத்துத் தூளாக்கி வில்லையாகவோ அல்லது உறையுள் அடக்கிய 'கப்ஸ்யூலாகவோ' நோயாளிக்குக் கொடுக்கும்போது அதிலுள்ள கரையும் நார்களினால் குருதியின் கொலஸ்திரோல், வெல்லம் (சீனி) ஆகியன குறையும் என்ற தொழிற்பாட்டை விளக்கினேன்.

இதற்காக-இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் கலாநிதி டபிள்யூ.எல்.சுமதிபாலவினால் ''தேசிய விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன்.

இவ்வாறு நமது வளத்தை நமது தொழில்நுட்பத்தை முழுமையாக பயன்படுத்தினால் எமது நாடும்-எமது பிரதேசமும் தானாக வளரும்-என்றார்.

''ஸ்பெயின்'' நாட்டின் திரித்துவப் பல்லைக்கழகத்தின் உயிரி-இரசாயனத்துறையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்காக அண்மையில் பேராசிரியர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர் கலாநிதி பொன்னுச்சாமி நவரட்ணம். அத்துடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் உயிரியல் இரசாயனத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (302)

# உரமானியப் படிவத்தை பெற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம், செப்.6

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு உரமானியப் படிவம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை 146 படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. 212 விவசாயிகள் இன்னும் உரமானியப் படிவங்கள் பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் உரமானிய படிவங்களைப் பெற்றுக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு சம்மேளனத் தலைவர் க.முதலியார் கேட்டுள்ளார்.

இதேவேளை-

சண்டிலிப்பாய் விவசாயிகள் சம்மேளன பிரிவிற்குட்பட்ட விவசாயிகளுக்கும் உரமானியப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-302)

* * *

நீர்வேலி,செப்.6

நீர்வேலி தெற்கு விவசாய சம்மேளனத்தினரால் உரமானியம் வழங்குவதற்கான படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் படிவங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்று விண்ணப்பிக்குமாறு சம்மேளன நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ-9-72)

# 'கெயர்' சர்வதேச நிறுவனத்தின் நுண்நிதி கணக்குப் பதிவியல் பயிற்சி

நாவற்குழி,செப்.6

'கெயர்' சர்வதேச நிறுவனத்தினால் நுண்நிதி கணக்குப் பதிவியல் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4மணி வரையும் வலி.கிழக்கு புத்தூர் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'கெயர்' நிறுவனத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் 'லிவ்ற்-2' திட்டத்தின் 2 ஆவது சுழற்சிக் காலப்பகுதிக்கென வலி.கிழக்கு பிரதேசத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சமூக முன்னெடுத்தல் குழுக்களுக்கு கணக்கியல் பதிவுகள் சம்பந்தமாகவே இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'கெயர்' நிறுவன அதிகாரிகள், பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமூக சேவைகள் அதிகாரி, கிராம அதிகாரி, சமுர்த்தி முகாமையாளர், கிராம அதிகாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

'லிவ்ற்-2' திட்டம் கோப்பாய் தெற்கு, உரும்பிராய் மேற்கு, சிறுப்பிட்டி கிழக்கு, புத்தூர் வடக்கு, அச்செழு, அச்சுவேலி தெற்கு, மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (எ-121)

# வாழைப்பழ விலை உச்சத்தில்

கோப்பாய்,செப்.6

குடாநாட்டு வாழைக்குலைச் சந்தைகளில் வாழைப்பழங்களின் விலை தொடர்ந்தும் உச்சத்திலேயே இருந்து வருகிறது.

இந்த உச்ச விலையைத் தொடர்ந்து தம்புள்ள பகுதிகளில் இருந்து வாழைக்குலைகளை வியாபாரிகள் எடுத்து வந்தபோதிலும் வாழைப்பழ விற்பனையில் விலை வீழ்ச்சி பெரிதாக ஏற்படவில்லை.

தம்புள்ளவிலிருந்து எடுத்துவரும் போது வாழைக்குலைகள் சேதமடைந்து வருவதாலும் மேலும் அவற்றின் தரத்திலும் சற்றுவேறுபாடு காணப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் உள்ளூர் பழங்களை வாங்குவதிலேயே மக்கள் நாட்டங்கொண்டுள்ளனர்.

தற்போது கதலி கிலோ 100 ஆகவும் இதரை கிலோ 60 ஆகவும் கொள்வனவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-72)

# பனம்பழ 'சீசன்' ஆரம்பித்ததால் குடாநாட்டில் இலையான் தொல்லை

நவாலி,செப்.6

குடாநாட்டில் தற்போது பனம்பழ 'சீசன்' ஆரம்பித்துள்ளது. இதனால் தற்போது பல இடங்களிலும் இலையான்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவை உணவகங்கள், தேநீர்க் கடைகள், சந்தைகள்,வீடுகள் என்பவற்றில் குவியல் குவியலாக மொய்த்து வருகின்றன.

உணவுகளை மூடி வைத்தாலும் கூட அவற்றின் மீதும் இலையான்கள் மொய்த்த வண்ணமுள்ளன. இதனால் உணவுகளை உண்ணும்போது பல சிரமங்களை பொது மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இவற்றால் சுகாதாரத்திற்கும் பங்கம் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளது.

எனவே இலையான்களைக் கட்டுப்படுத்த உரிய மருந்துகள் விசுறுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (எ-100)

# கணனிமயப்பட்ட அடையாள அட்டை

தென்மராட்சி,செப்.6

யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் கணனி மயப்படுத்தப்பட்ட உத்தியோக அடையாள அட்டைகள் யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் வழங்கப்பட்டுள்ளது. (எ-207)




# வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள 1000 பாடசாலைகளுக்கு உலகவங்கி உதவி

வடக்கு,கிழக்கில் உள்ள ஆயிரம் பாடசாலைகளுக்குத் துரித அபிவிருத்தியின் கீழான 'கல்வி அபிவிருத்தி-கல்வி வெளியீடு' எனும் கருப்பொருளில் நிதி வழங்கப்பட்டு முன்னேற்றப்படவுள்ளன.

இதற்காக 6 பில்லியன் ரூபாவினை வழங்க உலகவங்கி முன்வந்துள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனா இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களை துரிதமாகச் செயற்பட்டு, நாம் கோரும் புள்ளி விவரங்களை வழங்கி உதவுமாறும் கல்வி அமைச்சர் கேட்டுள்ளார்.

ஒவ்வொரு வலயத்திலும் இருந்து 5 முதல் 6 பாடசாலைகள் தெரிவு செய்யப்படவுள்ளன என்று தெரியவருகிறது. (302)

# இந்திய அரசின் வீட்டுத்திட்டம்: வலி.கிழக்கில் 90 பயனாளிகள்

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறிய குடும்பங்களில் 90 குடும்பங்களுக்கு இந்திய அரசின் வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது.

தெரிவுசெய்யப்படவுள்ள 90 குடும்பங்களும் தமது காணிகளுக்குரிய நில அளவை வரைபடத்தை வரைந்து அதில் எங்கு வீடு கட்டப்பட உள்ளது எனவும் குறித்தல் வேண்டும் எனவும்-

காணியின் நில அளவை வரைபடம் அண்மைக்காலத்தில் வரையப்பட்டதாக இருத்தல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

இந்திய அரசின் வீட்டுத்திட்டத்துக்கான பயனாளிகளைத் தெரிவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக வலி.கிழக்குப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையரசின் உள்நாட்டு, வெளிநாட்டு கடன்தொகை மீண்டும் அதிகரிப்பு

இலங்கையரசின் கடனாளியாகிவிடும் தன்மை உச்சத்துக்குச் சென்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கி இறுதியாக வெளியிட்ட தகவல் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அந்த அறிக்கைக்கு அமைய, உள்நாட்டுக் கடன் போன்றே வெளிநாட்டுக் கடன் தொகையும், செலுத்தப்படாத அரச கடன் தொகை அளவுப் பிரமாணமும் அதிகரித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:

2009ஆம் ஆண்டின் இறுதிக் கட்டத்துக்குச் சமாந்தரமாக செலுத்தப்படாதுள்ள ஒட்டுமொத்த கடன் தொகைப் பிரமாணம் நூற்றுக்கு 4.5 வீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த மே மாதத்தில் நாட்டின் ஒட்டு மொத்த உள்நாட்டுக் கடன் தொகைப் பிரமாணம் 2521.5 பில்லியன் ரூபாவாக இருந்துள்ளது. எனினும் ஒரு மாதத்துக்குப் பின்னர் அக்கடன் தொகை 2544.2 பில்லியன் ரூபாவாக-22.7 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

மேலும் கடந்த மே மாதத்தில் இலங்கையரசினால் செலுத்தப்படவிருந்த ஒட்டு மொத்த வெளிநாட்டுக் கடன் தொகைப் பிரமாணம் 1777.9 பில்லியன் ரூபாவாக இருந்த போதிலும் ஒரு மாத காலத்துக்குள் அக்கடன் தொகையின் அளவுப் பிரமாணம் 1803 பில்லியன் ரூபாவாக- ஏறத்தாழ 26 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் முடிவுறும்போது செலுத்தப்படாத ஒட்டுமொத்த அரச கடன் தொகையின் அளவுப் பிரமாணம் 4347 பில்லியன் ரூபாவாகும். அதற்கு முந்திய மாதத்தில் செலுத்தப்படாத ஒட்டுமொத்த அரச கடன் தொகைப் பிரமாணமாக 4293 பில்லியன் ரூபா காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய ஒருமாத காலத்துள் செலுத்தப்படாத ஒட்டுமொத்த அரச கடன் தொகையின் அளவுப் பிரமாணம் 54 பில்லியன் ரூபாவால்அதிகரித்துள்ளது-என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.


## இருமனமும் ஒரு மனமாகும் திருமண வாழ்த்து



இன்று (06.09.2010) திங்கட்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான திருமண மண்டபத்தில் திருமண விழாக் காணும் வள்ளுவர் நிறுவன இயக்குநர்

**ஜெயபாலசிங்கம்-மைதிலி [ஆசிரியை]**

தம்பதிகளை நல்லூர்க் கந்தனின் அருள் கொண்டு பதினாறு பேறுகளும் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்.

பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

வாழ்த்துவோர்:
வள்ளுவர் அக்கடமி
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(102931)

## வாழ்த்துகின்றோம்



வலிகாமம் கல்வி வலயத்தின் புகழ்பூத்த கல்விப் பணிப் பாளராகப் பணியாற்றி எமது பாடசாலையின் வளர்ச் சிக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்து தற்போது வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ள

**ப.விக்னேஸ்வரன்**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம், சித்தன்கேணி.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்.

(102933)

## Today challange is Tomorrow/ Future

நீங்கள் A/L பரீட்சை எழுதிவிட்டு எதிர் காலம் பற்றிய கனவுலகில் இருக்கிறீர்களா? உங்கள் வாழ்க்கைக் கதையை வெற்றிக் கதையாக்க ஓர் அரிய வாய்ப்பு. சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது நிறுவனத்தில் உயர்ந்த தொழிற் பயிற்சியும் கவர்ச்சிகரமான சம்பளமும் பெற ஓர் வாய்ப்பு. மேலதிக தகவல் : உதயா 0717494735, 0214915550.

## வீடு, கடை வாடகைக்குண்டு

கஸ்தூரியார் வீதியில் வீடும் கடையும், நாவலர் வீதியிலும் வீடும் கடையும் வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 222 3479
021 567 0313

## Course Details

| | |
|---|---|
| Diploma In Ms Office - 2 Months | -2500/= |
| Diploma In DTP - 2 Months | -3000/= |
| Diploma In Hardware - 2 Months | -3000/= |
| Diploma In Web Design - 3 Months | -3500/= |
| Graphic Design - 3 Months | -3000/= |
| Internet & E-mail - 1 Month | -2000/= |
| Computerized Accounting -3 Months | - 3500/= |
| Kids Programe | 1500/= |

(Net Browsing 1Hr-30/=)

162, Main Street, Jaffna.
TP: 021-222 1417
Sky Computers (Pvt) Ltd
Today You Learn Tomorrow You

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





வல்வெட்டித்துறை மீன்பிடி படகுகள் போக்குவரத்துச் செய்யும் பாதையை (வான்) தோண்டித் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் K.N.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் வடமராட்சி கரையோர இணைப்பாளர் தோழர் P.தெய்வேந்திரம் அவர்களுக்கும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு கடற்றொழிலாளர்களின் துன்ப, துயரங்களை அடும் இன்னல்கள் மத்தியிலும் தீர்த்து வைத்து கடற்றொழிலாளர்களின் வாழ்க்கையின் பயணத்தைச் செழுமைப்படுத்தித் தந்தமைக்கும் மேலும் உங்கள் பணிதொடர வேண்டும் எனவும் வாழ்த்துகின்றோம்.

வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.


## பயன்பெறுவதற்கான கிராமங்கள் தெரிவு

வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்காக உயரப்புலம், ஆனைக்கோட்டை, கூழாவடி, சாவற்கட்டு, நவாலி தெற்கு ஆகிய நான்கு கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த நான்கு கிராமங்களில் உள்ளவர்களில் படிவங்களின் அடிப்படையிலும் புள்ளியிடல் மூலமும் 137 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(எ-314-318)


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA NO-1 புரொயிலர் குஞ்சுகள் 07.09.2010 காலை 7 மணிக்கு விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

**றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை**

(102980)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி பஞ்சாட்சரம் அவர்களின் புதல்வி

**ஜனனி பஞ்சாட்சரம்**

அவர்கள் 04.09.2010 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு பாடசாலை சமுகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2153 திகதி 04-09-2010

ஆங்கில எழுத்திற்கும் E

வெற்றி எண்கள் 21 26 31 62

போனஸ் இல: 18

ஜக்பொட் பரிசு ரூ. 12,003,375/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 186840 | 20/- | 3,736,800/- |
| 2 இல | 13288 | 100/- | 1,328,800/- |
| 3 இல | 263 | 1,000/- | 263,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7479 | 40/- | 299,160/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 536 | 1,000/- | 536,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,003,375/- | - |
| 1 இல + போனஸ் இல | 8908 | 100/- | 890,800/- |
| 2 இல + போனஸ் இல | 433 | 500/- | 216,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 378 | 200/- | 75,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 13 | 1,500/- | 19,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,966,160/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 218164 | | 9,566,160/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 302284204-4-36 |
| குருணாகல் | 302280992-6-01 |
| திருகோணமலை | 302284757-6-26 |
| மட்டக்களப்பு | 302289022-0-11 |
| யாழ்ப்பாணம் | 302290853-2-19 |
| அம்பாந்தோட்டை | 302282968-7-43 |
| கொழும்பு | 302297038-6-02 |
| மொணராகலை | 302282727-6-12 |
| காலி | 302298413-9-07 |
| கேகாலை | 302296849-9-33 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 12,513,425/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2010 செப்டம்பர் 08ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7

## மரண அறிவித்தல்

*சின்னவன் சின்னத்தம்பி* (வெளிச்சம்)

(முன்னாள் கிளை முகாமையாளர், சாவகச்சேரி பனை, தென்னை வள அ.கூ.சங்கம்)



கைதடி மத்தி, வளர்மதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் சின்னத்தம்பி (வெளிச்சம்) (04.09.2010) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவன்-சீதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னவன் - வள்ளி தம்பதியரின் மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் குகந்தினி(சுவிஸ்), குகேஸ் (லண்டன்), குவிந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மங்களேஸ்வரன் (சுவிஸ்), தவராணி(லண்டன்), திஷா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபர்ணா, அவந்திகன், அகீசன், தாயகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊற்றல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வளர்மதி வீதி, கைதடி மத்தி.*

(சி-570710)

தகவல்: -குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும்

## தர்மலிங்கம் நினைவு தினத்தில் சித்தார்த்தன் வலியுறுத்து

சண்டிலிப்பாய்,செப்.6

இலங்கை இரண்டாகப் பிரிவதையோ, தனிநாடு அமைக்கப்படுவதையோ இந்தியா ஒரு போதும் அனுமதிக்கமாட்டாது. இவ்விடயத்தில் இந்தியா மிகத் தெளிவாக உள்ளது. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வைக் காண்பதே இந்திய அரசாங்கத்தின் குறிக்கோளாகும். இந்நிலையில் தமிழினத்தின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு அனைத்துத் தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமரர் வி.தர்மலிங்கத்தின் புதல்வருமான த.சித்தார்த்தன் அமரர் வி.தர்மலிங்கத்தின் 25 ஆவது நினைவு தினத்தில் கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தும் போது கூறினார்.

கடந்த 2ஆம் திகதி தாவடியில் அமைந்துள்ள அமரர் வி.தர்மலிங்கத்தின் நினைவுத் தூபிக்கு முன்பாக இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் த. சித்தார்த்தன், திருமதி சித்தார்த்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன், வவுனியா நகரசபை முன்னாள் தலைவர் லிங்கநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அமரர் வி.தர்மலிங்கத்தின் புதல்வர் சித்தார்த்தன் நினைவுத் தூபிக்கு மலர் அணிந்து அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து கட்சியின் ஆதரவாளர்கள், அபிமானிகள் பலரும் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

தர்மலிங்கத்தின் நினைவுக்குழுத் தலைவர் க.கௌரிகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில் சித்தார்த்தன் தொடர்ந்து பேசும் போது கூறியவை வருமாறு:

இந்த அரசாங்கம் அதிக வல்லமை பொருந்தியது. எனவே எக்காலத்திலும் அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராட முடியாது. ஆயுதமேந்த முற்பட்டால் தற்பொழுது மிஞ்சியிருக்கும் தமிழினமும் முற்றாக அழிந்துவிடும். தமிழினம் பாரிய இழப்புக்களைச் சந்தித்துள்ளது. வேறுபாடுகளை மறந்து அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக இணையவேண்டும்.

1948 ஆம் ஆண்டிலிருந்து பேரினவாதிகளால் எமது உரிமைகள் பறிக்கப்பட்டு வந்தன. தமிழ்த் தலைவர்கள் மத்தியில் நிலவிய ஒற்றுமையின்மையே இந்த நிலைமைக்குக் காரணமாகும். ஒரே ஒரு கட்சியாக இருந்த தமிழரசுக் கட்சி இரண்டாகப் பிரிந்து பின் மூன்றாகியது. தற்பொழுது பல்வேறு பிரிவுகளாக அது இயங்கி வருகின்றது. உரிமைகளை நாம் பெற வேண்டுமானால் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

சிங்கள இராணுவமோ, சிங்களப் பொலிஸாரோ தமிழ்த் தலைவர்களைக் கொலை செய்யவில்லை. எமது அமைப்பு உட்பட தமிழ் மக்களின் இரட்சகர் என்று விளங்கிய தமிழ் இனத்திற்கு விடுதலை பெற்றுக் கொடுப்போம் என்று ஆயுதம் ஏந்திய குழுக்களினால்தான் அரசியல் தலைவர்கள் பலரும் கொலை செய்யப்பட்டு வந்தார்கள்- என்றார்.

வவுனியா நகரசபை முன்னாள் தலைவர் லிங்கநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.(த-115)

## ரமழான் சிந்தனை

ஸகாத் வறுமை ஒழிப்பில் மிகப் பெரிய பங்கு செலுத்துவது போன்று ஸகாத்தும், பித்ராவும் அவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. எந்த நன்மையான தர்மமும் அடுத்தவர்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்கின்ற போதுதான் விளைவு மிகவும் பயனுள்ளதாக அமையும். அந்த வகையில் நோன்பு நோற்கப் பொருளாதார ரீதியாகச் சிரமப்படுகின்ற ஏழைகளின் துன்பத்தைப் போக்குகின்ற வண்ணம் ரமழான் பிறை ஆரம்பத்திலிருந்தே ஸகாத்துல் பித்ராவைக் கொடுப்பது நன்மை பயக்கும். இதனால் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான நற்செயல் புரிவதே அமலுஸ் ஸாலிஹாத் ஆக அமையும்.

எம்.ஏ.காதர்

## வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வலி.கிழக்கு ,செப்.6

வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவின் சமுர்த்தி சமூக அபிவிருத்திச் சங்கம் திறமை மிக்க 160 வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை மிக விரைவில் வழங்க உள்ளது.அண்மையில் மீளக்குடியமர்ந்த வறிய மாணவர்களும் இதில் உள்வாங்கப்பட்டு உள்ளனர்.

கடந்த காலங்களில் இத்திட்டத்தின் மூலம் உதவிபெற்ற மாணவர்கள் பலர் சிறப்பான கல்வி மட்டத்தை அடைந்து உள்ளனர்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொதுமக்களின் பிரதிநிதிகள், கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் இணைந்த குழுவே இத்திட்டத்துக்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-121)

## நகரில் நடைபாதைக் கடை அகற்றப்பட்டது!



யாழ்ப்பாணம் ,செப்.6

யாழ்.நகரப் பகுதியில் பொலிஸாரின் அறிவுறுத்தல்களையும் மீறி நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டவர்களின் கடை ஒன்று பொலிஸாரினால் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் அப்புறப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதிப் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது- குறித்த வீதியில் கடந்த சில தினங்களான நடைபாதையோரமாக பல்வகையான பொருள்களை விற்பனை செய்வதில் தென்னிலங்கை வியாபாரி ஒருவர் ஈடுபட்டு வந்தார்.

எனினும் குறித்த நடைபாதைக் கடை போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாலும், அனுமதி பெறப்படாமல் இயங்குவதாலும் குறித்த கடையை அப்புறப்படுத்துமாறு பொலிஸார் பல தடவைகள் அறிவுறுத்தியும், நடைபாதை வியாபாரம் தொடர்ந்து வந்தது.

இந்நிலையில்கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகலில் திடீரென அப்பகுதிக்கு வந்த பொலிஸார் நடைபாதைக் கடையை அகற்றியதோடு அங்கிருந்த பொருள்களையும் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். (எ-23)




# யாழ்.நகரின் பிரதான வீதிகளில் நீண்டநேரம் வாகனங்கள் நிறுத்தி வைப்பதைத் தவிர்க்கவும்

## பொதுமக்களுக்குப் பொலிஸார்அறிவுறுத்து

கொழும்புத்துறை ,செப்.6

யாழ்.நகரின் பிரதான வீதிகளில் நீண்ட நேரம் வாகனங்களை நிறுத்தி வைப்பதைத் தவிர்த்துப் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்து உதவுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விசேடமாக நல்லூர் திருவிழா இறுதி வாரத்தையொட்டி பக்தர்கள்,யாத்திரிகர்கள் வருகையும் வாகன பயன்பாட்டின் அதிகரிப்பும் மிகுதியாக காணப்படுவதால் போக்குவரத்து நெரிசல்களும், விபத்துக்கள் ஏற்படும் ஏது நிலைகளும் காணப்படுகின்றன.

எனவே வீதிகளில் தடைகளை ஏற்படுத்தும் விதமான செயற்பாடுகளை வாகன சாரதிகளும் பொதுமக்களும் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அநாவசியமான விபத்துக்களையும், உயிரிழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ள அனைவரும் வீதி ஒழுங்குகளை அனுசரித்து பயணிக்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை பெருந்திருவிழாவையொட்டி பருத்தித்துறை வீதியின் மாற்றுப் பாதையான நாவலர் வீதி மார்க்கத்தில் நாவலர் கலாசார மண்டபப்பகுதி வீதிகளில் சுற்றுலாப்பயணிகளின் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வேளைகளில் போக்குவரத்து சிக்கல்கள் அடிக்கடி ஏற்பட்டு வருவதாக பக்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்துப் பொலிஸாரும் இவ்வீதிகளில் கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இவ்வாறான சிரமங்கள் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. (6-135)

# திருவடி நிலை தமிழ் வித்தியாசாலையை பழைய இடத்தில் இயக்கக் கோரிக்கை

மூளாய் ,செப்.6

சுழிபுரம் மேற்குப் பகுதியில் உள்ள திருவடிநிலை சைவத் தமிழ் வித்தியாசாலையை மீண்டும் பழைய இடத்தில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை முன்வைக்கபட்டிருக்கின்றது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மேற்படி பாடசாலை இடம் மாற்றப்பட்டு சுழிபுரத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. இவ்விடயம் தொடர்பாக வலி. மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது விரிவாக ஆராயப்பட்டது.

மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ள இப்பாடசாலைக் கட்டடத்தைப் புனரமைப்புச் செய்து மீண்டும் பழைய இடத்தில் இப்பாடசாலையை இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலதரப்பினரும் கோரிக்கைகளை முன்வைத்தனர். (த-99)

# சங்கானை வைத்தியசாலை வீதியூடாக பஸ் சேவையை நடத்துமாறு கோரிக்கை

மூளாய் ,செப்.6

சங்கானை வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியூடாக பயணிகள் பஸ்சேவையை நடத்தும்படி கோரிக்கை முன்வைக்கப் பட்டிருக்கின்றது.

மேற்படி வைத்தியசாலைக்கு வரும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் போக்குவரத்து வசதிகள் இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனறும், எனவே நோயாளர்களின் நலன் கருதி இப்பாதையூடாகப் பஸ் சேவையைத் தினசரி நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டிருக்கின்றது.

அண்மையில் வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்ற போதே மேற்படி கோரிக்கை பொதுமக்கள் பிரதிநிதிகளால் முன்வைக்கபட்டது. (எ-99)







உலக அஞ்சல்தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், தபால்மா அதிபர் எம்.கே.பி.திஸநாயக்க, யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் வி.குமரகுரு ஆகியோர் உரையாற்றுவதை அடுத்து வரும் மூன்று படங்களிலும், நிகழ்வில் இடம் பெற்ற கலை நிகழ்வை ஐந்தாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

(படங்கள்: டிலீப், லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் உயிர்பெறும் உருத்திரபுரம்

உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால், ஏழாம் வாய்க்கால் முதலிய கிராமங்கள் மீளக் குடியேறி ஆறு மாதங்களுக்கு மேலாகின்றன. அந்தப் பகுதியில் மக்கள் நம்பிக்கையுடன் தங்கள் வாழ்க்கையைத் தொடங்கி விட்டார்கள். மனதை குளிரச் செய்யும் காட்சிகளை இதமான காற்றை வீதிக்கு அருகாக கூட வரும் ஆற்றைப் பார்க்கும் பொழுது என்ன செழிப்பான கிராமம் என்றே வியக்கத் தோன்றுகிறது. உருத்திரபுரம் நீண்ட கால விவசாயக் கிராமம். 1950களில் அந்தக் கிராமத்தில் மக்கள் குடியேறியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஆறு தலை முறைகளைக் கடந்து உருத்திரபுரம் கிராமம் வளர்ந்திருக்கிறது. அப்படிச் சொல்வதைவிட ஆறு தலைமுறைகளின் உழைப்பில் வளர்ந்த கிராமம் என்றே சொல்லலாம். இப்படி நம்பிக்கை ஊட்டும் இந்த கிராமம் வன்னிப் போரில் முக்கியமான எல்லை யாகவும் மண்மேடுகள் மிக்க தடுப்பு அரண்களாகவும் போருக்கு முகம் கொடுத்திருக்கிறது.

உருத்திரபுரம் கிராமத்திற்கு சென்ற பொழுது முதல் முதலில் அறுவடை செய்யப்பட்டு மூட்டைகளாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூடைளையும் திட்டு ஒன்றில் பரப்பி வைக்கப்பட்டிருந்த நெல்லையும்தான் பார்த்தேன். நீங்கள் அறுவடை செய்த நெல் மூட்டைகளா? என வியப்புடன் கேட்ட பொழுது ஆம் நாங்கள்தான் அறுவடை செய்தோம் என்று புன்னகையுடன் ஒரு இளம் விவசாயி குறிப்பிட்டார். உருத்திரபுரம் எட்டாம் வாய்க்காலில் உள்ள சிறிய கடைத்தொகுதிகள் உள்ள தெருவில் அவர் ஒரு கடையையும் நடத்துகிறார். எட்டாம் வாய்க்கால் சந்தை என்று சொல்லுமளவில் கடந்த காலத்தில் அந்த பிரிவில் முக்கியமான வியாபார தளமாக அந்த தெரு விளங்கியது. இப்பொழுது அங்கிருந்த பல கடைகள் வெறுமையாக சிதைந்துபோயுள்ளன. சந்தைக்கட்டிடமும் திருத்தப்பட்டும் வெறுமையாக இருக்கிறது. இன்னும் அந்தப் பகுதியில் சந்தை முதலிய வர்த்தக நடவடிக்கைகள் தொடங்கவில்லை. என்னைத் தனது சைக்கிளில் ஏற்றிச் சென்ற நண்பன் ஜோன் அந்தப் பகுதியைச் சேர்ந்தவன்.



அந்தப் பகுதியில் அநேகமாக மக்கள் குடியேறிவிட்டார்கள். ஜோனின் வீடு இந்திய மக்களால் வழங்கப்பட்ட பன்னிரண்டு தகரங்களால் வேயப்பட்டிருந்தது. வீட்டை சுற்றி மண்ணாலும் உருத்திரபுரம் பனை மட்டைகளாலும் அடைக்கப்பட்டுள்ளது. ஜோனின் தெருக்களில் உள்ள அநேகமான வீடுகள் அப்படித்தானிருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு வீட்டின் பக்கத்திலும் இடிந்த அல்லது கூரையற்ற நிரந்தர சிமெண்ட் வீடுகள் இருக்கின்றன. அங்கு பார்த்த பல கூடாரங்களின் முன்னால் பழைய வீடுகளின் சிதைவுகள் அழியாத காலத்தை நினைவுபடுத்திக் கொண்டிருந்தது. வன்னியில் உள்ள பல கிராமங்களைப்போல இந்தக் கிராமமும் தன்னை கூடாரங்களால்தான் அதிகம் அடையாளம் காட்டுகிறது.

செழித்த தென்னை மற்றும் மா மரங்களுக்கு இடையில் எறிகணையால் உயிரிழந்த மரங்களும் முகத்தை காட்டிக் கொண்டு நிற்கின்றன. எனக்கு பல ஞாபகங்களை அந்தத் தெருக்கள் கிளறிக் கொண்டிருந்தன. உருத்திரபுரம் வயல்களும் தெருக்களும் எனக்கு மிகவும் பழக்கமானவை நான் முன்னர் பார்த்த உருத்திரபுரம் இப்பொழுது நிறைய மாறிப் போயிருக்கிறது. உருத்திரபுரம் கூழாவடிக்குச் செல்லும் பொழுது அண்மையில் குடியேறி பாம்பு தீண்டியதனால் மரணித்த சிறுவனின் வெற்றுடல் வைக்கப்பட்டிருந்தது. இவ்வளவு தூரம் உன்னை பொத்திப் பொத்தி கொண்டு வந்த பிறகு பாம்பு உன்னை தின்று விட்டதே? என்ற அந்த சிறுவனது தாயின் அழுகை அந்தப்

## தீபச்செல்வன்

பகுதியை உறைய வைத்திருந்தது. என்னுடன் வந்த அந்தப் பகுதியில் இருக்கிற நண்பன் குணாவின் வீட்டின் முன்பாக யுத்தகால பெரும் பதுங்குகுழி ஒன்று சிதைவுண்ட நிலையில் ஆபத்தான குழியாக இருக்கிறது. உருத்திரபுரம் முழுவதும் விசப்பாம்புகளின் அச்சுறுத்தல் இருக்கின்றது.

உருத்திரபுரம் பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட வறுமையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் இல்லங்கள் சில முன்பு இயங்கி வந்தன. ஆரோபணம் மற்றும் காந்திநிலையம் என்பன அங்கு இயங்கிக் கொண்டிருந்தன. அந்தத் தெருவால் செல்லும் பொழுது அந்தப் பிள்ளைகளது குரல்கள் பெரியளவில் கேட்கும். அந்த இல்லத்தில் இருந்து நான் படித்திருக்கிறேன். இப்பொழுது ஆரோபணம் இல்லத்தில் பிள்ளைகளின் குரல்களைக் கேட்கவில்லை. அங்கு படித்த பல பிள்ளைகள் திக்குத் திசை தெரியாமல் பிரிந்தோடியிருக்கிறார்கள். சிலர் யுத்தத்தில் இறந்திருக்கிறார்கள். பிள்ளைகள் ஓடித்திரிந்த காந்திநிலையம் வளாகம் வெறுமையுடன் இருக்கிறது. காந்திநிலையத்தில் இருந்து எனது சகோதரன் படித்திருக்கிறான். அங்கு செல்லும் பொழுது ஆவலுடன் பார்க்கும் பிள்ளைகளின் முகங்கள் ஞாபகத்தில் நிற்கின்றன. இப்பொழுது ஜெயந்திநகரில் உள்ள குருகுலம் அமைந்திருந்த இடத்தில் காந்திநிலையம் இயங்குகிறது. போரால் வறுமையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அங்கு படிக்கிறார்கள். உருத்திரபுரம் முறிப்பில் இயங்கிய மகாதேவ ஆச்சிரமச் சிறுவர்களும் அங்கு படிக்கிறார்கள்.

உருத்திரபுரம் கூழாவடி என்ற இடத்தை நோக்கிச் சென்ற பொழுது மேலும் பல வெறுமைகளை பார்க்க நேரிட்டது. உருத்திரபுர மக்களுக்கு அது ஒரு சிறிய நகரம். சில கடைகள், மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, முடி திருத்தகங்கள், சில அலுவலகங்கள் என கூழாவடி மரத்தை சுற்றி அமைந்திருந்தன. இப்பொழுது மீண்டும் சில கடைகள் இயங்க ஆரம்பித்திருக்கின்றன. முன்னால் தெருவைக் கண்காணிக்கும் மினி காவலரண் ஒன்றும் முளைத்திருக்கிறது. உருத்திரபுரம் பிரதான வீதியால் செல்லும் பொழுது இடப்பக்கமாக செல்லும் ஒவ்வொரு துணை வீதிகளும் மிகப் பிரமாண்டமான வளர்ச்சியை பெற்றவை. அறுபதுக்கு மேற்பட்ட வருடங்களின் வளர்ச்சியையும் பழமையும் வெளிப்படுத்துமளவில் நீண்டு வளர்ந்த பனைகளும் தென்னைகளும் பரந்து கிளை விரித்திருக்கிற மாமரங்களும் நிறைந்திருக்கின்றன. போரில் இடையிடையே பலியாகிய பனைகளும் தென்னைகளும் இதர மரங்களும் முகத்தை காட்டுகின்றன.

பற்றிமா கிறிஸ்தவ ஆலயம், மாணிக்கப் பிள்ளையார் கோயில், எள்ளுக்காட்டு முருகன் கோயில், லூர்த்கெவி மாதா ஆலயம் என ஆலயங்கள் மிகுந்த உருத்திரபுரம் நெடுகவும் ஆன்மாவைப்போல நடுவில் ஆறு செல்கிறது. கிளிநொச்சி குளத்தில் இருந்து வரும் அந்த ஆறு ஒரு புறமும் முறிப்பு குளத்தின் நீர் மறுபுறமும் உருத்திரபுரம் கிராமத்தை செழிமையுடன் வளர்த்துக் கொண்டிருக்கிறது. உருத்திரபுரம் கிராமத்தின் ஜீவதொழிலாக விவசாயம் விலங்கு வளர்ப்பு முக்கியம் பெறுவதற்கு ஆன்மாவாக இந்த குளங்களின் நீரே உதவுகிறது.

கூழாவடியிலிருந்து பக்கத்தில் உள்ள சிவநகர் பாடசாலைக்குச் சென்றேன். பாடசாலைக்கு செல்லும் முன்பாக என்னுடன் பாடசாலையில் படித்த நண்பன் திருபரனின் வீடு அடையாளம் தெரியாதவாறு உருமாறியிருந்தது. சிவநகர் பாடசாலையடி கடுமையான

செல்லும் மண்மேடு சொல்லுகிறது. மண்மேடுகளோ வீடுகளை மூடியபடி வீட்டுக்கு மேலே தெரிகிறது.

இப்பொழுது சிவகர் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களும் கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் படிப்பதாக அந்தப் பாடசாலையின் அதிபர் திருமதி மீனா இதயசிவதாஸ் என்னிடம் குறிப்பிட்டார். நம்பிக்கையுடன் உருத்திரபுரம் பிரதேசத்தை சேர்ந்த பிள்ளைகளுக்கு கல்வியை கற்பிக்க வேண்டும் என்று மீளக்குடியேறியிருக்கிற அவர் பாடசாலை மாணவர்கள் கல்வியை கற்க மிகுந்த விருப்பத்துடன் இருந்த பொழுதும் அதற்கான வளங்கள் இல்லை என்கிறார். உருத்திரபுரம் மக்கள் விரைவில் மீண்டெழும் திடம் கொண்டவர்கள் என்று அவர் சொல்லுவதை நான் பல இடங்களில் பார்த்தேன். எள்ளுக்காடு போன்ற சில இடங்கள் வறுமையும் போரின் தாக்கமும் மிக்க கிராமங்கள் என்று அவர் குறிப்பிட்டார். அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பிள்ளைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதை பாடசாலையில் அவதானித்தாகவும் அதிபர் திருமதி மீனா இதயசிவதாஸ் சொல்கிறார்.

உருத்திரபுரம் பாடசாலை 1996இல் சத்ஜெய யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து மணியங்குளத்தில் இங்கியது. அந்தப் பாடசாலை உருத்திரபுரத்திற்கு திரும்பும்வரை தரம் எட்டிலிருந்து அங்கு படித்திருந்தேன். கல்வி, விளையாட்டு என்று சாதிக்க நினைக்கும் ஒரு சூழலைத்தான் அந்தப் பாடசாலை இடம்பெயர்ந்த நிலையிலும் கொண்டிருந்தது. போரால் இடம்பெயர்ந்த பல பிள்ளைகள் அந்தப் பாடசாலையில் படித்திருக்கிறார்கள். மாணவர்களின் மனங்களை புரிந்து சரியான முறையில் கல்வியை அந்தப் பாடசாலை வழங்கியதை நான் அனுபவ பூர்வமாக உணர்ந்திருக்கிறேன். இன்று மீண்டும் சிதைவடைந்து உருக்குலைந்த நிலையில் அந்தப் பாடசாலை தனது கல்வி நடவடிக்கைகளை தொடங்கியிருக்கிறது. மின்சார வசதியற்ற

## 'மிதிவெடிகள் கவனம்' அறிவிப்புப் பலகைகள் தான் பார்க்கும் இடமெல்லாம் தொங்கிக்கொண்டிருக்கின்றன

போர் நடந்த களமுனை என்பதால் பக்கத்தில் உள்ள பல வீடுகள் சிதைந்திருந்தன. பாடசாலையின் பக்கத்தில் உள்ள முன்பள்ளிகள், அலுவலகங்கள், பொது மண்டபங்கள் எல்லாம் அழிந்த நிலையில் வீழ்ந்து கிடக்கின்றன. மிதிவெடிகள் விதைக்கப்பட்ட நிலம் என்று சொல்லுமளவில் பார்க்கும் இடமெல்லாம் 'மிதிவெடிகள் கவனம்' என்ற வார்த்தைகள் தொங்குகின்றன.

மிதிவெடி அபாயப்பலகைகள் உக்கி உடைந்து போகும் நிலையிலும் அந்தப் பகுதிகளில் மக்கள் பெரியளவில் குடியேறவில்லை. சிவநகரைச் சேர்ந்த பல குடும்பங்கள் வந்து அறிந்த தெரிந்தவர்களின் காணிகளில் கூடாரம் அமைத்திருக்கிறார்கள். அந்த தெருவின் தொடக்கத்தில் ஒரு காணியில் கூடாரத்தை நட்டு ஒரு குடும்பம் இருந்தது. அபாய முற்றத்தில் குழந்தைகள் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சிவநகரைச் சேர்ந்தவர்கள். தங்கள் காணிகளுக்கு மிதிவெடி அபாயம் காரணமாக இன்னும் குடியிருக்க அனுமதிக்காத காரணத்தினால் அந்தக் காணியில் கூடாரம் அமைத்து தங்கியிருக்கிறார்கள். அப்படி பல குடும்பங்களைப் பார்த்தேன்.

சனங்களற்ற பல காணிகளை தாண்டிச் சென்ற பொழுது ஒரு குடும்பம் ஆற்றங்கரை ஒன்றின் பக்கத்தில் தங்கள் காணியில் உள்ள தென்னைகளில் விழுந்த ஓலைகளை பின்னி அழகான வீடு ஒன்றை அமைத்துக் கொண்டிருந்தார்கள். வயதான தாய் ஓலைகளை பின்னிக் கொண்டிருக்கிறார். பழைய வீடு இடிந்தபடி அப்படியே பக்கத்தில் இருக்கிறது. குழந்தையும் தாயும் மண்ணெடுத்து வந்து வீட்டிற்கு கொட்டுகிறார்கள். அழகான மண் அடுப்பு ஒன்றை அமைத்திருக்கிற அந்த குடும்பத்தைச் சேர்ந்த மூதாட்டி இந்த நிழலில் வந்து கிடக்க எத்தனை இடர்களுக்கு முகம் கொடுத்தோம் என பெரு மூச்செறிகிறார்.

சிவநகர் பாடசாலை முற்றாக அழிந்து போயிருக்கிறது. பாடசாலை மண்டபங்களை எறிகணைகளும் துப்பாக்கிச் சன்னங்களும் துளைத்து ஓட்டையிட்டிருக்கின்றன. அந்தப் பாடசாலை அழகான ஒரு சோலையைப்போலிருந்ததை நினைத்துப் பார்த்தேன். அந்தப் பாடசாலை பற்றிய ஆவணப்படம் ஒன்றை எடுப்பதற்காக அந்தப்பாடசாலைக்கு யுத்தம் நடைபெற முன்னர் போயிருந்தேன். பிள்ளைகள் படிப்பதற்கு இயல்பான அழகான சூழல் தேவை என்று குறிப்பிட்ட அன்றைய அதிபர் திரு. மனோகரன் பாடசாலையை பிள்ளைகளுக்குரிய பாடசாலையாக மாற்றுவதற்காக கடுமையாக உழைத்தார். நகரத்திற்கு மிகவும் தூரத்தில் உள்ள அந்தக் கிராமத்தில் குறிப்பாக சிறுவர்களுக்குரிய சிறந்த பாடசாலையாக அது திகழ்ந்திருந்தது. பிள்ளைநேயப் பாடசாலை உங்களை அன்புடன் வரவேற்கிறது என்ற அந்தப் பாடசாலையின் மென்மையுடன் வரையப்பட்ட நீல நிற எழுத்துக்களை எறிகணைகளும் துப்பாக்கிச் சன்னங்களும் துளைத்திருக்கின்றன.

பாடசாலையின் பெயர்ப்பலகை வீழ்ந்து கிடக்கிறது. 'எமது நாடு தமிழீழம்' என்ற வாசகம் மற்றும் ஈழத்தின் வரைபடம்மீது வெள்ளை ஊற்றி அழிக்க முற்பட்டிருக்கிறார்கள். பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் நினைவாலயங்கள் அழிக்கப்பட்டுள்ளன. பாடசாலை மண்டபங்கள் சேதத்திற்கு உள்ளானதுடன் வெளித்துப் போய்க்கிடக்கிறது. நூல்கள் நிறைந்த அந்தப் பாடசாலை நூலகம் இப்பொழுதும் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. அரிய புத்தகங்கள் பலவற்றை அந்த நூலகத்தில் பார்த்திருந்தேன். இப்பொழுது அந்த நூலகம் சேதத்திற்கு உள்ளாகி பாழடைந்து போயிருக்கிறது.

பிள்ளைகள் விளையாடுவதற்கு அமைக்கப்பட்ட பூங்கா பேயடித்த இடத்தைப்போல பாழடைந்து அச்சமூட்டும் காடாக மாறியிருக்கிறது. மரங்கள், சுவர்கள், நிலம் எல்லாமே சிதைந்திருக்கின்றன. பேரழிவின் எச்சமாக இருக்கும் அந்தப் பாடசாலையின் பக்கத்தில் [illegible] சிவநகரில் கடுமையான சமர் நடந்தது என்பதை சிவநகர் பாடசாலையின் அருகாக பாடசாலை வீதியை ஊடறுத்துச்

நிலையில் வீடுகளில் இரவில் படிக்கும் பரீட்சையை எதிர்கொள்ளும் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு ஜெனரேட்டர் தேவைப்படுவதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். அப்படியொரு உதவி கிடைத்தால் அந்த மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்ற அது மிக உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அடுத்து உருத்திரபுரம் சிவன் ஆலயத்திற்கு சென்றேன். உருத்திரபுரீச்சரம் என்ற அந்த ஆலயம்தான் உருத்திரபுரம் என்ற பெயர் அந்தக் கிராமத்திற்கு ஏற்பட்டமைக்கு காரணம். ஈழத்து சிவன் ஆலயங்களில் ஒன்றான உருத்திரபுரீச்சரம் அமைந்திருக்கிற கிராமம் சிவனின் நகரம் என்பதால் சிவநகர் என்று அழைக்கப்படுகிறது. உருத்திரபுரம் சிவநகரில் உள்ள அந்த ஆலயம் இப்பொழுது பாழடைந்து போயிருக்கிறது. புறாக்களின் காய்ந்த எச்சங்களும் கால் நடைகள் வந்து தங்கும் இடமாகவும் கோலம் தரும் அந்த ஆலயத்தைப்போல வேறெந்த ஈழத்து சிவாலயங்களும் இருக்க முடியாது. கோயிலின் உள் வீதிகளில் பற்றைகள் அடர்ந்து வளர்ந்திருக்கின்றன. யாருமற்று வெறுமையுடன் இருக்கும் அந்த ஆலயத்தில் பசியோடு வந்த தருணத்தில் சாப்பிட்ட பொங்கல் என் ஞாபகத்திற்கு வந்தது. தொல்லியல் ரீதியான முக்கியத்துவம் மிக்க அந்த ஆலயம் ஈழத்தவர்களின் வரலாற்றில் முக்கியமான இடத்தை வகிக்கிறது.

இப்பொழுதுள்ள அந்த ஆலயத்தின் முன்பாக உள்ள திட்டு ஒன்றே முன்பு ஆலயமாக இருந்தமைக்கான



தொல்லியல் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. தொடர்ந்தும் ஆய்வுகளை செய்ய அந்தப் பகுதியில் உள்ள நாகபாம்பு விட வில்லை என்றும் அதனால் அந்த ஆய்வு தடைப்பட்டதாக சொல்லப்படுகிறது. பக்கத்தில் தாமரை மலர்கள் நிறைந்த சிவநகர் குளம் இருக்கிறது. குளத்திற்குச் செல்லும் வழியின் முன்பக்கத்தில் இராணுவ காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது அந்தக் குளத்தில் மீன் பிடிப்பவர்கள் யாரையும் காணவில்லை. மருத மரங்கள் நிறைந்த அந்தக் குளத்தங்கரை அதனை தொடர்ந்து வருகிற ஆறு மணல் வெளி எல்லாம் மனதை குளிரச் செய்யும் காட்சிகளைக் கொண்ட இடங்கள். குளத்தங்கரையில் சிலதூரத்திற்கு அப்பால் செல்ல முடியவில்லை. மக்கள் குடியேறாத அந்தப் பகுதிகள் அச்சம் தரும் வழியினைப்போல நீண்டு செல்லுகிறது.

பொறிக்கடவை ஆலயத்திற்கு சென்றேன். கோயிலின் முன்பாக சில குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அம்மாவும் அப்பாவும் அரிவு வெட்டப் போய் விட்டார்கள் என்று சொல்லும் அந்தக் குழந்தைகள் கோயிலுக்குப் பக்கத்தில் அமைத்திருக்கிற தங்கள் கூடாரத்தை காட்டினார்கள். 90 வயதான தாத்தாவும் 85 வயதான பாட்டியும் கூடாரத்தின் முன்னால் இருந்தார்கள். இனக்கலவரம் காரணமாக 1950களில் அவர்கள் அந்தப் பகுதியில் குடியேறியதாக என்னிடம் குறிப்பிட்டார்கள். சிவநகரில் பார்த்த மண் அணை பொறிக்கடவை அம்மன் ஆலயத்தின் பின் பக்கமாக (18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் மாடு வளர்ப்புக்காக ஒதுக்கப்பட்ட

# அரச மேய்ச்சல் நிலங்களில் பெரும்பான்மையினர் பயிர்ச்செய்கை

## அரியநேத்திரன் எம்.பி. அரச அதிபரிடம் முறைப்பாடு

மட்டக்களப்பு, செப். 6

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாடு வளர்ப்பதற்காக அரசினால் ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலங்களை பெரும்பான்மை இனத்தவர்கள் அத்துமீறி வயல் நிலங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் மட்டு. மாவட்ட அரச அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனால் மாடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்று 'சுடர்ஒளி'க்குத் தெரிவித்தமை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை, வவுணதீவுப் பிரதேசங்களில் மாடு வளர்ப்புக்கென அரசினால் 2 ஆயிரத்து 500 ஹெக்டர் நிலப்பரப்பு மேய்ச்சல் நிலங்களாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த நிலங்கள் தற்போது பெரும்பான்மை இன மக்களால் வயல் நிலங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின் றன. இதனால் மாடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுவரும் மக்கள் மாடுகளை வளர்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அத்துமீறிய நடவடிக்கையினால் மேய்ச்சல் நிலங்கள் பறிபோயுள்ளன. இது மாடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் மக்கள் மத்தியில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெரும்பான்மை இன மக்களின் இந்த அத்துமீறிய நடவடிக்கை தொடர்பாக மாடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர். அவர்கள் இந்நடவடிக்கைக்குக் கடும் விசனத்தை தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக நான் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருக்குத் தெரியப்படுத்தியுள்ளேன்.

மேய்ச்சல் நிலங்களை அத்துமீறிப் பயன்படுத்தும் இந்தச் செயலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நான் மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன். - இப்படி நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். (ளி)




## கல்முனை கிறிஸ்தா இல்லத்தில் புலமைப் பரிசில் வழங்கல் வைபவம்

மட்டக்களப்பு, செப்.6

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு கல்முனைப் பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் ஏற்பாடு செய்துள்ள 'சிசுதிரிய' புலமைப்பரிசில் வழங்கல் வைபவம் இன்று திங்கட் கிழமை காலை 9மணிக்கு கல்முனை கிறிஸ்தா இல்லத்தில் நடைபெறும்.

கல்முனைப் பிரதேச செயலாளர் எம்.எம். நௌபல் இதற்குத் தலைமை வகிப்பார். பிரதம அதிதியாகக் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. தௌபீக் கலந்துகொள்வார்.

சிறப்பு அதிதிகளாக மாவட்ட சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர்கிருதகே, மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஐ.அலியார் ஆகியோர் கலந்துகொள்வர். கல்முனைப் பிரதேச செயலக சமுர்த்தி மகாசங்க முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.ஆர். எம்.சாலி இத்தகவல்களை வெளியிட்டுள் ளார். (ளி)

## திருகோணமலையில் வாயுத் தகனக் கூடம்

திருகோணமலை, செப்.6

திருகோணமலை இந்து மயானத்திற்கு அருகில் 10மில்லியன் ரூபா செலவில் வாயுத் தகனக் கூடத்தை நிக்கொட் நிறுவனம் அமைத்து திருகோணமலை நகர சபையிடம் கையளித்துள்ளது.

வாயுத்தகனக் கூடத்தில் முதன்முதலாக அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற திருமதி. நாகரத்தினம் இராசம்மாவின் உடல் கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணிக்குத் தகனம் செய்யப்பட்டது.

தகனக்கிரியை நிகழ்வில் திருகோணமலை நகரசபைப் பதில் தலைவர் கே. செல்வராஜா உட்படப் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (ளி)

## குப்பைகொட்டும் இடமாக மாறும் பெரியநீலாவணை- துறைநீலாவணை வீதி

### பொதுமக்கள் கவலை தெரிவிப்பு

அம்பாறை, செப்.6

பெரியநீலாவணைச் சந்தியிலிருந்து துறைநீலாவணைக்குச் செல்லும் பிரதான வீதி குப்பைகொட்டும் இடமாக மாறிவருகிறது எனப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்குட்பட்ட துறைநீலாவணைக் கிராமத்திற்குச் செல்லும் ஒரேயொரு வீதி இதுவேயாகும்.

இந்த வீதியின் இரு மருங்கிலும் பற்றைகள் மண்டிக்கிடக்கின்றன. இதனால் அவ் விடங்களிலேயே குப்பைகள் கொட்டப்படுகின்றன. கழிவுப் பொருட்களை உண்ண கட்டாக்காலிகளும், பறவைகளும் படையெடுக்கின்றன.

எனவே, குப்பை கொட்டுவதைத் தடுப்பதற்கும், வீதியோரங்களில் மண்டிக்கிடக்கும் பற்றைகளை அழிப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் துறைநீலாவணை பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள். (ளி)

## 210 கோடி ரூபா செலவில் இரத்தினபுரியை அபிவிருத்தி செய்வதற்கு அரசு தீர்மானம்

### அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தகவல்

கொழும்பு ,செப். 6

சுமார் 210 கோடி ரூபா செலவில் இரத்தினபுரியில் நகர அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய இரத்தினபுரி புதிய நகரிலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள் ளப்படவுள்ளன என அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டி.ஜே.செனவிரட்ண தெரிவித்தார்.

50 கோடி ரூபா செலவில் இரத்தினபுரியில் ஏற்கனவே பாதை அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்ட அவர்-

அறுபது கோடி ரூபா செலவில் குடி தண்ணீர்த் திட்டமும் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.

இரத்தினபுரி நகரத்தில் நிலவும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தும் முகமாக புனித லூக்காஸ் வித்தியாலய சந்தியில் வான்பாலம் ஒன்று அமைக்கப்படவுள்ளதுடன், நகரிலுள்ள சுற்றுவட்டங்களும் அலங்கரிக்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த இரத்தினபுரி பொதுச்சந்தைக்காக புதிய கட்டடம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளது.

புதிய நகரில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பின்னர் இரத்தினபுரி நகரம் முக்கிய வர்த்தக கேந்திர நிலையமாக விளங்கும் - என்று அமைச்சர் செனவிரட்ண தெரிவித்தார். (ளி)

## மரபுரிமைக் கட்டடங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை

கண்டி, செப்.6

கண்டி மாநகரில் ராஜவீதி, டி.சொய்ஸா மாவத்தை, கொட்டுகொடல்ல வீதி, யட்டி நுவர வீதி, தலதா வீதி ஆகியவற்றிலுள்ள பழைமையான பத்துக் கட்டடங்கள் மரபுரிமைக் கோட்பாட்டின் கீழ் பாதுகாக்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.

கண்டி மாநகரம் உலக மரபுரிமை நகரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கண்டி மாநகரசபையும் , மத்திய கலாசார அறக்கட்டளை நிதியமும் இணைந்து இந்தப் பழைய கட்டடங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளன. இக் கட்டடங்களில் 'மரபுரிமை' சின்னம் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ளி)




## போக்குவரத்து விதிகளை மீறிய குற்றத்தில் ஒரேநாளில் கண்டியில் 188 சாரதிகள் கைது

கண்டி, செப்.6

கண்டி நகரில் கடந்த வியாழக்கிழமை போக் குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கைகளின் போது போக்கு வரத்து விதிமுறைகளை மீறிய குற்றத்தில் 188 வாகனச்சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி தலைமையகப் பொலிஸார் மேற்கொண்ட இந்த அதிரடிச் சோதனை நட வடிக்கையின்போது அதிகளவு மதுபோதையுடன் வாகனம் செலுத்திச் சென்ற ஐந்து சாரதிகளும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிகளில் கவனயீனமாக வாகனங்களைச் செலுத்திச் சென்றமை, வாகனங்களில் அளவுக்கதிகமான புகை வெளியேற்றம் போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ளி)

## பன்விலையில் தேயிலை ஆலை உபகரணம் தயாரிப்பு நிறுவனம்

நுவரெலியா, செப்.6

தேயிலைத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரிக்கும் - அல்லது அவற்றைப் புதுப்பிக்கும் தொழில் பயிற்சி நிலையம் ஒன்று பன்வில கல்பினில்ல தோட்டத் தொழிற்சாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச பெருந்தோட்டயாக்கம் இந்த தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளது.

இத் தொழிற்சாலையில் முதல்கட்டமாக வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகள் 25 பேருக்கு பயிற்சி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கல்பினில்ல தோட்ட முகாமையாளர் எஸ். துசித தெரிவித்தவை வருமாறு:-

தேயிலைத் தொழிற்சாலைகளில் நாளாந்தம் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் அவற்றைப் புதிதாகத் தயாரித்தல் போன்ற துறைகளில் அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

எதிர்காலத்தில் இவ்வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும்.

இது தொடர்பான பயிற்சிகளை மேலும் பலருக்கு வழங்குவதற்கு அரச பெருந்தோட்டயாக்கம் [illegible] எடுக்கும் - என கல்பினில்ல தோட்ட முகாமையாளர் எஸ். துசித தெரிவித்தார். (ளி)

## மாநகரசபை ஊழியர் மீது தாக்கு பதுளையில் மூன்றுபேர் கைது

பதுளை, செப்.6

பதுளை நகரில் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த மாநகரசபை ஊழியரைப் பொல்லால் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் பதுளைப் பொலிஸாரால் பிரபல வர்த்தக நிறுவன ஊழியர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரு தரப்பினருக்குமிடையே நீண்ட கால மாக இருந்துவந்த பகைமை முற்றி வாக்கு வாதம் ஏற்பட்ட வேளையிலேயே மேற்படி தாக்குதல்ச் சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பொல்லுத் தாக்குதலுக்கு இலக்கானவர் படுகாயமுற்ற நிலையில் பதுளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த விஜேசூரியவின் மேற்பார்வையில் பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி பண்டார ரத்நாயக்க தலைமையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 53
திகதி - 04.09.2010

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **Y** அதிர்ஷ்ட இலக்கம் **09** வெற்றி இலக்கம் **9 0 6 9 1**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | ரூ. | பரிசு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 09 | 9 | 0 | 6 | 9 | 1 | 16,868,722.00 | - |
| 1 பரிசு | | 09 | 9 | 0 | 6 | 9 | 1 | 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 9 | 0 | 6 | 9 | 1 | 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | | 0 | 6 | 9 | 1 | 10,000.00 | 25 |
| 4 பரிசு | | | | | 6 | 9 | 1 | 1,000.00 | 250 |
| 5 பரிசு | | | | | | 9 | 1 | 50.00 | 2480 |
| 6 பரிசு | | | | | | | 1 | 20.00 | 23959 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | | | | | | | |
| 7 பரிசு | | | 9 | 0 | 6 | 9 | | 1,000.00 | 25 |
| 8 பரிசு | | | 9 | 0 | 6 | | | 100.00 | 244 |
| 9 பரிசு | | | 9 | 0 | | | | 50.00 | 2519 |
| 10 பரிசு | Y | | | | | | | 20.00 | 9844 |
| 11 பரிசு | Y | 09 | | | | | | 100.00 | 1141 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,889,510.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2479662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.17,240,343.00

## மீளக்குடியேறியோர்க்கு வீடுகள்

தென்மராட்சி, செப் 6

இந்திய அரசினால் வடக்கு, கிழக்குப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் முதற்கட்டமாக 135 பேருக்கு வீடுகள் அமைப்பதற்கான பெயர்ப் பட்டியல் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளது.

கடந்த வருடம் பிரதேசத்தில் மீளக்குடியேறியோர், இத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் பதிவு செய்யும் பணிகள் பிரதேச செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (6-207)

## வீதியைத் திருத்தக் கோரிக்கை

நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ள மீசாலை வடக்கு எல்லை வீதியினை புனரமைத்துத் தருமாறு அப்பகுதி, வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளரைக் கோரியுள்ளனர்.

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் எல்லையாக உள்ள இவ்வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதாகவும் மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வீதியைத் திருத்தித் தருமாறு கோரியுள்ளனர். (6-207)

## ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்



எமது வித்தியாலயத்தின் தேவை உணர்ந்து பௌதீக, மனித வள அபிவிருத்திக்கு பெரிதும் அக்கறையுடன் செயற்பட்டு தமது சிறந்த சேவையினால் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர்

**ப.விக்னேஸ்வரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் எமது வித்தியாலய சமூகம் பெரும் உவகை அடைகிறது.

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம். (சி/570705)

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோயில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ்சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**பிள்ளையார் மெட்டல்**
இல.64, வைரவர் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.
தொ.பே: 024 222 2097
024 222 0129

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சுப்பிரமணியம் சரவணபவன்**
சிற்ப ஆசாரி 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக் குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சி.சிவானந்தம்**
கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A.09,வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726

## தவறிவிட்டது

ஞானப்பிரகாசம் அந்தோனிப் பிள்ளை, சமாதான நீதிவான், கிளிநொச்சி என்பவர் 02.09.2010 பி.ப. 4 மணிக்கு வன்னேரிக்குளத்திலிருந்து கிளிநொச்சி வரும் வழியில் (பேருந்தில்) கீழ்க்குறிப்பிடும் ஆவணங்கள் தொலைந்துவிட்டன.

தே.அ.அ. இல 351220139V , பாஸ்போட், மக்கள் வங்கி, இலங்கை வங்கிப் புத்தகங்கள், சிறுதொகை பணம் என்பன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

- பிள்ளையார் கோயில் பெட்டிக் கடை, ஏ-9 வீதி, கச்சேரி அருகாமை, கிளிநொச்சி.
- அந்தோனிப்பிள்ளை J.P ஞானராஜ் மே/பா பிரதேச சபை, கிளிநொச்சி.
- தொ.பே: 0772417066

(சி/570704)

## பண்ணை வேலைக்கு ஆள்கள் தேவை

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பண்ணை வேலையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். படத்துடன் விண்ணப்பிக்கவும்.

தகுதி : A/L அல்லது O/L

1. பண்ணை மேற்பார்வையாளர்
2. செயலாளர்
3. காசாளர்
4. வாகனச் சாரதி
5. காவலாளி

**தொடர்பு: 0778350478**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

**சபின்ஸ் ஜெயசேகரா**
C/O செல்லக்குமாரன்
நவாலி வடக்கு,
மானிப்பாய். (102979)




கொறண
சுடு நீர் சவர்
ஒரு வருட உத்தரவாதம்
ரூ-5450/-
டயிட்டஸ் ஸ்டோர்ஸ்
கோட்டை 2439422 லிபர்டி பிளாஸா


## மரண அறிவித்தல்

### திருமதி வரதலட்சுமி வைற்றஸ்



(இளைப்பாறிய தேசிய உப்புக்கூட்டுத்தாபன நிர்வாக உத்தியோகத்தர்)

அரியாலை, புறூடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் இல.198, கண்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரதலட்சுமி வைற்றஸ் நேற்றுமுன்தினம் (03.09.2010) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ரொட்ரிகஸ் மற்றும் சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகளும் வைற்றஸ் (நிறைவேற்று உதவியாளர், மாந்தை உப்புக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அருமைத்துணைவியும் சுகன்யா ஜெயராம் (ஜேர்மனி), பிரியந்தன் (டுபாய்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயராம் இராசையாவின் (ஜேர்மனி) பாசமிகு அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சிவயோகேஸ்வரன், உமா மகேஸ்வரி மற்றும் யோகானந்தன் (மகாவலி அபிவிருத்திச் சபை), கணேஷானந்தன் (லண்டன்), திருபுரச்சந்திரன் (டுபாய்), திருலோசனி, பத்மலோசனி (லண்டன்), கிருபாகரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற குமாரத்தியாளன் மற்றும் யோகாதேவி (லண்டன்), மகேந்திரராசா (லண்டன்), யமுனாதேவி (லண்டன்), ராஜலட்சுமி, கலாதேவி (டுபாய்), வசந்தகுமாரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கெவின் (ஜேர்மனி), ஹென்றி (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துபார்த்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

198, கண்டிறோட்,
யாழ்ப்பாணம்.
0729585974

தகவல்:
வைற்றஸ் (கணவர்),
பிரியந்தன் வைற்றஸ் (மகன்)

(102913)

## சிறுவன் காயம்

தென்மராட்சி, செப் 6

குரங்கிகைத் துரத்துவதற்காக எறிந்த கல் விளையாடிக் கொண்டிருந்த நான்கு வயதுச் சிறுவனின் தலையைத் தாக்கிக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த 2ஆம் திகதி தென்மராட்சி பெருங்குளம் சந்தியில் இடம்பெற்றது.

இச் சம்வத்தில் இதே இடத்தைச் சேர்ந்த யதுஷன் (வயது-4) என்ற சிறுவனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் [illegible] (எ-207)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17 - 01 - 1982

உதிர்வு 06 - 09 - 2006

**சற்குணராசா ருசந்தன்**

அடே ருசந்தா நான்காண்டு மறைந்ததடா
உனை எண்ணி இன்றும் கண்களில் நீரடா
எம் கண்களில் மட்டும்தான் மறைந்தாயடா
ஆனால் எம் இதயத்தில் மலர்ந்தாயடா
எம் இறுதி மூச்சுவரை உன் நினைவுகள் வாழும்!

[illegible] பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி.

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் அழிவுகளுக்கும் துன்பங்களுக்கும் பகிரங்கமாக மன்னிப்புக் கோருகின்றார் கே.பி.

அரசின் தடுப்புக் காவலில் இருக்கும் கே.பி. எனும் குமரன் பத்மநாதன் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் இறுதிப்பகுதி இது.

என்னால் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட NERDO நிறுவனம் தொடர்பாகச் சில விடயங்களைக் குறிப்பிடுவது பொருத்தமென நினைக்கிறேன்.

முன்னாள் புலிப்போராளிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பாக நாம் விவாதித்துக் கொண்டிருந்த போது இவர்களின் விடயங்களைக் கவனிப்பதற்கு எம்மால் ஓர் அரச சாரா நிறுவனம் உருவாக்கப்படுவதன் அவசியத்தை உணர்ந்தேன். இது அரசாங்கத்துடன் இணைந்து சுதந்திரமாகச் செயற்படுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த யோசனைக்கு அரச தரப்பிலிருந்தும் ஆதரவு கிடைத்தது. எனவே நாம் உடனடியாகவே செயற்படத் தொடங்கினோம். நிதி ஆதாரங்களே எமக்குப் பிரச்சினையாக இருந்தது. இதனால் எமது நகர்வுகளில் தாமதங்கள் ஏற்பட்டன.

இந்த வேளையில்தான் புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலர் சென்ற ஜூன் மாதம் ஒரு நீண்ட விஜயத்தை இங்கே மேற்கொண்டனர். இவர்களின் இலங்கை விஜயமானது இங்குள்ள உண்மையான நிலைவரங்களை அறிவதற்காகவே அமைந்தது. முக்கியமாக முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் ஆண்டு நிறைவு மே மாதம் பூர்த்தியாகும் வேளையில் அங்கே செல்லத் திட்டமிட்டோம். ஆனால் வெள்ளம் போன்ற சில பிரச்சினைகளால் ஜூன் மாதத்திற்கு இது ஒத்திவைக்கப்பட்டது.

முதற் கட்டமாக 20 பேரை அழைத்துச் செல்ல நாம் திட்டமிட்டோம். ஆனால் பின்னர் கொழும்பிலுள்ள அதிகாரிகள் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஒரு சிறிய தொகையினரை அழைத்துச் செல்வதே நல்லதென அபிப்பிராயம் தெரிவித்தனர். ஆகவே நாம் 12 பேராக இத்தொகையைக் குறைத்தோம். ஆனால் கடைசி நிமிடப் பிரச்சினைகளால் 9 பேரே வரமுடிந்தது.

இந்தப் புலம்பெயர்தோரின் விஜயமானது எமது திட்டங்களுக்கு ஓர் உந்து சக்தியாக விளங்கியது. இவர்களுள் ஒருவரைத் தவிர ஏனையோர் அனுபவபூர்வமாக இங்குள்ள நிலைமைகளை உணர்ந்து கொண்டனர். அனைவரும் யதார்த்தத்தை உணர்ந்து கொண்டனர். அவர்கள் எம்மால் அமைக்கப்பட்ட அரசசாரா நிறுவனமாகிய NERDO வின் அவசியத்தை விதந்துரைத்தனர். சிலர் நிதியுதவியும் வழங்கினர். ஆயினும் இது போதுமானதாக இருக்கவில்லை. அரசாங்கமும் இவர்களின் இந்த விஜயத்தினால் மகிழ்ச்சி அடைந்ததோடு NERDO செயற்பாடுகள் வெற்றிபெறுவது உண்மையெனவும் நம்பியது. நாம் NERDO நிறுவனத்தை ஜூலை 6 ஆம் திகதி பதிவு செய்து கொண்டோம். இவ்வளவு விரைவாக இவை நிறைவேறியமைக்காகப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவின் ஆதரவுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது NERDO அமைப்பானது இல.10, முதலாவது ஒழுங்கை, கதிரேசு வீதி, வைரவப் புளியங்குளம், வவுனியா என்ற விலாசத்தில் அமைந்துள்ளது. இதன் தலைவராக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரான எஸ்.தவரத்தினம் உள்ளார். நான் செயலாளராகப் பொறுப்பு வகிக்கின்றேன்.

நாம் இப்போதுதான் ஆரம்ப நிலையில் உள்ளோம். எமது வளங்கள் தற்போது ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

## புலம்பெயர் தமிழர்களும் தமிழக அரசியல்வாதிகளும் அர்த்தமற்ற பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டுமாம்

அக்கறையுள்ள மக்களிடமிருந்து நன்கொடைகளை நாம் எதிர்பார்க்கின்றோம். நிதிகள் சில சிறிது சிறிதாகக் கிடைக்க ஆரம்பித்திருக்கின்றன. வவுனியாவில் அமைந்துள்ள எமது அலுவலகம் எளிமையானது. நாங்கள் பெரிய கட்டத்தையோ அதிகளவு உத்தியோகத்தர்களையோ கொண்டிருக்க விரும்பவில்லை. இரண்டு உத்தியோகத்தர்களை மாத்திரமே எமது அலுவலகத்தில் கொண்டிருக்கின்றோம். ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இன்னொருவர் மலையகத்தைச் சேர்ந்தவர். இவர்களில் ஒருவர் அலுவலகக் கடமைகளையும் மற்றவர் வெளிக்களக் கடமைகளையும் ஆற்றி வருகின்றனர். இவர்களுக்கு வேதனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களை விட உள்ளூரில் இடம்பெயர்ந்த வன்னியைச் சேர்ந்த பெண்ணொருவரும் தட்டெழுத்தாளராகத் தொண்டு அடிப்படையில் கடமை ஆற்றுகின்றார். இவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை படியாக வழங்கப்படுகின்றது. சிலர் ஊதியம் எதுவும் பெறாமல் தொண்டர்களாகப் பகுதிநேர அடிப்படையில் கடமையாற்றுகின்றார்கள். இவர்களுள் அநேகர் எனது சொந்தக் கிராமமான மயிலிட்டியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எனக்கு நன்கு தெரிந்தவர்களாகவோ அல்லது காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகியவற்றில் என்னுடன் ஒன்றாகப் படித்தவர்களாகவோ உள்ளனர். இவர்களில் சிலர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள். மற்றும் சிலர் பாடசாலை அதிபர்களாகவோ, அரசாங்க வங்கி உத்தியோகத்தர்களாகவோ உள்ளனர். 1981 இல் நான் வெளிநாடு சென்றதன் பின்னர் இவர்களுடன் எந்தவிதத் தொடர்பும் எனக்கிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் நான் புலிகள் இயக்கத்தில் தீவிரமாக இயங்கத் தொடங்கிய பின்னர் இலங்கையிலிருந்த இவர்களுடன் இவர்களின் பாதுகாப்புக் கருதி எந்தவித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை.

இப்போது இவர்கள் ஒன்றாகக் கூடி என்னைச் சூழ்ந்திருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது செய்வதற்கு இவர்கள் முயற்சி செய்கிறார்கள். இவர்களின் தொகை தற்போது 25-30 வரையில் உள்ளது. இது எதிர்காலத்தில் அதிகரிக்குமென நான் எதிர்பார்க்கின்றேன். ஏனென்றால் நாம் திறமை வாய்ந்த தொண்டர்களையே எதிர்பார்க்கின்றோம்.

இதுவரை எமது நிறுவனம் எதனைச் சாதித்தது என்ற கேள்வி எழுதுவது இயல்பானது. எமது முதல் மாதத்திற்கான முன்னேற்றம் தொடர்பாக உண்மையாகச் சொல்லப்போனால் மிதமானது என்றுதான் சொல்ல வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சி மகா வித்தியாலயம், இராமநாதபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றிக்கு தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள்களை அச்சிடுவதற்காக தலா 15,000 ரூபா வழங்கினோம். இதைவிட வலது குறைந்த இளைஞனான கே.புவனேஸ்வரன் என்பவருக்கு அவர் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக அவரது போக்குவரத்து வசதிகளுக்காக 5,000 ரூபா வழங்கப்பட்டது.

இதைவிட ஜி.சீ.ஈ உயர்தரத்தில் கல்வி கற்கும் 358 மாணவர்களுக்கும், சாதாரண தரத்தில் கல்வி கற்கும் 119 மாணவர்களுக்கும், சில ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் 28 நாள்களுக்கு பணிஸ் மற்றும் தேநீர் வழங்கிய வகையில் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மொத்தமாகச் செலுத்தியுள்ளோம்.


சில புலம்பெயர் தமிழர்களால் நடத்தப்படும் ஊடகங்கள் இவையெல்லாம் எமக்குத் தேவையற்ற வேலைகளெனவும், இவற்றை அரசாங்கமே பார்த்துக் கொள்ளுமெனவும் கூறுவது பிழையானது. நாம் ஒன்றிணைந்து எமது மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். அரசாங்கமும் சில விடயங்களில் நிதிப் பற்றாக்குறையில் உள்ளது. அவுஸ்ரேலியாவைத் தளமாகக் கொண்ட அரசு சாராத தமிழ் நிறுவனம் ஒன்று கற்றல் உபகரணங்கள், மேலதிக ஆசிரியர்களுக்கான வேதனம் மற்றும் காகிதாதிகள் ஆகியவற்றை வழங்கியுள்ளது. ஆகவே NERDO மூலமாக நாம் தேநீரும் பணிசும் வழங்கினோம். அரசாங்கமும் அதிக உதவிகளை வழங்கி வருகின்றது. எனவே புலம்பெயர்ந்தோர் இத்தகைய முட்டாள்தனமான தாக்குதல்களை நிறுத்த வேண்டும்.

எமது NERDO நிறுவனத்தினூடாக பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் வேலை செய்து வருகின்றோம். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு நகரங்களில் இன்னும் இரண்டு அலுவலகங்களைத் திறப்பதற்கு நாம் எண்ணியுள்ளோம். இவற்றின் மூலம் மீள்குடியேறிய மக்களின் தேவைகளை எம்மால் நிறைவேற்றி வைக்கமுடியும். வவுனியாவில் மன்னார் வீதியில் 'அன்பு இல்லம்' என்ற பெயரில் ஒரு புகலிடத்தை அமைப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். யுத்தத்தின் காரணமாக அனாதைகளாக மாறியுள்ள சிறுவர்கள், தமது கை,கால்கள் அல்லது பார்வையை இழந்தவர்கள்,உதவுவதற்கு எவருமில்லாத மிகவும் வயது முதிந்தவர்கள் ஆகியோருக்கு இங்கே புகலிடம் வழங்கப்படும்.

ஏற்கனவே கொழும்பிலுள்ள ஒரு கத்தோலிக்கப் பெண் துறவி இது போன்ற ஒரு காப்பிடத்தை நிறுவி 40 பேரைப் பராமரித்து வருகின்றார். சிங்கள இனத்தைச் சேர்ந்த கத்தோலிக்கப் பெண் துறவிகள் இங்கே ஒழுங்காக விஜயம் செய்து அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றனர். நாம் இந்தப் பெண் துறவியுடன் தொடர்புகளைப் பேணி அவரது அனுபவங்களைப் பகிர்வதுடன் எமது அன்பு இல்லத்தின் வளர்ச்சிக்கும் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

அடுத்த திட்டமாக 200 ஏக்கர் நிலத்தில் ஒரு மாதிரிப் பண்ணையை அமைத்து அதில் புனர்வாழ்வுபெறும் முன்னாள் போராளிகளுக்கும், உள்ளூரில் இடம்பெயர்ந்த சிலருக்கும் நவீன முறையிலான பயிர்ச்செய்கை தொடர்பான பாடங்களைப் போதிப்பதோடு பயிற்சிகளையும் வழங்கவிருக்கின்றோம். இந்த முன்மொழிவு பாதுகாப்புச் செயலாளரின் சிந்தனையில் உருவாகியது. இதற்காக கிளிநொச்சி அல்லது வவுனியா மாவட்டதில் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்யவுள்ளோம். மற்றும் அம்புலன்ஸ் சேவையொன்றை உருவாக்குவதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம். லண்டனைச் சேர்ந்த கொடையாளர் ஒருவர் இதற்கான நிதியை வழங்க இணங்கியுள்ளார். இந்த அம்புலன்ஸ் வண்டி கிளிநொச்சியில் நிறுத்தி வைக்கப்படும்.

இதைவிட பெரிய அளவிலான திட்டங்களும் எம்மிடம் உள்ளன. யுத்தத்தின் காரணமாக வடக்கு, கிழக்கின் மீன்பிடித்துறை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை மீளமைப்பதற்காக 605 மில்லியன்



ரூபா செலவிலான கரையோர மீன்பிடி புனரமைப்புத் திட்டமொன்றை குறுகிய காலத்தில் நிறைவேற்றும் வகையில் உருவாக்கியுள்ளோம். இதன்மூலம் 3300 மீனவக் குடும்பங்களுக்கு முழுநேர தொழில்வாய்ப்பு வழங்கப்படும்.

மேலும் விவசாயம்,பாற்பண்ணை, கால்நடைத் துறைகளுக்குப் புத்துயிர் வழங்குவதற்கான யோசனைகளும் உள்ளன. அத்துடன் தொழிற்பயிற்சி நிலையங்களை நிறுவி பல்வேறுதுறைகளிலும் குறுகிய கால பயிற்சிகள் வழங்கப்பட்டு புனர்வாழ்வு பெறும் முன்னாள் புலிப் போராளிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

எமது அடுத்த திட்டமும் ஒன்றுண்டு. நாட்டின் பல்வேறு பாகங்களிலும் கலாசார நிகழ்வுகளைத் தொடராக நிகழ்த்துவதே அவாவாகும். இந்த நிகழ்வுகளில் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் புலிப்போராளிகளே பங்குபற்றுவர். மிகவும் பிரபல்யம் வாய்ந்த சிங்களத் திரைப்பட நட்சத்திரம் அனோஜா வீரசிங்க 60 புனர்வாழ்வு பெற்றுவரும் புலிப்போராளிகளுக்கு நாடகப் பட்டறையொன்றை நடத்தி வருகின்றார். அவரது அர்ப்பணிப்பு எனது மனதை மிகவும் நெகிழ வைத்துள்ளது. நாம் நன்கறிந்த பாடகரான சாந்தனும் தனது இரு மகன்மாருடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர்களையும் ஒன்றிணைத்து நிகழ்ச்சிகளை அரங்கேற்றுவதன் மூலம் சாதகமான

**தமிழில்: ராஜராஜன்**

ஒரு அபிப்பிராயத்தை முன்னாள் புலிப் போராளிகளின் மீது ஏற்படுத்துவதோடு சமாதானம், நல்லெண்ணம் ஆகிய செய்திகளையும் பரவச்செய்யலாம்.

இதற்கான வாய்ப்புக்களை அரசாங்கம் வழங்குமா என்ற வினாவும் கூடவே எழுகின்றது.

நான் முன்னரே கூறியது போன்று நாம் சுதந்திரமாக ஆனால் அரசுடன் பங்காளிகளாகவே இயங்கி வருகின்றோம். அரசாங்கத்தின் ஆதரவு அல்லது அங்கீகாரம் இல்லாமல் இலங்கையின் எந்தப் பாகத்திலும் எவராலும் செயற்பட முடியாது. வடக்கிலும் கிழக்கிலும் ஆயுதப் படைகளின் ஒத்துழைப்பை நாம் நாடி நிற்கின்றோம். அரசாங்கத்துடன் ஒரு இணக்கப்பாட்டின் அடிப்படையில் எமது சுதந்திரத்தையும் தக்கவைத்துக் கொண்டு வேலை செய்ய வேண்டுமென்பதுதான் யதார்த்தம். அரசாங்கமும் இணக்கமான முறையில் NERDO நிறுவனத்திடம் நடந்து கொள்ளுகின்றது. அரசாங்கத்தின் திட்டங்களான 'வடக்கின் வசந்தம்', 'கிழக்கின் உதயம்' ஆகியவற்றுடன் தொடர்புகளைப் பேணுவதற்கும் NERDO தீர்மானித்துள்ளது.

( 16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பிரிவுகள் ஆரம்பம் 10.09.2010

IIS CITY CAMPUS

உலகின் தலை சிறந்த தகைமைகளைப் பெற்றுக்கொள்ள குடாநாட்டில் தன்நிகரில்லா நிறுவனம்

| Courses | Duration | Awarding Body |
|---|---|---|
| **Department of Computing** | | |
| Higher National Diploma in Computing (General) | 2 Years | edexcel |
| Higher National Diploma in Computing (ICT System Support) | 2 Years | edexcel |
| Higher National Diploma in Computing (SoftwareDevelopment) | 2 Years | edexcel |
| Higher National Certificate in Computing (SoftwareDevelopment) | 1 Year | edexcel |
| Certificate in IT | 6 Months | bcs The Chartered Institute for IT |
| Diploma in IT | 6 Months | bcs The Chartered Institute for IT |
| Professsional Graduate Diploma in IT | 6 Months | bcs The Chartered Institute for IT |
| Diploma in Web Development | 1 Year | IIS CITY CAMPUS |
| **Department of Civil Engineering** | | |
| Higher National Diploma in Civil Engineering | 2 Years | edexcel |
| Higher National Diploma In Quantity Surveying | 2 Years | edexcel |
| Diploma in CAD & BS | 6 Months | IIS CITY CAMPUS |
| **Department of Business & Management** | | |
| Higher National Diploma in Business Management | 2 Years | edexcel |
| Higher National Diploma in Business (Human Resource Management) | 2 Years | edexcel |
| **PG Diploma in Marketing** | | |
| Introductory Certificate in Marketing | 3 Months | CIM The Chartered Institute of Marketing |
| Professional Certificate in Marketing | 6 Months | CIM The Chartered Institute of Marketing |
| **PG Diploma in Marketing** | | |
| Preliminary Certificate in Marketing | 3 Months | SLIM Sri Lanka Institute of Marketing |
| Certificate in Marketing | 6 Months | SLIM Sri Lanka Institute of Marketing |
| **Certified Management Accountant** | | |
| Technician Stage | 6 Months | CMA |
| Intermediate Stage | 6 Months | CMA |

## IIS CITY CAMPUS
200,SIVAN PANNAI ROAD, JAFFNA,SRI LANKA.
T.P: 021 222 8060 Fax : 021 222 6933
Web:-iis.edu.lk



## நல்லூர் மகோற்சவகால மாபெரும் மலிவு விற்பனை...

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சகல மாபிள் வகைகள், கோமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், கால்வீதி பேசன்கள் போன்றவற்றை நம்பகமான மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

**ஸ்ரார் செராமிக்ஸ்**
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0215672061, 077 7578277.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1222 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 08 36 38 52 — 03-09-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,985,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 228,557 | 20/- | 4,571,140/- |
| 2 இலக்கங்கள் | 20,985 | 40/- | 839,400/- |
| 1 இல. + லக்கினம் | 20,838 | 60/- | 1,250,280/- |
| 2 இல. + லக்கினம் | 1,913 | 200/- | 382,600/- |
| 3 இலக்கங்கள் | 566 | 1000/- | 566,000/- |
| 3 இல. + லக்கினம் | 43 | 10,000/- | 430,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,985,950/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,639,420/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 613 | | 2,105,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 273,518 | | 10,744,420/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,007,050/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 02 40 43 54

ஜக்பொட் பரிசு ரூபா. 1,600,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 610 | 500/- | 305,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,600,000/- | 1,600,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 613 | | 2,105,000/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-


LG

# கண்ணையும் மனதையும் கவரும் LG தொலைக்காட்சிப்பெட்டி



உத்தரவாதம் 5 வருடங்கள்

மொடல் - 21FU4BG

விசேட அம்சங்கள்
- 21" தட்டையான திரை
- அல்ட்ரா ஸ்லிம் உருவமைப்பு
- AV ஸ்ரீரியோ ஒலியமைப்பு - (5Wx2)
- AVL
- குழந்தைகள் கையாள இயலாத பாதுகாப்புப் பொறிமுறை
- நேரக்கணிப்பில் தானாக நின்றுவிடும் ஸ்லிப் பொறிமுறை

இலவசம்

ரூபா 33,990/- மட்டுமே

அபான்ஸ், அபான்ஸ் எலைற், JVC/Haier மற்றும் A-Z இலத்திரனியல் காட்சியறைகளில்

Dialog Airtel HSBC WESTERN UNION

அபான்ஸ்



இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.

அனுமதி இலவசம்



Organized by pico Events

## செப்டம்பர் 18–19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்

மேலும் விவரங்களுக்கு:-
அஞ்சலா – 0778036854

யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

### காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.

நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.

ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)

JEF
Jaffna Education Fair 2010

Daily Mirror pico


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பப் புதையல்

வெளி தேசத்திலிருந்து வந்தவரை ஒருவர் அன்பாகக் கூப்பிட்டு உபசரித்தார். தோடம் பழத்தை அவரிடம் கொடுத்து சாப்பிடச் சொன்ன போது அவர் அதைவாங்கிப் புரட்டிப் பார்த்தார். அவரது நாட்டில் அப்படி ஒரு பழமுமில்லை. என்ன செய்வதென தெரியாமல் கடித்துப் பார்த்தார். கசப்பாக இருந்தது. தூக்கி எறிந்தார். '' ஏன் அதை எறிந்தீர்கள்?'' என்றார் உபசரித்தவர்.

'' கசக்கிறது! அதை எப்படி சாப்பிடுவது?'' என்றார். அதை அப்படி சாப்பிடக் கூடாது. மேலுள்ள தோலை எடுத்து எறிந்துவிட்டு உள்ளே இனிப்பான பகுதி இருக்குது! '' என்று விவரம் சொன்னார் யோகி.

'' வாழ்வின் வெளிப்பக்கத்திலேயே இருந்தால் கசப்பான பிரச்சினைகளைத்தான் சந்திக்க வேண்டியிருக்கும்! உள்ளே போனால் தான் இனிப்பை உணர முடியும்! என்றார் யோகி!

நாங்கள் இரு வகையான வாழ்க்கை வாழ்கிறோம். மேலோட்டமான வாழ்வு; வெளிப்படையான வாழ்வு என்பனவே அவை. நாம் உள்பக்கம் போய் அங்கேயுள்ள ஊக்க சக்தியையும், புத்திசாலித்தனத்தையும் பொறுக்கியெடுத்து அன்றாட வாழ்வில் உபயோகிக்க வேண்டும்.

ஊக்கம், புத்திசாலித்தனம், அமைதி, சாந்தம் இவைதான் மகிழ்ச்சியான வாழ்வுக்கு அவசியம். இவையெல்லாம் எம்மிடம் உள்ளது. அதனாலேதான் சொர்க்கம் எமக்குள்ளே இருக்கிறதென்று சொல்கிறார்கள்.

புதையலை எமக்குள்ளே வைத்துக் கொண்டு அதைத் தேடி புலம்பிக் கொண்டிருப்பது வேடிக்கை. இதைக் கேட்டால் உங்களில் பலருக்குக் கோபம் கூட வரலாம்.

'' என்ன சார் இது? இன்று உபயோகமாக ஏதாவது தகவல் சொல்வீர்கள் என்று பார்த்தால் ஏதோ தத்துவம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கலாம். இதுவும் உபயோகமான விடயம்தான் நாம் தியானம் செய்யாவிட்டால்கூட பரவாயில்லை. மனதிலே அழுத்தமும் இறுக்கமும் இல்லாமல் சந்தோஷமாக இருக்கப் பழகிவிட்டால்போதும்.

ஏனெனில் மன இறுக்கத்தினால் நிறைய நோய்கள் வருகிறது என்பது ஆராய்ச்சி முடிவு. '' நான் இறுக்கம் இல்லாமல் இருப்பதற்குத்தான் பிரியப்படுகிறேன். இந்தச் சமூகம் அதற்கு இடங்கொடுக்கவில்லை. என்ன செய்வது? என்பது சிலரின் கேள்வி. இச்சமூகத்தையும் எம்மையும் சரிப்படுத்த வேண்டியது நாம்தான். ஒரு குடும்பஸ்தர் தனது மனதிலே டென்சன் இல்லாமல் இருக்கப் பழகிவிட்டார் அவர். '' நான் ஒன்றும் சூழ்நிலைத் தியானம் எல்லாம் செய்யவில்லை. இருந்தாலும் என் மனம் எப்போதும் அமைதியாகத்தான் இருக்கிறது. இருந்தும் எங்களது வீட்டில் தினமும் என் மனைவிக்கும் அம்மாவுக்குமிடையில் சண்டை நடந்து கொண்டுதானிருக்கும்'' என்றார்.

'' அது சரி ... உங்களது அம்மாவும், மனைவியும் சண்டை போடும் போது நீங்கள் எப்பக்கம் இருப்பீர்கள்?'' என்று ஒருவர் கேட்டார். அதற்கு அவர் '' அந்த நேரத்தில் நான் வீட்டுக்கு வெளியே இருப்பேன்'' என்றார்.

*நன்றி: சுகி.சிவம்.*

# அறிந்து கொள்ளுங்கள்

உலகிலேயே அதிகளவு உற்பத்தியாகும் தாதுப் பொருள்
- மைக்கா

உலகிலேயே அதிக மக்களால் சாப்பிடப்படும் பழம்
- திராட்சை

உலகிலேயே உள்ள அனைத்து மக்களும் சாப்பிடும் பொதுவான முதல் உணவு:
- ரொட்டி

உலகில் மிகப் பெரிய சிலந்திப் பூச்சிகள் உள்ள நாடு
- லியானா

உலகில் ரத்ததானத்தை முதன் முதலில் தொடக்கிய நாடு
- இங்கிலாந்து

உலகின் முதல் தொலைபேசி மையம் எங்கு எப்போது நிறுவப்பட்டது
- அமெரிக்கா

1878 உலகில் தேங்காய் எந்த நாட்டில் அதிகமாக உற்பத்தியாகிறது
-பிலிப்பைன்ஸ்

உலகிலேயே மிகப் பழமையான மருத்துவம்
- சித்த மருத்தவம்

உலகிலேயே கோழி முட்டை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு
- அமெரிக்கா

உலகிலேயே காடுகளைப் படுவேகமாக அழித்துவரும் நாடு
- இந்தோனேசியா

உலகின் மிக நீண்ட கடல் பாலம் எந்த நாட்டில் கட்டப்பட்டுள்ளது
- சீனா

உலகின் முதல் அணுசக்திக் கப்பலின் பெயர்
- லெனின் (ரஷ்யா)

உலக நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகள் தினம் முதன்முதலில் எப்போது கொண்டாடப்பட்டது
- 15.03.1983

உலகின் மிகச்சிறிய நாடு - வத்திக்கான்

உலகிலேயே மிக அதிகமான ஆண்டுகள் ஒரு நாட்டின் அதிபராக இருந்தவர்
- பிடல்காஸ்டோ

உலகிலேயே கடல் நண்டுகளுக்கான ஓட்டப்பந்தயத்தை நடத்தும் ஒரே நாடு
- இந்தோனேசியா

உலக மக்களால் விரும்பி வளர்க்கப்படும் செல்லப்பிராணி
- நாய்

ஆமையை செல்லப்பிராணியாக வளர்க்கும் நாடு
- அவுஸ்திரேலியா

சலவைத்தூளில் காணப்படும் திண்மம்
- குளோரின்

வாக்களிக்கும் உரிமையை 21 வயதிலிருந்து 18 வயதாகக் குறைத்தவர்
- ராஜீவ் காந்தி

'' தந்தையர் நாடு'' என அழைக்கப்படும் நாடு
- ஜேர்மனி

கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழிகளிலிருந்து உருவானமொழி
- ஆங்கிலம்

இந்தியாவின் முதல் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட இடம்
- கொல்கத்தா

இயற்கை வைத்தியம் என்ற நூலை எழுதிய இந்தியப் பிரதமர்
- மொரார்ஜிதேசாய்

தொகுப்பு: வாணி

# பணிவு

ஓர் ஊரில் ஹாரூன் அஸ்ரஷீத் என்றொரு மன்னர் இருந்தார். அவருக்கு இரு பிள்ளைகள். இருவரையும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டுமென ஆசைப்பட்டு அஸ்மயீ என்ற அறிஞரிடம் அனுப்பிவைத்தார். அவர்கள் இருவரும் ஆசிரியர் என்பவர் எமக்கு இரண்டாவது தந்தை என்பதை உணர்ந்து அவரிடம் மரியாதையாகவும், கண்ணியமாகவும் நடந்து கொண்டனர். ஒருநாள் அந்த மன்னர் தமது பிள்ளைகளின் படிப்பு எந்த அளவில் இருக்கின்றதென்பதை அறிய ஆசைப்பட்டு அஸ்மஜீ வீட்டுக்குப் போனார். இவர் அங்கே போன நேரத்தில் அவர் தொழுகைக்காகக் கால்களைக் கழுவிக் கொண்டிருந்தார். இளவரசர் தனது ஆசிரியரின் கால்களில் தண்ணீரை ஊற்றிக் கொண்டிருந்ததை வாசலில் நின்று ராஜா பார்த்தார். ராஜா வந்ததை அறிஞரும், இளவரசரும் கவனிக்கவில்லை! எல்லாம் முடிந்து நிமிர்ந்து பார்த்தார் அஸ்மயீ! எதிரிலே அரசர்! மனதில் அதிர்ச்சி! உடம்பில் நடுக்கம். ராஜா என்ன நினைத்தாரோ தெரியவில்லை. ராஜா உடனே திரும்பி அரண்மனைக்குப் போய்விட்டார். அடுத்தநாள் அரண்மனையிலிருந்து உடனே புறப்பட்டு வருமாறு அஸ்மயீக்கு ஒரு உத்தரவு வந்தது. அஸ்மயீ பயத்துடன் புறப்பட்டு அரண்மனைக்கு போய் அரசரின் முன்னால் நின்றார். அரசர் நிமிர்ந்து பார்த்தார். அவரது கண் சிவந்திருந்தது? முகத்தில் கோபம் தெரிந்தது. ரோம, பாரசீக, கிரேக்கப் பேரரசுகளையெல்லாம் தாக்கித்தகர்த்த மாமன்னர் அல்லவா அவர். '' ஐயா .... நேற்று என் பிள்ளை உங்கள் காலில் தண்ணீர் ஊற்றியதைப் பார்த்தேன். ஏன் அவனை உங்கள் கால்களை கழுவிவிடச் சொல்லவில்லை. தண்ணீர் ஊற்ற மட்டும்தானே சொன்னீர்கள்? கழுவிவிடும் தகுதி அவனுக்கு இன்னும் வரவில்லையா? அதைக் கேட்கத் தான் உங்களைக் கூப்பிட்டேன்! என்றார். அஸ்மயீக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. நிமிர்ந்து அரசரைப் பார்க்கிறார். உடனே அரசர் '' இனிமேல் கால்களிலே நீர் ஊற்ற மட்டும் சொல்லக்கூடாது.. கழுவிவிடும் வாய்ப்பையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்!'' என்று கேட்டுக் கொண்டார். இச்சம்பவம் எமக்குச் சொல்லித்தருகின்ற பாடம்தான் பணிவு.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோயாளர்களுக்கு கைகொடுத்துவரும் பண்ணை காசநோய் சிகிச்சை நிலையம்

1950 ஆம் ஆண்டின் பின் யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம் யாழ். நகரில் பண்ணைக் கடலை அண்டிய




மீனாட்சிபுரம் என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த சிகிச்சை நிலையம் ஒரு கிளினிக்காகவே இயங்கி வருகின்றது. யாழ். மாவட்டத்தில் முதன் முதலில் மிகப்பெரிய காசநோய்ச் சிகிச்சை நிலையம் மயிலிட்டியிலேயே அமைந்திருந்தது. இவ்வைத்தியசாலை 1990 ஆம் ஆண்டின் பின் சேதமடைந்த நிலையில் உள்ளது. தற்போது இங்கு வைத்தியர் பற்றாக் குறை நிலவுவதுடன் 7 சிற்றூழியர்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

பண்ணை மார்பு நோய்ச்சிகிச்சை நிலையம் வட மாகாணத்தில் இடம் பெற்ற யுத்தத்தினால் முற்றாக அழிவுற்றது. அதன் பின் மீனாட்சிபுரம் இராணுவக் கட்டுப்பாட்டின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தது. 2005 ஆம் ஆண்டு இராணுவக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு மீளவும் புனரமைக்கப்பட்டு 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து மார்பு நோய் சிகிச்சை நிலையமாக இயங்கி வருகின்றது. ஆனாலும் இந்தக் கிளினிக்கை அண்டிய பிரதேசத்தில் வாழும் மக்கள் தம்முடைய சகல நோய்களுக்கும் இவ் வைத்தியசாலையினையே பயன்படுத்தி வருகின்றனர்.




தற்போது பண்ணை காசநோய் வைத்திய சாலையில் 10 சிற்றூழியர்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு காசநோய் வைத்தியராக மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் யமுனானந்தா சேவையாற்றி வருகின்றார். யாழ்.மாவட்டத்தில் டாக்டர் யமுனானந்தாவே காசநோய் சிகிச்சை வழங்குபவராக உள்ளார்.

பண்ணை மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் சனிக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரையும் சேவை வழங்கி வருகின்றது. காச நோய் கிளினிக் ஜி.எப்.ஏ.ரி.எம் நிதியுதவியுடன் 33 லட்சம் செலவில் புனரமைப்பு வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது. இந்தப் புனரமைப்புத் திட்டம் சிகிச்சைபெற வரும் நோயாளர்களை சந்தோசப்படுத்த அழகு படுத்தும் நோக்கத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது. இவ் வேலைத்திட்டம் இன்னும் ஒரு மாதத்தில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பண்ணை வைத்தியசாலை புனரமைப்புடன் இணைந்து யாழ்ப்பாணப் போதானா வைத்தியசாலையில் சுவாச நோய் விடுதி அமைக்கப்பட்டு வருவதுடன் கலாசார ஆய்வுகூடமும் அமைக்கப்படும் முயற்சி நடைபெறுகின்றது.

தற்போது யாழ். பண்ணை வைத்திய சாலையில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து அதிக நோயாளர்கள் வருகைதந்து சிகிச்சை பெறுகின்றனர். தற்போது யாழ்.மாவட்டத்தில் காசநோயின் தாக்கம் அதிகரித்து வருவதாகவும் அதிகளவு இடம்பெயர் மக்களிடையே கண்காணிக்கக் கூடியதாகவும் டாக்டர் யமுனானந்தா தெரிவித்துள்ளார். காச நோயைக் கட்டுப்படுத்த மக்களும்



கைகொடுக்க வேண்டும். காசம் பரவுவது காற்றால் - பல தேசம்
எங்கும் இறக்கின்றன உயிர்களதனால்.
பேசமறந்து இன்று நாமிருந்தால்
வாசமிழந்து வாழ்வெமக்கு
கைகொடுப்பீர் கொடுப்பீர் - காசம் களையவே
வழி காட்டுவீர் காட்டிடுவீர் - உரிய சிகிச்சைக்கு
கழியும் காசமதன்
ஊழியிலேயே
அழியும்
காசமதனால்
மானிடம் வாழியவே.

தொகுப்பு - தமிழரசி
டியுலா, சோபா

# உங்கள் ஜாதகத்தில் செவ்வாய் தோஷமா? செவ்வாய் தோஷமென்றால் என்ன?

**இந்து மதத்தினர் சோதிடத்தில் கடும் நம்பிக்கை கொண்டவர்கள். ஆண்டாண்டு காலமாக இந்துக்கள் தத் தமது ஜாதகத்தின் கிரக நிலைகளையொட்டியே தத்தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டிச் செயற்பட்டு வருகின்றனர். குறிப்பாக திருமணங்களை நிச்சயம் செய்வதில் - திருமணப் பொருத்தம் பார்த்தே நிச்சயிக்கும் வழக்கம் பெரும்பாலும் கைக் கொள்ளப்படுகிறது.**

**இந்த விடயத்தில் இந்து மதத்தவர் மட்டுமல்லாது ஏனைய மதம் சார்ந்த, இனம் சார்ந்த மக்களில் பெரும் பாலானோரும் இந்நடை முறையைக் கைக்கொள்வது கண்கூடு.**

**அந்த வகையில் ஜாதகத்தில் செவ்வாய்தோஷம் என்றால் என்ன, என்பது குறித்து சோதிடர் கு.சண்முகரத்தினம் முன் வைக்கும் கருத்து இங்கு பிரசுரமாகிறது.**

உலகத்தில் தோன்றிய ஜீவராசிகளில் மானிட வர்க்கமே உயர்ந்தது என்பது வேதத்தின் துணிபு. இம்மானிட வர்க்கத்தினருக்கு அவரவர்களின் இருவினைக் கொப்ப வயதும், கண்டங்களும், இன்பதுன்பங்களும் கர்ப்போற்பத்தியிலேயே சிருஷ்டிக்கப்படுகின்றதே அன்றி வேறு எந்தக் காலத்திலும் சிருஷ்டிக்கப்படுவதில்லை. ஆதலால் அந்த கர்ப்போற்பத்தி கால நிர்ணயத்தின் ஆதார ஆதேயங்களாக விளங்கும் சந்திரன், இலக்கினம் இவைகளின் மகிமைகளை மகா ரிஷிகள் கூறியிருந்த கருத்தை சோதிட ரீதியாக நோக்கப்படுகிறது.

லக்கினம் என்பது தேகம் என்பதாகவும் (மெய் என்றும்) சந்திரன் என்பது ஜீவன் என்பதாகவும் (உயிர் என்றும்) சொல்லப்படும். எனவே மானிடர் மட்டுமல்ல சகல உடல் எடுத்த ஜீவன்களையும் ஜீவாத்மா என்றேசொல்கிறோம். அத்தகைய ஜீவாத்மாவானது பரமாத்மாவாகிய சிவனிடத்திலிருந்து தோன்றிய ஒரு தூசு போன்றதாகும். இந்த ஜீவனானது தனது நல்வினை, தீவினைக்கொப்ப உடம்பெடுத்து இப்பூமியில் அவதரித்தபோது அந்த நேரத்தில் ஒன்பது நவக் கிரகங்களும் பூமியை நோக்கிப் பார்ப்பதால் அந்த நேரத்தில் பிறவி எடுத்த சிசுவின் நேரத்தைக் கணக்கிட்டு பரம் பொருளாகிய சிவனுடைய வலக் கண்ணிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட சூரியனுடைய நிலையை வைத்து சாதகர் பிறந்த இலக்கினத்தைக் கணக்கிட்டு சிசு பிறந்த ஜாதகத்தில் லக்கினத்தை அறிந்துகொள்ளுகிறோம். அந்நாளில் கொடுக்கப்பட்ட நட்சத்திரத்தை அடிப்படையாக வைத்து இராசியைக் கணக்கிட்டுக் கொள்கின்றோம். எனவே ஜாதகத்தில் ஜீவனாகிய சந்திரனும் உடலாகிய லக்கினமும் தெரிந்து கொள்ளக்கூடியதாகிறது. இந்த நிலைக்குப் பின்பே ஜாதகத்தில் மற்றைய ஏழு கிரகங்களும் ஜாதகர் பிறக்கும் போது எந்த நிலையிலிருந்ததோ அவற்றை லக்கினத்தை 1 ஆம் இடமாகக் கொண்டு 12 ராசிகளில் கிரகங்களை நிலைநிறுத்தி வைப்பதையே ஜாதகம் என்று கூறுகிறோம்.

இத்தகைய ஜாதக கணிப்பின் போது செவ்வாய் நிற்கும் நிலையை நோக்குமிடத்து செவ்வாயால் வரக்கூடிய நற்பலன்களை மறந்து சிலர் செவ்வாய் தோஷமென்று கூறிக் கொண்டு திருமண வாழ்க்கையை வீணாக்கிவிடுகின்றனர். செவ்வாய்க்கிரகமே அதிகாரம், பூமி, வாகன சுகம், ஆளுமைத்தன்மை, கடல்கடந்த நாட்டுச் சீவியம் மற்றும் பொன், பொருள் தரக்கூடிய கிரகமாகும். இதையே எண்சாத்திரப்படியும் இல.9ன் அதி உச்ச நிலையில் குறிக்கப்பட்டுள்ளது.

| | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | |
|---|---|---|---|---|---|
| | உபயம் | சலம் (செவ்) | ஸ்திரம் | உபயம் | |
| கும்பம் | ஸ்திரம் | | | சலம் (செவ்) | கடகம் |
| மகம் | சலம் (செவ்) | | | ஸ்திரம் (செவ்) | சிங்கம் |
| | உபயம் | ஸ்திரம் | சலம் (செவ்) | உபயம் | |
| | தனு | விருச்சிகம் | துலாம் | கன்னி | |

எனவே ஒருவர் ஜாதகத்தில் 1,4,7,8,12 இராசிகளில் செவ்வாய் தோஷமென்றும் அதனால் குறிப்பாக திருமண வாழ்க்கை சீரழிந்துபோகுமென்றும் பரவலாக மக்களிடம் தவறான கருத்தொன்று நிலவுகிறது.

மேலே தரப்பட்ட இராசிச் சக்கரத்தில் சல ராசியில் செவ்வாய் இருப்பது தோஷம் தரமாட்டாது என்பதை யாரும் அறிந்திருப்பதில்லை. மேலும் சிங்கராசியில் செவ்வாய் இருந்தாலும் தோஷமில்லை என்பது சோதிட விதியாகும்.

## சல ராசியில் செவ்வாய் இருந்தால் தோஷமில்லையா? ஏன்?

செவ்வாய்க்கிரகம் என்பது சிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து வந்த அக்கினிப் பொறியாகும். இப்பொறியானது தேவர்களுடைய துன்பத்தை நீக்க சிவனால் நெற்றிக் கண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு சக்தியாகும்.

சிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து உருவாகிய அக்கினிப் பிளம்பே சிவனுடைய உத்தரவுப்படி வாயு தேவனாலும் அக்கினி தேவனாலும் கங்கையில் போடப்பட்டு பின் இமயமலைச் சாரலிலுள்ள சரவணப் பொய்கையில் வெப்பம் தணிந்து ஆறு திருமுருகனாக அருவமும், உருவமுமாய் அனாதியாய் ஒன்றாய்ப் பலவாய் பரப்பிரமாய் நின்ற சோதிப் பிழம்பே திருமேனியாக கருணை வெள்ளம் கொண்டு ஆறு திருமுருகன் உதித்தான் உலகம் உய்யும் வண்ணம். எனவே சல ராசி என்பது வெப்பத்தைத் தணிக்கும் ஏதுக்கள் அடங்கிய கிரக மண்டலமாகும். அந்த சல ராசியான மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய இராசிகளில் செவ்வாய் இருப்பில் வெப்பம் தணிந்து தோஷம் தராத பலனையே செய்யும்

மேலும் சிவனுடைய வீட்டுக்கு அதிபதியான சூரியனுடைய சொந்த வீடான சிங்கராசியில் (தகப்பனுடைய வீட்டில் மகன் இருப்பது) செவ்வாய் இருப்பதும் தோஷமில்லை.

ஆனாலும் செவ்வாய் சல ராசியில் இருந்தாலும் சேர்க்கைக் கிரகங்களாக சூரியன், சனி, ராகு, கேது இப்படி ஏதாவது கிரகம் செவ்வாயுடன் சேர்ந்திருந்தாலும், நோக்கினாலும் தோஷத்தைத் தரும்.

மேலும் செவ்வாய் 7 இல் இருப்பது களஸ்திரஸ் தானத்தில் இருப்பதாகும். களஸ்திரம் என்பது கணவன், மனைவி என்பவர்களது நிலையைக் குறிக்குமிடம். அப்படியாயின் 7 ஆம் வீட்டிற்கு அதிபதி யாரென்று அறிந்து அந்த அதிபதி எந்த ராசியில் யாருடன் சேர்ந்திருக்கிறான் என்பதை அறிந்தே கணவன், மனைவி நிலை அறிய வேண்டும். 7 இல் செவ்வாய் நிற்பது பயங்கரமான நிலை என்று கருதி திருமணங்களே தடைப்படுகின்றதை அறியக்கூடியதாக இருக்கின்றதைக் கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

மேலும் 8 இல் செவ்வாய் இருப்பது ஆணுக்காக இருந்தாலும் அல்லது பெண்ணுக்காக இருந்தாலும் 8 ஆம் இடம் மாங்கலிய ஸ்தானமாகும். மாங்கலிய ஸ்தானம் சல ராசியில் அமைந்து அதில் செவ்வாயிலிருந்தாலும் தோஷமில்லை. 8இல் செவ்வாயிலிருந்தாலும் பார்க்கும் கிரகம், சேர்ந்த கிரம் ஆகிய நிலை அறிவதுடன் 8 அதிபதி யார் என்பதையும் அறிந்தபின்பே மாங்கலிய பொருத்தம் முடிவு செய்ய வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட சோதிட விதிகளைக் கவனிக்காது திருமணம் செய்தாலும் செய்ய இருந்தாலும் திருமணத்தால் துன்பப்படுபவர்களாகவே அமைந்துவிட இடமுண்டு. எது எப்படியாயினும் செவ்வாயுடன் சனி, ராகு, கேது, சூரியன் ஆகிய கிரகங்களில் எந்தக் கிரகமாவது சேர்ந்தாலும் பார்த்தாலும் குரு பார்வையால் நிவர்த்தியாகாத நிலை இருப்பின் திருமணப் பொருத்தத்தில் பாவநிலை உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டும். இந்த நிலையைத் தவிர்த்த இராசி நிலைக்குரிய பொருத்தம் பார்க்கும் வாய்ப்பாட்டு முறையைக் கைக்கொண்டு திருமணம் செய்வோர் திருமணத்தால் துன்பப்படவே செய்கின்றனர்.

கு.சண்முகரத்தினம்
சோதிடர்,
பாரதி வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த 46 ஆண்டுகளாக இடையீடின்றி நடந்தேறும் நயினை - நல்லூர் திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை

**நல்லூர்க் கந்தன் ஆலயப் பெரு விழாவை யொட்டி இடம்பெறும் நயினை - நல்லூர் திருத்தலம் பஜனைப் பாதயாத்திரை வழமைபோல் இவ்வாண்டும் இடம்பெற வுள்ளது. நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்திலிருந்து புறப்பட்ட பஜனைக் கோஷ்டி, நாளை செவ்வாய்க்கிழமை காலை நல்லூர்க் கந்தன் ஆலயத்தைச் சென்றடைந்து திருத் தேரின் பின்னால் திருவீதி பஜனையில் கலந்து கொள்ள வுள்ளது. அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசத்தின் ஏற்பாட்டில், நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவையொட்டி ஆண்டுதோறும் நடைபெறுகின்ற நயினை - நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை முதன் முதலில் 1964 ஆம் ஆண்டு நல்லைக் கந்தன் தேர்த்திருவிழாவின் போது ஆரம்பிக்கப்பட்டது.

நயினை நாகபூஷணி அம்பாளுக்கு இந்தியாவில் இருந்து எடுத்து வரப்பட்ட கங்கா தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து அதனை ஆரம்பித்து வைத்தவர் நயினை பிரதிஸ்டா பூஷணம் சிவஸ்ரீ ஐ.கயிலாசநாதக் குருக்கள் அவர்கள்.

ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களது தலைமையில் ஆரம்பித்து நடத்தப்பட்ட மேற்படி திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை நாட்டில் யுத்தச் சூழ் நிலையிலும் தடையின்றி வருடா வருடம் நடைபெற்று வந்தது.

தெய்வீகத் திருவருளே நயினை - நல்லூர் பஜனைப் பாத யாத்திரையை வழி நடத்துகின்றது. 2006 ஆம் ஆண்டு நடந்த நிகழ்வை இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். 2006 ஆம் ஆண்டு நல்லூர்க் கந்தன் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி சில தினங்களின் பின் யாழ் குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டது. நல்லைக் கந்தன் வருடாந்த திருவிழாக்கள் ஆலய உள்வீதியிலேயே நடைபெற்றன.

நயினை - நல்லூர் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரையை எப்படி நடத்துவது என்ற கவலை எம்மை வாட்டியது. ''பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சு வமோ நாங்களடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி'' என்று சிவயோக சுவாமிகள் சொன்ன வாசகத்தை மனதில் இருத்தி அம்பாளிடமுடம் முருகனிடமும் பாரத்தைக் கொடுத்துவிட்டு அம்பாள் சன்னிதானத்தில் இருந்து வேல் எடுத்துக் கொண்டு புறப்பட்டோம்.

குறிகாட்டுவான் துறையில் கடற்படையினர் வேலை எங்கே எடுத்துச் செல்கின்றீர்கள் என்று கேட்டார்கள். நல்லூர்க் கந்தன் மஹோற்சவத்தின் போது பாதயாத்திரையாக நல்லூருக்குச் செல்லும் வழமையை விளக்கிக் கூறி வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்துக்குச் சென்று அங்கு தங்கி மறுநாள் காலை ஊரடங்கு தளர்த்தப்பட்டதும் நல்லூருக்குப் புறப்படுவோம் என்று கூறினோம். அவர்கள் அனுமதி தந்தனர்.

வேலணைத்துறை இராணுவ முகாமை நாம் அண்மித்த பொழுது பகல் ஒன்றேகால் மணி. பகல் ஒரு மணிக்கு ஊரடங்கு அமுலுக்கு வந்துவிட்டது. அந்த இராணுவமுகாமின் உயர் அதிகாரி எமது பாதயாத்திரை குறித்துத் தெரிந்து கொண்டு வேலை வணங்கி வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தில் தங்கி மறுநாள் காலையில் செல்லுமாறு அன்போடு கூறி விடை தந்தார்.

வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தில் தங்கி மறுநாள் அதிகாலை ஊரடங்கு தளர்த்தப்படுவதற்கு முன்பே புறப்பட்டு நல்லூரான் திருவீதியை அடைந்தோம் ''அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம் அடைந்தோம்'' அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம் அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு'' என்ற சிவயோக சுவாமிகள் சொன்ன மகாமந்திர வாசகங்கள் இன்றும் என்றும் வழிகாட்டி எம்மை வழிநடத்தும் என்பதுதான் உண்மை.

நயினை- நாக. கோபாலகிருஷ்ண தலைவர்
சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசம்

# வீதிகளெங்கும் மின்குமிழ்கள்; பாதுகாப்பற்ற ஆளிகளால் ஆபத்து

கோப்பாய்,செப்.6

வலி.கிழக்கு பிரதேசத்தின் பல்வேறு வீதிகள் ஒழுங்கைகள் என்பவற்றுக்கு அந் தந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் தமது செலவிலேயே பல இடங்களில் இரவு நேரத்தில் வீதிக்கு ஒளியூட்டுவதற்கான மின்குமிழ்களைப் பொருத்தியுள்ளனர்.

அந்த மின் குமிழ்களுக்கு மின்சாரத்தை இந்த மக்களில் சிலர் தமது சொந்தச் செல விலும் வேறு சிலர் மின்கம்பிகளில் இருந்து நேரடியாகப் பெற்று ஒளியூட்டி வருகின் றனர். இவ்வாறாக பொருத்தப்பட்ட மின் குமிழ் களுக்காகப் பல இடங்களில் மின் ஆளிகள் மழைக்காலத்துக்கு ஏற்ற பாதுகாப்பின்றி இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. மழைகாலங்களில் மின் கசிவு ஏற்படுமாதலால் இது விடயத்தில் சம்பந் தப்பட்ட தரப்புக்கள் அறிவுறுத்த வேண் டும் என பிரதேச ஆர்வலர்கள் கருத்துத் தெரி வித்துள்ளனர். (எ-72)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.6

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழா வையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல் லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத் தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு பொன் ஸ்ரீ வாமதேவனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

கே.குகபரன் வயலினும், எஸ்.வரதராஜ சர்மா மிருதங்கமும்,சதா வேல்மாறன் கட மும், எஸ்.செந்தூரன் முகர்சிங்கும் வாசிப் பர். (201)

* * *


நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திரு விழாக்காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் வரிசையில் இன்று பி.ப 3 மணிக்கு 'ஆறுபடையான்' என்னும் தலைப்பில் இரா.செல்வவடி வேலின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறும்.

அரியாலை சித்தி விநாயக அறநெறிப் பாடசாலை, சங்கானை மாவடி ஞானவைரவர் அற நெறிப்பாடசாலை, வட்டு சிவன் அற நெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாண வர்களின் கலைநிகழ்வு கள் இடம்பெறும். (201)

* * *

நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்தை யொட்டி நல்லூர் சைவ மகாசபை நல்லை திரு ஞானசம்பந்த குரு மூர்த்தி ஆலய மண்ட பத்தில் நடத்தும் தெய் வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா 'கிருஷ்ணன் தூது' என்னும் தலைப் பில் உரையாற்றுவார். (201)



# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

'முருகன் தேரோடு என் நெஞ்சமே நீ ஓடு,

ஆறுதல் தருகின்ற ஆறுபடை வீடுடையான்
அடியவர்களிற்கு அருள்கின்ற பெரும் அருட்சோதியவன்
இளைய தெய்வம் அவன் இனிய ஆறு முகமுடையான்,
ஆறுமுகமும் ஒரு முகமாகி, தாமரை மலரில் வந்து தரணியாள்பவன்

ஏறுமயில் ஏறிய ஈசனவனை உலகம் முழுவதும் கண்டு உவகை கொண்டவன்
உள்ளங்கள் உருகி உவகையுடன் வழிபடுவோம்
ஊனங்கள் நீக்கி உயிர்ப்புக்கள் அவன் தருவான்
பாசமாம் பற்று அறுத்து நம் பாவவினை நீக்கிடுவான்

மாசற்ற இறைவனை உள்ளம் எங்கும் கண்டிராமல்
உலகமெல்லாம் கண்டு உள்ளம் உருகிப்பாடுவோம்
பாடுகின்ற பண்பாட்டில் அவன் தேர் அசைந்து வரும்
தேர் அசைவினிலே எம் சிந்தை சீர் பெற்று அவனைப் போற்றும்

காரை எஸ்.கெங்கா.

## கற்பூர சட்டி ஏந்தி வந்தோம்

நல்லைக் குமரனே நாயகனே
நாளும் எம் குல காவலனே
காவடி தினமும் தூக்கி வந்தோம்
உன் கால்களில் வந்து நாம் விழுந்தோம்
கற்பூர சட்டி ஏந்தி வந்தோம்
எம் கைகளில் உன்னைத் தாங்கி வந்தோம்
கந்தனே கண்ணருள் செய்யாயா
வெவ்வினை தீர்த்தெமை ஆளாயா
வள்ளியின் மனமகிழ் மணவாளா
அருள் நல்லையம் பதியுறை பெருமானே

அபிராமி சோதிதாசன்
வேம்படி மகளிர் கல்லூரி.

## உன் அருளைத் தருவாயே

அன்பருளங் குடிகொண்ட முருகா!
ஆறுதல் எமக்களிப்பாய் குமரா!
இன்பமெலாந் தந்தருள்வாய் வேலவா!
ஈனமிலா வாழ்வளிப்பாய் கந்தனே!
உயர் வாழ்வு தருபவனே குமரா!
ஊராரைக் காத்திடையா வேலவா!
எம்மையெல்லாம் ஏந்திடுவாய் முருகா!
ஏற்ற மெமக் களித்திடப்பா கந்தா!
ஐயமில்லா வாழ்வளிக்கும் வேலவா!
ஒற்றுமை காத்தருள்வாய் முருகா!
ஓம் என்னும் ஓசையிலே முருகா!
உந்தன் உரு தெரியு தப்பா முருகா!
ஔவைக்கு உபதேசம் செய்திட்ட குமரா!
உன் அருளை எமக்குத் தருவாயே முருகா.

நீர்வை அன்பன்

## வணங்கிடுவோம் நல்லூரிலே

வள்ளிதெய்வ யானையுடன்
வந்து விட்டான் வேலனம்மா!
வடிவேலால் நமக்கருளைத்
தந்தருளும் பாலனம்மா!
பாலெடுத்து தேனெடுத்து
நூலெடுத்து தீபமேற்றி
மாவிளக்குச் செய்து வைத்து
வணங்கிடுவோம் நல்லூரிலே

கவிமணி கந்தமுருகேசதாசனார்

## உன்னைத் தொழுதிடுவோம்

அம்பிகையின் பாலகனே வா வா வா
ஆறுபடை வேலவனே வா வா வா
இச்சை எல்லாம் அழிப்பவனே வா வா வா
ஈசன் மைந்தன் தணிகாசலனே வா வா வா
உலகை வலம் வந்தவனே வா வா வா
ஊர் ஏத்தி இறைஞ்சுகின்றோம் வா வா வா
எண்ணமெல்லாம் நிறைந்தவனே வா வா வா
ஏழைக்கருள் புரிபவனே வா வா வா
ஐங்கரனிற்கு இளையவனே வா வா வா.
ஒற்றுமையை வளர்த்திடவே வா வா வா
ஓம் எனும் பிரணவப் பொருள் உரைத்தாய் வா வா வா
ஔவைக்கு உபதேசித்தவனே வா வா வா
நல்லூரில் உறைபவனே
நாளும் உனை தொழுதிடுவோம்

சி.சுபாங்கி
-வண்ணார்பண்ணை-

## எமக்கோர் அமைதி தந்திடு விரைவில்

மணிக்கோர் முறை உன்மணி ஒலித்திடும்
நொடிக்கோர் முறை என்மனம் நினைந்திடுமுனை
நாற்றிசைக்கோர் கோவில் உனைக் காக்கவென்று
எமக்கோர் அமைதி தந்திடு விரைவில்

எம்.சூரி
அரியாலையூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின் அழிவுகளுக்கும்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தியைப் பொறுத்தவரை எமது மக்கள் பல தசாப்தங்களாகப் பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர். இதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். வடக்கில் புகையிரதப் பாதைகள் இல்லை. எமது சமூகம் தமது கல்விப் பரம்பரை தொடர்பாக எப்போதுமே பெருமை கொள்வர். ஆனால் இன்று எமது பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மரங்களின் கீழிருந்து தமது கல்வியைத் தொடருகின்றனர். ஏராளமான பிள்ளைகள் வறுமை காரணமாகவும் அவர்களுக்குத் தேவையான சீருடைகள், காலணிகள், பாடப்புத்தகங்கள் இன்மையாலும் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. இந்த நிலைமை தொடர்பாக நாம் ஒரு கணிப்பீட்டினை மேற்கொண்டு வருகின்றோம்.

நாம் எமது செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதற்கான உதவிகளை வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள் வழங்குவார்களென நம்புகின்றேன். ஏற்கனவே தகைமை வாய்ந்த புலம்பெயர் தமிழர்கள் இங்கே வருகை தந்து தமது கல்வி மற்றும் தொழில்சார் திறமைகளை வழங்குவதற்கு இணங்கியுள்ளார்கள். ஒரு சிலர் சில விசேட திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளனர். NERDO எமது மக்களின் பங்களிப்புடன் படிப்படியாகச் சிறப்புடன் செயலாற்றுமென்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

ஊடக பலத்தைக் கொண்டிருக்கும் கூச்சலிடும் சில புலம்பெயர்ந்தோர் எனக்கும் NERDOவுக்கும் எதிராக மோசமான முறையில் பிரச்சாரங்கள் மேற்கொண்டு வருவது பிரச்சினையாக இல்லையா? என்ற கேள்வி எழுகிறது. அவர்கள் என்னை அரசாங்கத்தின் ஒரு அடிமை என்றும், NERDO சூழ்ச்சியின் மூலம் புலம்பெயர்ந்தோரிடமிருந்து பணத்தைப் பெற்று அரச திறைசேரியை நிரப்ப முயல்வதாகவும் கூறப்படுவதை நானறிவேன். இத்தகையதொரு விரோதமான சூழ்நிலையில் எமது முயற்சிகள் வெற்றிபெறுவது சாத்தியமா எனவும் கேட்கப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் இது சரியாக இருந்தாலும் இது தற்காலிகமானது என நான் நினைக்கிறேன். இவர்கள் ஒரு சிறு தொகையினர் என்பதோடு இவர்களின் பிரசாரம் பொய்யையும், தவறுகளையும் கொண்டுள்ளது. நான் சத்தியத்தில் உறுதியாக உள்ளேன்.

நாம் எமது நிறுவனத்தின் வரவு செலவு விவரங்களைப் பற்றுச்சீட்டுகளுக்கு மேலதிகமாக இணையத்தளங்களிலும் வெளியிடுவோம். எம்மிடம் உதவி பெற்றவர்கள் தமது நண்பர்களுக்கும், வெளிநாடுகளிலுள்ள தமது உறவுகளுக்கும் இங்குள்ள உண்மையான நிலைவரங்களைத் தெரிவிக்க வேண்டும். இதனால் தவறான தகவல்கள் அடிபட்டுப் போகும். புலம்பெயர்ந்தோர் இங்கு விஜயம் செய்து உண்மையான நிலைவரங்களை அறிந்து கொள்வதை நாம் ஊக்குவிப்போம். எம்முடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டால் வடக்குக் கிழக்கில் அவர்கள் பயணம் செய்வதற்கு NERDO உதவி புரியும்.

பிரபாகரனால் 1983 ஆம் ஆண்டு கடல் கடந்த செயற்பாடுகளுக்காக (ஆயுதக் கொள்வனவு) நான் நியமிக்கப்பட்டேன். நான் அப்போது ஒரு கற்றுக்குட்டி. அத்துடன் மிகவும் சாதாரண பின்னணியைக் கொண்டவன். எனது தந்தை ஒரு சாதாரண மீனவர். நான் சிறந்த பாடசாலைகளில் கல்வி கற்கவில்லை. எனது ஆங்கில அறிவு மிகவும் கீழ்நிலையில் இருந்தது. நான் ஒருபோதும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் வெளியில் பிரயாணம் மேற்கொண்டிருக்கவில்லை. அப்போது புலிகள் இயக்கம் ஆயுத வர்த்தகம் தொடர்பான எந்தவித தொடர்புகளுமின்றி பலவீனமான அமைப்பாக இருந்தது.

நான் எனது துறையை மெதுவாக ஆனால் பலமானதாக விஸ்தரித்துக் கொண்டேன். நான் ஒரு கட்டத்தில் பரந்த அளவில் ஆயுத உற்பத்தி மையங்களிலிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்து கப்பல்களில் ஏற்றி கிரமமான முறையில் வட கிழக்குக்கு அனுப்பி வைத்து புலிகள் இயக்கத்தின் பலத்தை அதிகரிக்கச் செய்தேன். நான் தொடர்ச்சியாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்து அனுப்பியமையால் புலிகள் இயக்கம் யுத்தத்தை வெற்றிகரமாகத் தொடர முடிந்தது.

முன்னர் எனக்கு வழங்கப்பட்ட கடமைகள் மரணத்தையும், அழிவுகளையும் ஏற்படுத்தின. ஆனால் தற்போது நான் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புக்கள் மூலம் கடந்த காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்புவதே எனது குறிக்கோளாகும்.

நான் தற்போது பாதுகாவலில் உள்ளதாகவும், ஒரு சுதந்திரமான மனிதனாக என்னால் உலாவர முடியாததோடு சுதந்திரமான செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் எனது வயது காரணமாகவும் நல்ல உடல் ஆரோக்கியம் இன்மையாலும் என்னால் முன்னர் போன்று சுறுசுறுப்பாகச் செயற்பட முடியுமா? என்ற கேள்வியும் எழுகின்றது. ஆனால் நான் வெற்றிபெறுவேனென உணர்கின்றேன். வேண்டிய இடங்களுக்கு நேரில் செல்ல முடியாத நிலையில் தொலைபேசி, தொலைநகல், இன்ரநெற் என்பன மூலம் காரியங்களைக் கவனிப்பது விரக்தியாகத்தான் உள்ளது. நான் உரிய இடங்களுக்கு நேரடியாகச் சென்றால் காரியங்கள் இப்போதுள்ளதை விட வேகமாக நடைபெறும் என்பது எனக்குத் தெரியும். நான் தடுப்புக் காவலில் உள்ள போதிலும் இந்த அளவுக்காவது மக்களுக்கு ஏதாவது செய்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தமை பற்றி எனக்குள் நினைத்துக் கொள்வேன்

எனது இதயத்தின் அடியிலிருந்து சில வார்த்தைகளைக் கூறுவதற்கு விரும்புகின்றேன்.

இது எனக்கு வழங்கப்பட்ட மூன்றாவது பெரிய வேலையும், வாய்ப்புமாகும் முதலாவதாக ஆயுதக் கொள்வனவிற்காக பிரபாகரனால் நியமிக்கப்பட்டேன். அதில்வெற்றியும் பெற்றேன். இரண்டாவதாக மீண்டும் இயக்கத்தில் இணைந்து யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி தலைவரையும் இயக்கத்தையும் காப்பாற்ற முனைந்தேன். இதில் எனக்குத் தோல்வியே கிடைத்தது. தற்போது இது எனக்குக் கிடைத்த மூன்றாவது பெரிய வாய்ப்பாகும். இதில் எனது குறிக்கோளும் பார்வையும் மக்களுக்கு உதவ வேண்டுமென்பதாகவே உள்ளது. ஆகவே நான் நிச்சயம் இதில் வெற்றி பெறுவேன்.

நான் என்னை விடுவிக்குமாறும், மக்களுக்கு எனது குறிக்கோளுக்கமைவாகச் சேவை செய்வதற்குக் கட்டுப்பாடுகளோ தடைகளோ விதிக்க வேண்டாமெனவும் இதுவரை யாரையும் கோரவில்லை. ஆயிரக்கணக்கான முன்னாள் புலிப்போராளிகள் விடுவிக்கப்படாத நிலையில் நான் மட்டும் ஒரு சுதந்திரமான மனிதனாக உலவுவதை நான் விரும்பவில்லை. முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டு அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின் நானும் எனது விடுதலை தொடர்பாகச் சிந்திக்கக் கூடும். மேலும் எனது விடுதலை அரசாங்கத்துக்குத் தர்மசங்கடமான ஒரு நிலையைத் தோற்றுவிக்கக் கூடும். ஏற்கனவே அரசாங்கம் குறிப்பாக பாதுகாப்புச் செயலாளர் எனது விடயம் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் பல்வேறு விமர்சனங்களுக்கும் ஆளாகிவருகிறார். நான் இதை மேலும் சிக்கலாக்க விரும்பவில்லை. பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி பாதுகாப்புச் செயலாளருடன் ஆலோசித்து பொருத்தமான நேரத்தில் புலிகள் தொடர்பான ஒரு கொள்கை முடிவினை எடுப்பார். மேலும் எனது விதி என்னவென்பதை நானறியேன்.

சிலர் அரசாங்கம் தமது தேவைகளுக்கு என்னை உபயோகித்த பின்னர் கைகழுவி விடப்போவதாகக் கூறுகிறார்கள். தர்க்க ரீதியாக இவ்வாறு கூறப்படலாம். ஆனால் இவ்விதம் எனக்கு நிகழுமென நான் நினைக்கவில்லை.

பல தமிழ் அரசியல்வாதிகள் எனது அரசியல் பிரவேசம் தொடர்பாகக் கவலையடைவதையும் நானறிவேன் இயலுமானவரை அரசியலில் நுழைவதை நான் விரும்பவில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் அரசியலைச் செய்யட்டும். எமது மக்களுக்குத் தற்போது தேவைப்படுவது அரசியல்வாதிகள் அல்ல. மனிதாபிமானம் உள்ளவர்களே.

இறுதியாக நான் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். என்னிடம் இரு செய்திகள் உள்ளன. முதலாவது செய்தி எனது தோழர்களான தமிழ் மக்களுக்கானது. யுத்தம் முடிவடைந்து விட்டது, பிரபாகரனும் சிரேஷ்ட தளபதிகளும் இப்போது இல்லை, ஈழம் என்பது தோற்றுப்போன ஒரு கொள்கை. ஆயுதப்போராட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லையென பொறுப்பற்ற முறையில் ஏமாற்றி மக்களை அவ்வாறு சிந்திக்கத் தூண்ட வேண்டாம். எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டு உடைந்துபோன எமது மக்களின் வாழ்க்கையை மீளவும் கட்டியெழுப்புவதற்கு உதவ வேண்டும்.

புலம்பெயர் தமிழர்களும் தமிழ்நாடு அரசியல்வாதிகளும் வீணான அலங்காரப் பேச்சுக்களைக் கைவிட்டு இலங்கைத் தமிழர்கள் கௌரவமாகவும், செழிப்புடனும் வாழ்வதற்கான தமது உதவிகளைப் புரியவேண்டும். நாம் வேண்டுவது இணக்கமும் ஒத்துழைப்பும் மட்டுமே எதிர்ப்புத்தன்மையல்ல.

இரண்டாவது செய்தி இலங்கையில் வசிக்கும் அனைத்துத் தோழர்களுக்கும் உரியது. தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏனைய போராளிக் குழுக்களும் எமது இழந்த உரிமைகளை மீளப்பெறுவதற்காக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தோம். தமிழ் ஈழமே இதற்கு ஒர முடிவெனவும் நினைத்தோம். இந்தப் போராட்டத்தினால் அதிக சேதங்களையும் துன்பங்களையும் இலங்கை மக்கள் சந்தித்தனர். எம்மால் அதிக அழிவுகள் சகலருக்கும் விளைவிக்கப்பட்டது. ஒரு சிரேஷ்ட முன்னாள் புலிகளின் தலைவர் என்ற முறையில் இவற்றை மன்னித்து விடுமாறு அனைத்து இலங்கை மக்களையும் கேட்டுக் கொள்ளுகின்றேன் தயவு செய்து அனைத்து இலங்கை மக்களுக்கும் ஒளிமயமானதொரு எதிர்காலத்தை உருவாக்குவதற்கு உதவி செய்யுங்கள்.


### இன்று சப்பறத் திருவிழா



"மாலைப் பொழுதினிலே மயிலேறி சப்பறத்தினில் வலம் வரும் சண்முகா"

விழா சிறப்புற வாழ்த்துவோர்..

இரத்தினம் ஒளியமைப்பாளர்

பிள்ளையார் கோயிலடி, கோப்பாய்.

### உத்தியோக பூர்வ முடிவுகள் — சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 565
திகதி 2010/09/04
சுப்பர் இலக்கம்: 24
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 28 46 50 57

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 30,038,989.60 வீகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 வீகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 வீகிதம் | 06 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 வீகிதம் | 250 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 வீகிதம் | 487 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 வீகிதம் | 11,977 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 வீகிதம் | 6,924 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 173,315 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 வீகிதம் | 27,641 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 7,780,780.00

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 30,363,656.00

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

### VISA - வீசா Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.

### මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha — 03.09.2010

அலுவலக முடிவுகள் — சீட்டிழுப்பு இல. 2287

வெற்றி எழுத்து: X — வெற்றி எண்கள்: 8 6 5 0 8 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X 8 6 5 0 8 3 | ரூபா. 23,286,923/= | - |
| 1 பரிசுகள் | 8 6 5 0 8 3 | ரூபா. 2,000,000/= | 01 |
| 2 பரிசுகள் | 6 5 0 8 3 | ரூபா. 100,000/= | 14 |
| 3 பரிசுகள் | 5 0 8 3 | ரூபா. 10,000/= | 132 |
| 4 பரிசுகள் | 0 8 3 | ரூபா. 1,000/= | 1351 |
| 5 பரிசுகள் | 8 3 | ரூபா. 100/= | 13497 |
| 6 பரிசுகள் | 3 | ரூபா. 20/= | 134560 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 8 6 5 0 8 | ரூபா. 10,000/= | 17 |
| 8 பரிசுகள் | 8 6 5 0 | ரூபா. 1,000/= | 135 |
| 9 பரிசுகள் | 8 6 5 | ரூபா. 100/= | 1341 |
| 10 பரிசுகள் | 8 6 | ரூபா. 50/= | 13514 |
| 11 பரிசுகள் | X | ரூபா. 20/= | 53706 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 12,300,820.00

தேசிய லொத்தர் சபை — 2470662, 4607000, Hotline 2433631, www.nlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இயங்காத நிலையில் வட்டக்கச்சி வைத்தியசாலை; கிளிநொச்சி செல்ல போக்குவரத்தும் சீரில்லை!

கிளிநொச்சி,செப்.6

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சியில் அமைந்துள்ள அரசினர் வைத்தியசாலையை மீள ஆரம்பிக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இடம் பெயர்விற்கு முன் மத்திய மருந்தகமாகவும் மகப் பேற்று மனையாகவும் இயங்கி வந்த இவ்வைத்தியசாலையிலேயே கிளிநொச்சி கிழக்குப் பகுதியான சிவிச் சென்றர், வட்டக்கச்சி, மாயவனூர் இராமநாதபுரம், மாவடியம்மன், கல்மடுநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பெருமளவு மக்கள் சிகிச்சை பெற்று வந்தனர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இப்பிரதேசங்களில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள போதிலும் ஐந்து மாதங்களாகியும் இன்னும் முழுமையாக இவ்வைத்தியசாலை இயங்கவில்லை.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மாலை வேளைகளில் ஒரு சில மணிநேரம் இங்கு வந்து நடமாடும் மருத்துவ சேவை போன்ற தற்காலிக ஏற்பாடு மட்டும் நடைமுறையில் உள்ளது.

ஏற்கனவே இங்கு இருந்த அம்புலன்ஸ் வண்டியும் தற்போது இல்லை. இதனால் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அண்மைக்காலமாக இப்பிரதேசத்தில் சுவாசப்பை சம்பந்தப்பட்ட நோய்களும், காய்ச்சலும் பாம்புக்கடியும் அதிகமாகவுள்ள நிலையில் இவ்வைத்தியசாலையை மீள ஆரம்பிக்காததால் மக்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கே வந்து சிகிச்சை பெறவேண்டி உள்ளது. இப்பகுதியூடான பயணிகள் போக்குவரத்து பஸ்களும் ஒழுங்கற்ற முறையில் சென்றுவருவதால் கிளிநொச்சிக்கு மக்கள் சென்று வைத்திய சேவையைப் பெறுவதிலும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பகுதியிலுள்ள வீதிகளில் மக்கள் போக்கு வரத்து செய்ய முடியாத அளவு சேதமடைந்து உள்ளது. அண்மையில் வட்டக்கச்சிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்தவர் ஒருவரும், தூக்கில் தொங் கிய பெண் ஒருவரும் உரிய நேரத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாமல் இறந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இனிவரும் மழைகாலங்களில் மேலும் நோயின் அதிகரிப்பதுடன் வீதிகளும் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு மாறும் நிலையில் விரைவாக இவ்வைத்தியசாலையை மீள ஆரம்பிக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோருகின்றனர். (405)

## எள்ளுக்காடு முருகன் ஆலய பிராயச்சித்த அபிஷேகம்

கிளிநொச்சி,செப்.6

கிளிநொச்சி மாவட்டத்தின் உருத்திரபுரத்தில் அமைந்துள்ள எள்ளுக்காடு முருகன் ஆலயத்தின் பிராயச்சித்த அபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இப்பிரதேச மக்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் இவ் ஆலயத்தில் நித்திய பூஜைகளை நடத்துவதற்காகவே பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறவுள்ளது.

24 மணி நேரம் நடைபெறவுள்ள இவ் விசேட அபிஷேக நிகழ்வில் மாணவர்கள், வர்த்தகர்கள், அரச நிறுவனம் சார்ந்தோர், பொதுமக்கள், விவசாயிகள் ஆகியோருக்கான விசேட பூஜைகளும் இடம்பெறுவதுடன் இறந்தவர்களுக்கான ஆத்ம சாந்தி பூசைகளும் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது.

(க-405)

## பச்சிலைப்பள்ளியில் 1,692 குடும்பங்கள் மீள் குடியமர்வு

கிளிநொச்சி,செப்.6

பச்சிலைப்பள்ளியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களில் 1,692 குடும்பங்களைச் சேர்ந்த 5,479 பேர் மீளக்குடியமர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பளை நகரப் பகுதியில் 191 குடும்பங்களும், புலோப்பளை கிழக்கில் 131 குடும்பங்களும், புலோப்பளையில் 237 குடும்பங்களும், முள்ளியடியில் 194 குடும்பங்களும், தம்பகாமத்தில் 365 குடும்பங்களும் தர்மங்கேணியில் 188 குடும்பங்களும் சேரன் பற்றில் 228 குடும்பங்களும் மாசாரில் 157 குடும்பங்களுமே இவ்வாறு மீள் குடியமர்ந்துள்ளன.

இவர்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கைகளில் அரச சார்பற்ற நிறுவனங்களும் மீள் குடியேற்ற அமைச்சும் இணைந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அத்துடன் குடிதண்ணீர் வசதி ஏனைய அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டு வருவதாக பளை உதவி அரசாங்க அதிபர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார். (க-6-313-315)

## மன்னாரில் லைத்துல் நிகழ்வுகள்

மன்னார்,செப்.6

'புனித லைத்துல் கத்ர்' இரவுக்கான விசேட ஏற்பாடுகளில் மன்னார் முஸ்லிம்கள் ஈடுபட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை இரவு முழுவதும் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இதற்காக முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளிலுள்ள ஜூம்மாப்பள்ளிகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விண்ணுலகம் சென்று மீண்ட இத்தினத்தை உலக முஸ்லிம்கள் அனைவரும் விழித்திருந்து நினைவு கூரவிருக்கின்றனர்.

மன்னாரில் மீள் குடியேறியுள்ள சுமார் 20 முஸ்லிம் கிராமங்களிலுள்ள பள்ளிவாசல்களிலும் இந்த நிகழ்வுகள் நடந்தேற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(க-80)

## வலைப்பாடு றோ.த.க. பாடசாலையின் தேவைகளை நிறைவேற்ற நாமல் உறுதி

கிளிநொச்சி,செப்.6

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிக் கோட்டத்தில் அமைந்துள்ள வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றித் தருவதாக ஜனாதிபதியின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

அண்மையில் நாமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளைச் சென்று பார்வையிட்ட போது வலைப்பாடு றோ.க.த.க.பாடசாலைக்கு வருகை தந்த அவர் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கும் இப்பாடசாலையின் தேவைகளை பூர்த்தி செய்து தருவதாகத் தெரிவித்தார்.

இக்குழுவினருடன் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, பங்குத் தந்தை சில்வேஸ்ரர் ஆகியோர் உட்பட கல்வித்துறைசார் அதிகாரிகளும் வருகை தந்திருந்தனர்.

முன்னதாக நாமல் ராஜபக்ஷ குழுவினரை பாடசாலையின் உபஅதிபர் திருமதி மே.றொபேட், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

பின்னர் இடம் பெற்ற நிகழ்வில் உப அதிபர் பாடசாலையின் தேவைகள் தற்போதுள்ள நிலைமைகள் தொடர்பாக எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து சிறப்புரையாற்றிய நாமல் ராஜபக்ஷ இப்பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றித் தருவதாகக் கூறினார். தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் இவர்களது வருகையின் ஞாபகார்த்தமாக மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. மாணவர்களுக்கு நாமல் ராஜபக்ஷவால் அப்பியாசக்கொப்பிகளும் வழங்கப்பட்டன. (க-405)

## பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை எல்லைக்குள் அனுமதி பெற்றுக் கட்டடங்களை அமைக்கவும்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் அறிவுறுத்து

கிளிநொச்சி,செப்.6

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட மீளக்குடியமர்ந்த மக்கள் கட்டடங்கள், கடைகளை அமைக்கும் போது பிரதேச சபையின் அனுமதியைப் பெற்று இருபுறமும் 24 மீற்றர்கள் வீதம் மொத்தம் 48 மீற்றர்கள் தூரம் தள்ளியதாக அமைக்குமாறு கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு சொந்தமான ஆனையிறவு தொடக்கம் முகமாலை வரையிலான ஏ-9 வீதியின் புதிய அளவுப் பிரமாணத்தின் பிரகாரம் வீதியின் மத்தியில் இருந்து இருபுறமும் மொத்தமாக 48 மீற்றர்கள் தூரம் தள்ளியே கட்டடங்களை அமைத்தல் வேண்டும்.

எதிர்காலத்தில் வீதியின் அபிவிருத்தி கருதி நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள இந்த விதிகளுக்கு அமைய பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொண்ட பின்னரே மேலதிக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும் விசேட ஆணையாளருமான சி.சிவப்பிரகாசம் பிரதேச மக்களைக் கேட்டுள்ளார். (த-6-315-313)

## அரைகுறையாக இயங்கும் பளை வைத்தியசாலை மருத்துவ வசதிகளின்றி மக்கள் பெரும் துயரத்தில்

தென்மராட்சி,செப்.6

பளை வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்து நோயாளர்களுக்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்படுமா? என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

பிரதேசத்தின் ஒரு பகுதி மக்கள் மீளக் குடியமர்ந்து ஆறு மாதங்களுக்கு மேலாகியும் வைத்தியசாலையில் சேதமடைந்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு விடுதி வசதிகள் இன்னமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

யுத்தத்தின் போது வைத்தியசாலைக் கட்டடம் முழுமையாகச் சேதமடைந்து காணப்படுவதால் தற்போது ஒன்று விட்டு ஒருநாள் (திங்கள், புதன், வெள்ளி பிற்பகலில் மட்டும் வெளிநோயாளர் பிரிவு இயங்கி வருகிறது பிரதேச மக்களின் வைத்திய தேவைக்கென வசதிகள் அந்த நிலையில் உள்ள தனியார் கட்டடத்தில் தற்போது வைத்தியசாலை இயங்கி வருகின்றது. அவசர நோயாளர்கள் சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள். வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வண்டிக்கு தரிப்பிட வசதியில்லாததால் வெய்யிலிலும் மழையிலும் நின்று பழுதடைந்து திருத்த வேலைகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் உடைகள் மாற்றுவதற்கு கூட வசதிகள் செய்து தரப்படவில்லை.

மக்கள் மீளக் குடியமரும் பகுதியில் அவசியமானது மருத்துவ சேவையாகும் அதனை செயற்படுத்துவதற்கு சகல வசதிகளும் கொண்ட வைத்தியசாலை அவசியமாகும் ஆனால் கடந்த ஆறு மாதங்களாக வெளிநோயாளர் பிரிவு மட்டும் அதுவும் வாரத்தில் மூன்று தினங்கள் பிற்பகலில் இயங்குவது மக்களுக்குப் பெரும் பாதிப்பாக உள்ளது.

பளைப் பிரதேசத்தில் யுத்தத்தினால் அழிவடைந்த ஏனைய திணைக்கள அலுவலகங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்ற போதிலும் வைத்தியசாலைக் கட்டடங்களைப் புனரமைப்பதற்கு இதுவரை எவரும் முன்வராதது குறித்தும் பிரதேச மக்கள் மத்தியில் கவலையைத் தோற்றுவித்துள்ளது.

பழுதடைந்த அம்புலன்ஸ் வண்டிக்குப் பதிலாக சேவையில் ஈடுபடவென மாற்று வண்டி ஏற்பாடு செய்துள்ள சுகாதார திணைக்களத்தினர் வைத்தியசாலையில் அழிவடைந்துள்ள கட்டடங்களை புனரமைக்க மாட்டார்களா எனவும் தெரிவித்த மக்கள் இந்நிலை நீடிக்குமாயின் தற்போது வாரத்தில் மூன்று தினங்கள் நடைபெறும் வெளிநோயாளர் பிரிவும் செயலிழந்து விடும் அபாயமும் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

(க-207






மீள் குடியேற்றுவதற்கென அழைத்துச் செல்லப்பட்டு விசுவமடுவில் எதுவித வசதிகளுமற்ற நிலையில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சந்தித்துக் கலந்துரையாடுவதை முதல் படத்திலும், மக்கள் தங்கியுள்ள கூடாரங்களை அடுத்துள்ள இரு படங்களிலும், இந்த மக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீர்க் கிணறு சுகாதாரச் சீர்கேட்டுடன் இருப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (ந)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மீண்டும் உயிர்பெறும் உருத்திரபுரம் ......

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரியை நோக்கி நீண்டு செல்லுகிறது. அந்த மண் அணைக்கு அப்பால்தான் எங்கள் காணி இருக்கிறது. இன்னும் எங்களை அங்கு விடவில்லை. அதனால்தான் இங்கு இந்த தரப்பாலை கட்டிக்கொண்டு இருக்கிறோம் என அந்தப் பாட்டி சொன்னார். பழைய பொம்மை ஒன்றையும் உடைந்து சக்கரங்களற்ற சைக்கிளையும் வைத்து அந்த குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்த மண்மேட்டிற்கு பின்னால் நீவில் போன்ற உருத்திரபுரத்தை சேர்ந்த கிராமங்கள் உள்ளன. பொறிக்கடவை அம்மன் ஆலயத்தின் வளாகத்தில் ஒரு பகுதி உருத்திரபுரத்தையும் மற்றைய பகுதி குஞ்சுப்பரந்தன் பகுதியையும் சேர்ந்தது. அந்தப் பகுதி முழுக்க வயல்வெளிகள்தான் விரிந்து செல்கின்றன. உருத்திரபுரம் கூழாவடியிலிருந்து பொறிக்கடவை நோக்கி வரும் பொழுது பரந்த வயல்கள் விளை நிலங்களாக நம்பிக்கை தருகின்றன. சிறிய பாலங்களும் வாய்க்கால் கரைகளும் யுத்த கால மறைவிடங்களாக பாவிக்கப்பட்டு பதுங்கு குழிகளாகவும் மண்மூடைகள் அடுக்கப்பட்டும் கிடக்கின்றன.

சிறிய வயதில் பொறிக்கடவை அம்மன் கோயில் பற்றிய கதையை அம்மம்மா சொல்லிய ஞாபகமும் அழிந்து கொண்டு போகிறது. அந்தப் பகுதியில் உள்ள வயல்களை ஒரு யானை வந்து நாசப் படுத்துவதால் வெள்ளைக்காரர்கள் அந்த யானைக்கு பொறி வைத்தார்கள். அந்தப் பொறியில் சிக்கிய யானையை அந்த அம்பாள் மீட்டதாகவும் பக்கத்தில் உள்ள மரத்தின் கீழ் அம்பாளின் உருவம் இருந்தாகவும் அம்மம்மா சொன்னார். அதனால்தான் பொறிக்கடவை என்று அந்த ஆலயம் உள்ள இடத்தையும் பொறிக்கடவை அம்மன் என்று அந்த கடவுளையும் அழைப்பதாக அம்மம்மா சொல்லியிருந்தார். அந்த ஆலய முகப்பில் இந்தக் கதையை நினைவு கூரும் விதமான ஓவியமே வரையப்பட்டுள்ளது. பொறியில் அகப்பட்ட யானையும் மரத்தின் கீழுள்ள அம்மனும் வெள்ளைக்காரர்களும் அந்த ஓவியத்தில் வரையப்பட்டுள்ளனர்.

உருத்திரபுரத்திற்கு வடக்காக பொறிக் கடவைக்கு முன்பக்கத்தில் எள்ளுக்காடு இருக்கிறது. ஒரு சில நிரந்தர சீமெண்ட் வீடுகள் மட்டும் இருந்த அந்தக் கிராமத் தில் பழைய மண் வீடுகள் உடைந்து சரிந்திருக்கின்றன. இப்பொழுது கூடாரங்களில் மக்கள் குடியிருக்கிறார்கள். ஒரே ஒரு விரலை தவிர மிகுதி எல்லா விரல்களும் உதிர்ந்துபோன கையை தலையில் வைத்து யார் வாரது? என்று பார்க்கும் நாகலட்சுமி என்ற ஒரு தாய் தான் அந்தக் கிராமத்தில் முதலில் என்னை வரவேற்றார். வறுமை நோய் என்று சொல லுவதைப்போல வறுமை பீடித்து வாடிப் போயிருக்கும் அவர்கள் உடைந்த மண் வீட்டில் தரப்பாலை போட்டு குடியேறியிருக கிறார்கள். வாடிப்போயிருக்கும் முகங்களுடன் குழந்தைகள் வந்து ஆவலுடன் சூழ்ந்து கொண்டார்கள்.

இரண்டு கால்களையும் இழந்த கணவன் பழைய சக்கர நாற்காலியில் இருக்கிறார். இரண்டு பிள்ளைகள் வறுமை காரணமாக படிப்பை விட்டு விட்டார்கள். ஒரு மகன் அப்பாவை வண்டிலில் வைத்து தள்ளிக் கொண்டு போகிறான். அவன் படிக்கப் போறதில்லையா? என்று கேட்ட பொழுது இந்தப் பிள்ளைகளே படிக்க பெரும் பாடு படுகிறார்கள் என்று அந்தத் தாய் விரக்தியுடன் சொன்னார். ஆனால் மூன்று பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் செல்லுவது மிகப் பெரிய போராட்டமாகி விடுகிறது என்றும் அவர் சொன்னார். பிள்ளைகளை சரியாக பார்க்க வேண்டிய நிலையில் படிப்பிக்க வேண்டிய கடமை இருக்கிற நிலையில் எனது பிள்ளை என்னை தள்ளிச் செல்லும் நிலைக்கு ஆளாகிவிட்டேன் என தங்கராசா மனம் நொந்து சொன்னார்.

எள்ளுக்காட்டில் உள்ள பெரும்பாலான மக்கள் குடமுருட்டிக் கடலில் சென்று மீன் பிடித்து தங்கள் பிழைப்பை நடத்துப வர்கள். தன் பிள்ளைகள் எல்லா வற்றையும் யுத்தம் தின்று விட்டதாக சொல்லும் இன்னொரு தாயையும் அந்தப் பகுதியில் சந்தித்தேன். வளர்ந்த பிள்ளைகள், ஒருவர் தடுப்பில் மற்ற இருவர் யுத்தத்தில் காணாமல் போய் விட்டார்கள். உங்கள் பிள்ளைகள் யுத்தத்தில் இறந்ததாக யாரோ சொன்னார்களே என்ற பொழுது அப்படிச் சொல்லாதீர்கள். அவர்கள் காணாமல் போயிருக்கிறார்களே தவிர இறக்கவில்லை. அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று அவர் கண்ணீருடன் உறுதியாக சொல்கிறார். யுத்தம் கடுமையாக காயப்படுத்திய அந்தப் பகுதி மக்களில் பலர் நிரந்தரமாக வறுமையால் பாதிக்கப்பட்டவர்கள். இப்பொழுது ஒன்றுமற்றவர்கள் என்பதைப்போல மீள அந்தக் கிராமத்திற்கு வந்திருக்கிறார்கள். எள்ளுக்காட்டைப்போல யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பல மக்கள் உருத்திரபுரம் கிராமத்தின் எல்லைப் பகுதிகளில் இருப்பதாக சொல்கிறார்கள்.

மனம் மிகவும் வலிக்க வைக்கும் வார்த்தைகளையும் முகத்தையும் பார்க்கும் பொழுது எதையும் செய்ய முடியாத கையறு நிலையில் நாம் இருக்கிறோம் என்பதும் நம் காலத்து துயரத்தை எப்படி துடைப்போம் என்பதும் குற்ற உணர்வுகளாக தைக்கின்றன. இப்படியும் ஈழ மக்கள் வாழ்கிறார்கள் என்பதை கதைப்போல் கேட்கும் நிலையில் இந்த மக்களின் ஒவ்வொரு அசைவுகளும் துயர் வழியும் வாழ்வாக இருக்கிறது.

உருத்திரபுரம் நெல் விளையும், தேங் காங்காய்கள் விளையும் பூமி. அந்த விளை நிலத்தின் வளம் எள்ளுக்காட்டு மக்களின் வாழ்வில் செழிப்பை கொண்டு வர வேண்டும். அந்த கிராமத்திலே உள்ள ஒரு பகுதி மக்களின் வறுமையை, துயரை துடைக்க இனி வரும் காலங்களில் உரத்திரபுரம் கிராமத்தின் வளமும் செழி மையும் உதவ வேண்டும். எள்ளுக்காட்டுக் குழந்தைகள் கல்வியில் முன்னேற மிகுந்த ஆர்வம் காட்டுவதாக உருத்திரபுரம் பாட சாலை அதிபர் சொன்னார். அந்தப் பிள்ளை கள் கல்வியில் முன்னேற பாடசாலையின் சமூகமும் உருத்திரபுரம் மக்களும் உதவ வேண்டும். எளிதில் வென்று இயல்பான [illegible] அந்த மக்களின் உழைப்பு முழு ஈழ மக்களையும் பயனுறச் செய்யவேண்டும்.

## பாலர் பாடசாலைக்கு ஆசிரியர் தேவை

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியிலுள்ள தூய தோமஸ் பாலர் பாடசாலைக்கு ஆசிரியர் தேவை.

**கல்வித் தகைமை:**

★ க.பொ.த. (சா/த) 6 பாடங்கள் சித்தி
★ க.பொ.த. (உ/த) சித்தி
மற்றும்

பாலர் பாடசாலை ஆசிரியர் முன் அனுபவம் / பயிற்சி மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

தகுதியுடையோர் எதிர்வரும் 10.09.2010 வெள்ளிக் கிழமை மு.ப. 9 மணிக்கு தகுதிச் சான்றிதழ்களுடன் நேர் முகத் தேர்வுக்குச் சமுகம் தரவும்.

முகாமையாளர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்கள்

### திரு.திருமதி சிங்கராசா இரஞ்சிதமலர்

தோற்றம் 09.02.1954

தோற்றம் 03.01.1959



மறைவு: 09.09.2007

ஆண்டுகள் மூன்று ஆனதே
அன்புத் தெய்வங்களே உங்களைப் பிரிந்து-உங்கள்
அன்புமுகமும் இனிய பேச்சும்
எம் மனதில் நிழலாடுதே!
நித்தம் எம் நினைவுகளில் நீங்காது இடம்பிடித்த
எம் அன்பு ஆருயிர்களே விக்கித் தவிக்கின்றோம்
வேதனையால் துடிக்கின்றோம்- ஆண்டு பல
போனாலும் அழியாது உங்கள் உருவம் -மீண்டும்
வாராயோ என இறைவனை வேண்டி நிற்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

இல.6, குறுக்குவீதி,
நல்லூர். (102930) பிள்ளைகள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 21.07.1960

மண் மடியில் 21.08.2006



### அமரர் தங்கராசா அருந்தவராசா

(கருணாநிதி)

(திதி -2010.09.06)

ஆண்டுகள் நான்கு ஓடோடிச் சென்றாலும்
மாறாத ரணத்தோடு நெஞ்சம் கனக்குதப்பா
அன்று கேட்ட செய்தி பொய்யாய் இராதோவென
இன்றும் மனம் ஏங்குதப்பா
குடும்பத்துக்காய் உங்களை உருக்கிய குலவிளக்கே
ஆண்டுகள் பல கடந்தாலும் எம் கண்களுக்குள்
மாறாத ஒளி விளக்காய் உங்கள் ஓவியமே

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(மயிலிட்டி) (102904) மனைவி, பிள்ளைகள்

## மீனவர்களுக்கு ஓய்வூதியத் திட்டம்

மீனவ சமுதாய மக்களுக்காக புதிய ஓய்வுதியத் திட்ட மொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனரட்ண கூறியுள்ளார்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தின் பிரகாரம் மாதந்தக் கொடுப் பனவாக 7 ஆயிரம் ரூபா வழங்கப்படும். இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்கான நடவடிக்கைகள் யாவும் விரைவில் எடுக்கப்பட விருப்பதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (க)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### பழனித்துரை மகேஸ்வரி

பிறப்பு: 22.08.1934

இறப்பு: 07.08.2010

கடந்த 07.08.2010 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருதியக் கிரியைகள் இன்று (06.09.2010) திங்கட்கிழமை மு.ப.9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் நண்பகல் 12 மணியளவில் சுன்னாகம் கதிரைமலை சிவன் மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-570707)

பருத்திக்கலட்டி,
சுன்னாகம் மேற்கு. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை மரியதாஸ்

(முன்னாள் உரிமையாளர் கிங்ஸ் சலூன், சின்னக்கடை)



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மரியதாஸ் 31.08.2010 செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் ஜெயசீலி (ஜெயா) யின் அன்புக் கணவரும் உதயராஜு (இத்தாலி), யோண்சன் கெனடி (கனடா), சகாயராணி, சாந்தி, எமல்சன், ராஜன் ஆகி யோரின் பாசமிகு தந்தையாரும் சுமதி, செல் லப்பா, மாலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் றீகன், றொக்சன், நிஷா, நிக்ஷன், ஜக்ஷன், சனா, ஜெனூசன், கேதீபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.09.2010 புதன்கிழமை பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ் சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :

இல.53, புதியவீடமைப்புத்திட்டம்
தொடர்மாடி அருகாமை,குருநகர், யாழ்ப்பாணம். குடும்பத்தினர் (102953)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சின்னத்துரை



நவக்கிரி, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத் துரை 04.09.2010 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் புஸ்ப ராணியின் அன்புக் கணவரும் சர்வ மோகன் (மோகன்- லண்டன்), சதீஸ்குமார் (குமார் - லண்டன்), சதீஸ்காந் தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜேந்தினி (லண்டன்), சுதாஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் நிரோஸ், தருண், றொசான் ஆகியோரின் அன்புப் பேரனும் வினாசித்தம்பி, காலஞ்சென்ற அழகம்மா மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் தனபாலசிங்கம், தனலட்சுமி, சிவனடி (பிரான்ஸ்), சிறிஸ்கந்தராஜா (கனடா), மகேஸ்வரன் (ரூபன் - கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவற்கிரி எல்லாளன் சனசமூக
நிலைய அருகில்
புத்தூர். (102982) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியிலான போட்டிக்கு அனுராதபுரம் சென்ற வீரர்கள்




உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ள வடமாகாண அஞ்சல் அணி சார்பில் கலந்துகொள்ளவென அனுராதபுரத்துக்கு நேற்றுச் சென்றுள்ள வீரர்களைப் படங்களில் காணலாம். *(படங்கள்: தமிழினியன்)*

## றோட்டறக்ட் கழகம் நடத்திய

# மின்னல்வேக ஒருநாள் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

# காங்கேசன்துறை ஐக்கியம், நீர்வேலி ஐக்கியம் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் ஆண், பெண் இருபாலாருக்கும் நடத்திய மின்னல்வேக ஒருநாள் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இவற்றில் பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் (ஏ) ஆண்கள் பிரிவில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக (ஏ) ஆகியவை வெற்றியீட்டின.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் (ஏ) அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக (பி) அணி களமிறங்கியது.

மூன்று செற்கள் கொண்ட இந்தப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக (ஏ) அணி 25:11, 15:08 என்ற செற்கணக்கில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக (பி) அணியை வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான போட்டியில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக (ஏ) அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக (பி) அணி மோதியது.

மூன்று செற்கள் கொண்ட போட்டியில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக (ஏ) அணி முதலிரு செற்களையும் 15:11, 15:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கி நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக (பி) அணியை வீழ்த்தி வெற்றி வாகைசூடியது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக (ஏ) அணியை சேர்ந்த தமிழரசியும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக (ஏ) அணியைச் சேர்ந்த நிறஞ்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-23)

## இன்றைய ஆட்டம்

அகில இலங்கைப் பாடசாலைத் துடுப்பாட்டச் சங்கம் (பிரிவு IIIஇற்கான) 17 வயதுப் பிரிவுக்கான துடுப்பாட்ட போட்டியின் காலிறுதி ஆட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை அனுராதபுர மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இதில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி (சி) அணியை எதிர்த்து யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

(எ-23)

# றோட்டறக்ட் கழக வலைப்பந்தாட்டம்

# சண்டிலிப்பாய் இந்துவை வென்றது பல்கலை. அணி

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திய மின்னல் வேகத்தின் ஒரு நாள் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது.

போட்டியின் ஒவ்வொரு நிமிடமும் விறுவிறுப்பாக அமைந்தது. இரு அணி வீராங்கனைகளும் வெற்றிபெற வேண்டுமென்ற துடிப்புடன் விளையாடியது எனினும் இறுதியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை 23:11 என்ற புள்ளி அடிப்படையில் யாழ்.பல்கலைக்கழக அணி வெற்றி கொண்டது. (எ-23)

# கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 18 மாணவ, மாணவிகள்

# தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளுக்குத் தெரிவு

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்வதற்காக கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளிலிருந்து பதினெட்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம் இவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் கடந்த ஜனவரி மாதத்தின் பின்னரே மீள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வடமாகாணப் போட்டிகளில் அவர்களுக்குக் கிடைத்த வெற்றிகள் தொடர்பான விவரங்கள் வருமாறு:

**15 வயது ஆண் - ஈட்டி எறிதல்**
முதலாம் இடம் - ரி.சதுஷன் - கிராஞ்சி அ.த.க.பாடசாலை

**15 வயது ஆண் - குண்டு எறிதல்**
3ஆம் இடம் - எம்.விதுஷன் - கிளிநொச்சி ம.வி.

**19வயது ஆண் - 800 மீற்றர் ஓட்டம்**
2ஆம் இடம் - எஸ்.பகீரதன் முக்கொம்பன் அ.த.க.பாடசாலை.

**19 வயது ஆண் - 500 மீற்றர் ஓட்டும்**
2ஆம் இடம் - பி.றுஜிந்தன் - பூநகரி ம.வி.

**19 வயது ஆண் - தட்டு எறிதல்**
3ஆம் இடம் - ரி.நிரூஷ்கான் - பளை மத்திய கல்லூரி.

**15 வயது பெண் - உயரம் பாய்தல்**
3ஆம் இடம் - ஜே. மேரி அருளினி - வலைப்பாடு அ.த.க.பாடசாலை

**19 வயது பெண் - 500 மீற்றர் ஓட்டம்**
2ஆம் இடம் - பி.நிமலாதேவி - பாரதி வித்தியாலயம்

**19 வயது பெண் - குண்டு எறிதல்**
2ஆம் இடம் - எஸ்.தஷாங்கி - புனித திரேஷா பெண்கள் கல்லூரி

**19 வயதுப் பெண் - ஈட்டி எறிதல்**
2ஆம் இடம் - பி.மாதங்கி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**21 வயது பெண் - ஈட்டி எறிதல்**
2ஆம் இடம் - ரி.கவிதா - பூநகரி நல்லூர் ம.வி. (எ-405)




# மின்னல்வேகக் கூடைப்பந்தாட்டத்தில்

# சென்றலைட்ஸ் அணி வெற்றியீட்டியது!

யாழ்ப்பாணம்,செப்.6

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்திய ஆண்களுக்கான மின்னல் வேக ஒரு நாள் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றது.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் இரு அணி வீரர்களுமே தமது முழுத்திறனையும் வெளிப்படுத்தினர். 35:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வாகைசூடியது.

(எ-23)



வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் சேவாலங்கா நிறுவனத்தின் நிதி உதவியுடன் அகில இலங்கை பாடசாலைகள் மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளுக்கான நான்கு நாள் வதிவிடப் பயிற்சி முகாம் ஒன்றை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது. பயிற்சி பெறுகிறவர்களையும், பயிற்றுவிப்பாளர்களையும் பல்வேறு நிலைகளில் படங்களில் காணலாம். *(படங்கள்: நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஜீத்திடம் இருந்து பணத்தை பெற்றோம் பாகிஸ்தான் வீரர்கள் ஒப்புக்கொண்டனர்

லண்டன், செப்.06

சூதாட்ட தரகர் மஜீத்திடம் இருந்து பணத்தை பெற்றது உண்மை தான் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிராக லண்டனில் நடந்த கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் டெஸ்ட் அணித் தலைவர் சல்மான்பட், வேகப்பந்து வீச்சாளர்கள் முகமது அசீப், முகமது அமீர் ஆகியோர் சூதாட்ட தரகர் மஷார் மஜீத்திடம் இருந்து கோடிக்கணக்கில் பணத்தை பெற்றுக்கொண்டு சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என இங்கிலாந்தில் உள்ள பிரபல பத்திரிகை வீடியோ காட்சிகளுடன் ஆதாரங்களை வெளியிட்டது. 'ஸ்பொட் பிக்சிங்' அடிப்படையில் தான் பந்துவீச்சாளர்கள் இருவரும் அந்த டெஸ்டில் வேண்டுமென்றே முறையற்ற பந்துவீச்சை நடத்தினார்கள் என்று அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் சூதாட்டப் பிரச்சினையில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை ஸ்கொட்லாந்து பொலிஸார் மீண்டும் விசாரணை நடத்திய போது, சூதாட்டக்காரர் மஜீத்திடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டதை மூன்று


மஜீத்திடம் பணம் பெற்றதை ஒப்புக்கொண்டமை தொடர்பான விசாரணையை முடித்துக் கொண்டு பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேறுகிறார் முகமது அமீர்.

வீரர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இது பற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் சட்ட ஆலோசகர் தபாஸ்சுல் ரிஸ்வி பாகிஸ்தான் தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு :-

''முறையற்ற பந்து வீசுவது உள்ளிட்ட விடயங்களுக்காக இந்தப் பணம் எங்களுக்கு வழங்கப்படவில்லை. வணிக நிறுவனங்களுடனான ஒப்பந்தத்தில் பெறப்பட்டவை, என்று தான் மஜீத் எங்களிடம் அந்தப் பணத்தை கொடுத்தார். எங்களுக்கு விளம்பர ஒப்பந்தம் தேடித்தரும் ஒரு தரகராகத்தான் மஜீத்தை நாங்கள் நினைத்திருந்தோம், அவர் ஒரு சூதாட்டக்காரர் என்பது எங்களுக்குத் தெரியாது என்று வீரர்கள் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளனர். எழுத்துப்பூர்வமான விளம்பர ஒப்பந்தங்களையும் ஸ்கொட்லாந்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். வீரர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. இதனால் தான் பொலிஸார், அவர்கள் மீது எந்தவித முறைப்பாடுகளையும் பதிவு செய்யாமல் விட்டுவிட்டனர்.''

- இப்படி அவர் கூறினார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சூதாட்டச் சர்சையில் சிக்கிய வீரர்களின் சட்டத்தரணி ரிஸ்வி கூறியவை வருமாறு:-

''வீரர்களின் அறையில் பொலிஸார் பணத்தைக் கைப்பற்றியது உண்மை தான். வீரர்களின் அறையில் பணம் இருந்தது என்பதற்காக அவர்கள் குற்றவாளிகள் அல்லது சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என்று கூற முடியது. மஜீத்துக்கும் அவர்களுக்கும் இடையே ஒரு வீரர் - விளம்பர ஒப்பந்தக்காரர் என்ற உறவு மட்டுமே இருந்தது. ஒரு சிறந்த வீரரை குற்றவாளி ஆக்க முடியாது. வீரர்களின் விளம்பர ஒப்பந்தகாரர்கள் தான் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள்.

விளம்பர ஒப்பந்தக்காரர்களை வீரர்களே தேர்வுசெய்து கொள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது. அதன்பேரில் தான் வீரர்களே தங்களது விளம்பரத் தரகர்களை நியமித்து கொள்கிறார்கள். மேலும் இந்த விவகாரத்தில் வீரர்கள் ஒருபோதும் பின்வாங்கவில்லை. தாங்களே முன்வந்து பொலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளனர்.

விதிமுறைகளை மீறி மூன்று வீரர்களையும் இடைநிறுத்தி, ஐ.சி.சி. நடவடிக்கை எடுத்துள்ளது. எங்களது வீரர்கள் அப்பாவிகள் என்று நிரூபிக்கப்பட்டால், ஐ.சி.சி மற்றும் சில விளையாட்டு அமைப்புகளுக்கு எதிராக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வழக்கு தொடருவது குறித்து நிச்சயம் பரிசீலிக்கும்.''

- இப்படி அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே பாகிஸ்தான் வீரர்களின் சூதாட்டத்தை அம்பலப்படுத்திய பத்திரிகை மூன்று வீரர்களுக்கும் சூதாட்டத் தரகர் மஜீத் உடனான தொடர்பு குறித்து மேலும் பல முக்கியமான தகவல்களை வெளியிட உள்ளன என செய்திகள் வெளிவந்துள்ளன.

# ஐ.சி.சி. விருதுப் பட்டியலில் இருந்து சூதாட்ட வீரர்கள் பெயர்கள் நீக்கம்

லண்டன், செப். 06

'ஸ்பொட் பிக்சிங்' என்ற சூதாட்டத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் வீரர்கள் முகமது அமீர், முகமது அசீப் ஆகியோர் ஐ.சி.சி., விருதுக்கான பரிந்துரைப் பட்டியலில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து சென்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் சல்மான் பட் உள்ளிட்ட மூன்று வீரர்கள் லண்டன் டெஸ்ட்டில் 'ஸ்பொட் பிக்சிங்' என்ற சூதாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் சூதாட்ட தரகர் மசார் மஜீத் உட்பட நான்கு பேர் கைதுசெய்யப்பட்டு, விசாரணைக்குப் பின் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் சூதாட்டத்தில் வீரர்களுக்குத் தொடர்பு இருப்பதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளன என ஐ.சி.சி. கூறியது. இதையடுத்து இந்த மூன்று வீரர்களும் சர்வதேசப் போட்டிகள் உட்பட எவ்வித கிரிக்கெட்டிலும் பங்கேற்க கூடாது என ஐ.சி.சி., தடைவிதித்தது.

இதையடுத்து ஐ.சி.சியின் விருது வழங்கும் விழா அடுத்த மாதம் பெங்களூரில் நடக்கவிருக்கிறது. இதில் வளர்ந்து வரும் இளம் வீரர்கள் விருதுக்கான 16 பேர்கள் அடங்கிய பட்டியலில் முகமது அமீர், சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரர் விருதுக்கான பட்டியலில் முகமது அசீப் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருந்தன. தற்போது இவர்கள் 'ஸ்பொட் பிக்சிங்' சர்ச்சையில் சிக்கியதை அடுத்து, இந்த விருதுக்கான பட்டியலில் இருந்து இருவரையும் ஐ.சி.சி. அதிரடியாக நீக்கியுள்ளது.

இதற்கு பாகிஸ்தான் தூதரக அதிகாரி வனீத் சம்சுல் ஹசன் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து ஹசன் பின்வருமாறு கூறினார்.

''சூதாட்ட சர்ச்சையில் சிக்கியுள்ள மூன்று வீரர்களும் ஒரு குற்றமும் செய்யாதவர்கள். இவர்கள் குற்றம் செய்தது நிரூபிக்கப்படவில்லை. ஏற்கனவே இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இந்த மூன்று வீரர்களையும் விளையாடத் தடை விதித்து, முறையற்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் விருதுக்கான பட்டியலில் இருந்து நீக்கியதில் எந்த ஆச்சரியமும் எங்களுக்கு இல்லை. அடிப்படை விதிகள் எல்லாம் எங்கு போயின என்றே தெரியவில்லை. ஒட்டுமொத்தமாக வீரர்களுக்கு துரோகம் இழைக்கப்பட்டுள்ளது.''

- இப்படி அவர் கூறினார்.

## உலகக் கிண்ண ஹொக்கி:

# இந்தியாவுக்கு தொடந்து மூன்றாவது தோல்வி அரையிறுதிக்குள் நுழையும் கனவு தகர்ந்தது

ரொசாரியோ, செப். 06

பெண்கள் உலகக் கிண்ண ஹொக்கிப் போட்டித் தொடரில், ஜேர்மனிக்கு எதிரான லீக் போட்டியில், இந்திய அணி 1-5 என்ற 'கோல்' கணக்கில் தோல்வி யடைந்தது. இதன்மூலம் தொடர்ந்து மூன்றாவது தோல்வியைப் பெற்று, பதக்கம் பெறும் வாய்ப்பை இழந்தது.

ஆர்ஜென்டினாவின் ரொசாரியோ நகரில், பெண்களுக்கான உலக கோப்பை ஹொக்கிப் போட்டித் தொடர் நடந்து வருகிது. இதில் இந்தியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 12 அணிகள் விளையாடுகின்றன. இந்திய அணி தனது முதல் இரண்டு லீக் போட்டிகளில் மோசமான தோல்வி அடைந்தது. இந்நிலையில் அடுத்த மூன்று போட்டிகளில் தொடர்ந்து வென்றால் தான், அரையிறுதிக்கு செல்ல முடியும் என்ற கட்டாயத்தில், ஜேர்மனியை எதிர்கொண்டது.

ஆனால் இதிலும் இந்திய வீராங்கனைகள் ஏமாந்தனர். ஜேர்மனி அணிக்கு ஹாப்மேன், ஸ்டோகீல், கெல்லர் ஹாசே ஆகியோர் 'கோல்' அடித்து உதவினர். பதிலுக்கு இந்திய தரப்பில் ராணி ராம்பால் மட்டும் கோல் அடித்தார். இறுதியில் இந்திய அணி 1-4 என்ற கோல்கணக்கில் தொடர்ந்து மூன்றாவது தோல்வியை பதிவு செய்தது.

இன்னும் இரண்டு போட்டிகள் மீதமுள்ள நிலையில், இப்போட்டிகளில் வென்றால் கூட, அரையிறுதிக்குள் இந்திய அணியால் நுழைய முடியாது. இருப்பினும் இத்தொடரில் அதிக 'கோல்' அடித்தவர்கள் வரிசையில், இந்தியா சார்பில் ராணி ராம்பால் (4 கோல்), நெதர்லாந்தின் பவுமெனுடன் ஆகியோர் முதலிடத்தில் உள்ளனர்.

## அமெரிக்க ஓபன் டென்னிஸ்:

# 4ஆவது சுற்றில் கிலிஸ்டர்ஸ், இவனோவிச்



நியூஜோர்க், செப்.6

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் 4ஆவது சுற்றுக்கு கிலிஸ்டர்ஸ், இவானோவிச் தகுதி பெற்றுள்ளனர். நடால், முர்ரே ஆகியோர் தொடர்ந்து முன்னேறி வருகிறார்கள்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூஜோர்க் நகரில் நடந்து வருகிறது. இதில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்றில் முதல்நிலை வீரர் ஸ்பெயினின் ரபெல் நடால் 6-2, 7-6, 7-5 என்ற நேர் செற் கணக்கில் உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்டோமினை தோற்கடித்தார். நடால் இதுவரை கைப்பற்றாத ஒரே கிராண்ட்ஸ்லாம் பட்டம் இது தான். தொடர்ந்து போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்டுவரும் நடால் கூறியதாவது:-

''பட்டத்தைப் பற்றி இப்போது பேச விரும்பவில்லை. அதற்கு இன்னும் 5 ஆட்டங்களில் வெற்றிபெற வேண்டியுள்ளது'' - என்றார்.

மற்றொரு ஆட்டத்தில் டென்னிஸ் தரவரிசையில் 4ஆம் நிலை வீரர் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே 7-5, 6-3, 6-0 என்ற செற் கணக்கில் டஸ்டின் பிரானை (ஜமைக்கா) வென்றார். டேவிட் நல்பாண்டியன் (அர்ஜென்டினா), மிகைல் சூஸ்னி (ரஷியா), வாவ்ரின்கா (சுவிட்சர்லாந்து), டேவிட் பெரடர் (ஸ்பெயின்) ஆகியோரும் வெற்றி பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் நடப்பு சம்பியன் பெல்ஜியத்தின் கிம் கிலிஸ்டர்ஸ் 6-3, 6-0 என்ற நேர் செற் கணக்கில் செக்குடியரசின் பெட்ரா கிவிடோவை வீழ்த்தி எளிதாக 4ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

முன்னாள் முதன்நிலை வீராங்கனை சேர்பியாவின் இவானோவிச் 7-5, 6-0 என்ற நேர் செற்றில் பிரான்ஸின் விர்ஜினி ரஸ்ஸானோவை விரட்டினார். 4ஆவது சுற்றில் இவானோவிச், கிலிஸ்டர்சுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளார்.

2 முறை சம்பியனான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 6-2, 6-1 என்ற நேர் செற் கணக்கில் மான்டி மினெலாவை (லக்சம்பர்க்) வெற்றிபெற்றார். 12ஆவது முறையாக அமெரிக்க ஓபனில் பங்கேற்றிருக்கும் வீனஸ் எல்லா தடவையும் 4ஆவது சுற்றை எட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

'பிரெஞ்ச் ஓபன்' சம்பியன் இத்தாலியின் பிரான்செஸ்கா சிவோன் 6-1, 7-5 என்ற நேர் செற் கணக்கில் உக்ரைன் வீராங்கனை அலோனா பாண்டரென்கோவை வென்று 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். வெற்றிக்கு பின்னர் சிவோன், ''5 முறை சம்பியனான ரோஜர் பெடரர் மாதிரி 'ஷாட்'களை அதிகம் விரும்புகிறேன். பெடரர் ஒரு ஆட்டத்தில் பின்பக்கமாக தனது கால்களுக்கு இடையே பந்தை



அடித்து ரசிர்களை வியக்க வைத்தார். இந்தத் தொடரில் சிறந்த 'ஷாட்'களில் ஒன்றாக அந்த ஷாட்டை பார்க்க விரும்புகிறேன் - என்றார்.

ரஷியாவின் டெமன்டிவா, ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசுர், இஸ்ரேலின் ஷகர் பீர் உள்ளிட்ட முன்னணி வீராங்கனைகளும் தங்களது ஆட்டங்களில் வெற்றியை ருசித்தனர்.

ஆண்கள் இரட்டையர் 2ஆவது சுற்றில் இந்தியாவின் ரோகன் பொபண்ணா, பாகிஸ்தானின் குரேஷி ஜோடி 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் மைக்கேல் ஹோல்மான் (ஜெர்மனி) - ஜார்க்கோ நிமினன் (பின்லாந்து) இணையை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

ஆண்கள் இரட்டையரில் வெளியேறிய இந்திய நட்சத்திர வீரர் லியாண்டர் பெயஸ் கலப்பு இரட்டையரில் சிம்பாப்வே வீராங்கனை காரா பிளாக்குடன் இணைந்து களம் இறங்கினார். இதன் முதல் சுற்றில் பெயஸ் - பிளாக் ஜோடி செக்குடியரசின் லூசி ஹிராடெக்கா - [illegible] சொர்மாக் ஜோடியிடம் தோற்றுப்போனது.




# சிறப்பாக விளையாடுவேன்; பொல்லார்ட் நம்பிக்கை!


'ஏயர்ரெல்' இரண்டாவது சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி - 20' கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் 10 அணிகளில் ஒன்றான மும்பை இந்தியன்ஸ் அணியின் அதிரடி ஆட்டக்காரர் பொல்லார்ட் (மேற்கிந்தியத் தீவுகள்) அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

''அடையாளம் தெரியாத வீரர்களும் சிறப்பாக விளையாடி புகழ்பெறுவதற்கான வாய்ப்பினை இந்த சம்பியன்ஸ் லீக் ஏற்படுத்திக்கொடுத்து வருகிறது. இதுவே இந்தப் போட்டியின் முக்கிய சிறப்பாகும். கடந்த 1 1/2 ஆண்டுகளாக எனது செயற்பாடுகள் திருப்தி அளிப்பதாகவுள்ளன. இந்த சம்பியன்ஸ் லீக் போட்டிகளிலும் உயர்ந்த இடத்தைப் பிடிக்க கடுமையாக உழைப்பேன்.

கடந்த ஆண்டு நடந்த போட்டியின் போது நான் புதுமுக வீரராக இருந்தாலும், மும்பை இந்தியன்ஸ் அணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஓரளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் தான் இந்த நிலைக்கு என்னால் உயர முடிந்தது. எனக்கு நன்றாக விளையாட வேண்டும் என்ற நெருக்கடி இல்லை. முழு திறமையை வெளிப்படுத்தி விளையாட வேண்டும். எதைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை.

கடந்த போட்டியின்போது, 'ரி-20' வடிவத்தில் தலைமுடியை வெட்டியிருந்தது குறித்துப் பலர் கேள்வி எழுப்பினர். என்னைப் பற்றியும், எனது தலைமுடியைப் பற்றியும் மக்கள் இன்னும் நினைவில் வைத்திருக்கிறார்கள் என்பதை கேட்கும்போது மகிழ்ச்சியாகவுள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திருநள்ளாறு ஆலயத்திற்குத் தங்கத்தாலான ரிஷப வாகனம்

# கர்நாடக மாநிலத்தில் தொடர்ந்து மழை: காவிரியில் 4 நாள்களில் தண்ணீர் திறப்பு

## தமிழகம் வந்த முதல்வர் எடியூரப்பா அறிவிப்பு

காரைக்கால், செப். 06

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து பரவலாக மழை பெய்துவருவதால், அடுத்த 4 நாள்களுக்குள் காவிரியில் தண்ணீர் திறக்க ஏற்பாடு செய்யப்படும் - என்று கர்நாடக முதல்வர் பி.எஸ்.எடியூரப்பா கூறினார்.

தமிழகத்தில் உள்ள நவக்கிரக தலங்களில் வழிபாடு நடத்துவதற்காக பெங்களூரிலிருந்து திருச்சிக்கு விமானத்தில் சனிக்கிழமை வந்த கர்நாடக முதல்வர் எடியூரப்பா, பல கோயில்களுக்கும் சென்றுவிட்டு கார் மூலம் பிற்பகல் 1.45 மணிக்கு காரைக்கால் வந்தார். அங்கிருந்து திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேசுவரர் கோயிலுக்குச் சென்றார்.

கோயில் மூலவரான தர்பாரண்யேசுவரர், பிரணாம்பிகை அம்பாள் சன்னதிகளில் வழிபாடு நடத்திய எடியூரப்பா, தனி சன்னதிகொண்டு அருள்பாலிக்கும் சனீஸ்வர பகவானைத் தரிசித்தார். சுவாமிக்கு கறுப்பு வஸ்திரம் அணிவித்து, ஏராளமான பழங்களுடன் அர்ச்சனை செய்து வழிபாடு நடத்தினார்.

கோயில் அலுவலகத்துக்குள் சென்ற எடியூரப்பாவிடம், கோயில் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து நிர்வாக அலுவலர் எஸ்.கே.பன்னீர்செல்வம் விளக்கினார். அப்போது, அருள்மிகு தர்பாரண்யேசுவரருக்குரிய ரிஷப வாகனம் சிதிலமடைந்திருப்பதால், தங்கத்தாலான ரிஷப வாகனம் செய்யத் தேவையான ரூபா 40 லட்சத்தைத் தருவதாக எடியூரப்பா உறுதியளித்தார்.

கோயிலுக்கு வெளியே வந்த எடியூரப்பா செய்தியாளர்களிடம் கூறுகையில் -

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த 2 நாள்களாக பரவலாக மழை பெய்துவருகிறது. எனவே, அடுத்த 4 அல்லது 5 நாள்களில் காவிரியில் தண்ணீர் திறக்கப்படும். இதுகுறித்து தமிழக முதல்வர் கருணாநிதியிடமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காவிரி தண்ணீர் ஒரு பிரச்சினையாக இருக்காது - என்று கூறினார்.

# தமிழகத்தில் வன்முறை அதிகரிப்பு

## காங். முன்னாள் தலைவர் இளங்கோவன் குற்றச்சாட்டு



சென்னை, செப். 06

கடந்த ஓராண்டாக தமிழகத்தில் வன்முறை தலைதூக்கி வருகிறது. பெற்றோல் குண்டுகளால் எனது வீடு தாக்கப்பட்டது, பழ.கருப்பையா மற்றும் தா.பாண்டியன் ஆகியோரின் வீடும் தாக்கப்பட்டன - என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறினார்.

தேர்தல் கூட்டணி பற்றிய காங்கிரஸ் தொண்டர்களின் உணர்வுகளைக் கட்சித் தலைமைக்குத் தெரியப்படுத்துவோம் - என்றும் அவர் தெரிவித்தார்.

திருச்செங்கோடு நேற்றுமுன்தினம் வருகை தந்த அவர், பயணியர் விடுதியில் கூறியவை வருமாறு -

கோவையில் இளைஞர் காங்கிரஸார் சிலர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை மாநிலத் தலைவர் தங்கபாலு திரும்பப் பெறுவார் என்று நம்புகிறேன். தமிழகத்தில் தி.மு.க. கூட்டணியில்தான் காங்கிரஸ் உள்ளது. தேர்தல் நேரத்தில் கூட்டணி பற்றி முடிவு செய்ய வேண்டியது, தலைவர் சோனியா காந்திதான். இருப்பினும் மக்கள் மற்றும் தொண்டர்களின் உணர்வுகளைத் தலைமைக்கு எடுத்துக் கூறுவோம்.

தமிழகம் மற்றும் ஆந்திர எல்லைப் பகுதிகளில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தலை தூக்கிவருகின்றனர். அவர்களை ஒடுக்க மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புதிய கட்சி துவக்கும் எண்ணம் எப்போதும் எனக்குக் கிடையாது. எனது ஒரே தலைவர் சோனியாதான். காங்கிரஸ், பா.ம.க., தே.மு.தி.க. ஆகிய கட்சிகள் இணைந்து புதிய கூட்டணி உருவாகுமா என்று கேட்கிறார்கள். கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. மத்தியில் சுயாட்சி, மாநிலத்தில் கூட்டாட்சி என்பது எங்கள் விருப்பம்.

அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதாவுக்கு கூட்டம் கூடுவதை வைத்து எதையும் கணிக்க முடியாது. விஜயகாந்திற்கும் திண்டிவனத்தில் ஏராளமான கூட்டம் கூடியது. நாங்கள் பேசும் கூட்டங்களுக்கும் திரளாக மக்கள் வருகின்றனர். விஜயகாந்திற்கு நேரில் பிறந்த நாள் வாழ்த்துக் கூறியதில் அரசியல் முக்கியத்துவம் ஏதும் இல்லை.

- இப்படி அவர் கூறினார். (ர)

இந்தியச் செய்திகள்

# தி.மு.க. அங்கம் வகிக்கும் அரசிலுள்ள மம்தாதான் மாவோயிஸ்ட் ஆதரவாளர்

## கருணாநிதிக்கு சீதாராம் பதிலடி

சேலம், செப். 06

தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அமைச்சரவையில் உள்ள மம்தா பானர்ஜிதான் மாவோயிஸ்ட் ஆதரவாளர் - என்று மார்க்சிஸ்ட் கட்சி அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி கூறினார்.

அக்கட்சியின் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக சேலத்துக்கு வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

மூத்த அரசியல்வாதியான தமிழக முதல்வர் கருணாநிதி, மார்க்சிஸ்ட் கட்சியினர் மாவோயிஸ்டுகளின் ஆதரவாளர்கள் என்பதுபோல் கூறியிருப்பது ஆச்சரியம் அளிக்கிறது. சமூக மாற்றத்தை உருவாக்க தற்போதைய ஜனநாயக முறையில் நம்பிக்கை இல்லை என்று கூறி மார்க்சிஸ்ட் கட்சியில் இருந்து பிரிந்தவர்கள்தான் மாவோயிஸ்ட்டுகள்.

எங்களுக்கும் மாவோயிஸ்டுகளுக்கும் இடையே உள்ள அடிப்படை வேறுபாட்டை அறியாதவராக முதல்வர் பேசியிருக்கிறார். கடந்த 1967 இல் இருந்து வன்முறையைக் கைவிட்டு ஜனநாயகப் பாதைக்கு திரும்புமாறு மாவோயிஸ்ட்டுகளை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

மேற்கு வங்கத்தின் எல்லையோரப் பகுதிகளில் இப்போது உள்ள மாவோயிஸ்ட்டுகள், திரிணமூல் காங்கிரஸ் கட்சியால் இறக்குமதி செய்யப்பட்டவர்கள். இக்கட்சியின் தலைவரான மம்தா பானர்ஜி, மாவோயிஸ்ட் தலைவர் ஒருவர் கொல்லப்பட்டதை எதிர்த்துப் பேசியதுடன் அவர்களைத் தொடர்ந்து ஆதரித்துப் பேசி வருகிறார். அவர் இடம் பெற்றுள்ள மத்திய அரசில்தான் தி.மு.கவும் இடம் பெற்றுள்ளது.

இந்தியாவுக்கு ஒத்துவராத, வன்முறைப் பாதையில் இருந்து விலகி வரும் மாவோயிஸ்ட்டுகளை நாங் கள் ஏற்றுக் கொண்டு இணைந்து செயற்படுவோம். நேபாளத்தில் வன்முறை அரசியலை கைவிட்டு ஜனநாயக அரசியலுக்கு வந்ததால்தான் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியினை ஆதரித்தோம். இதை முதல்வர் அறிந்து கொள்ளாமல் பேசியிருக்கிறார்.



மாவோயிஸ்ட்டுகளைத் தடை செய்ய நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்தோம் என அவர் கூறியுள்ளார். சட்டம்-ஒழுங்கை கட்டுப்படுத்துவது மாநில அரசின் கடமையாக உள்ள நிலையில் கேரளம், மேற்கு வங்கம், திரிபுரா ஆகிய மார்க்சிஸ்ட் ஆளும் மாநிலங்களில் மாவோயிஸ்ட்டுகள் தடை செய்யப்பட்டுள்ளதை அவர் அறிய வேண்டும். எனவே எங்களை மாவோயிஸ்ட்டுகளுடன் தொடர்புபடுத்தி அவர் பேசியிருப்பது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டு.

மாவோயிஸ்ட்டுகள் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பவர்கள் என்று பிரதமர் கூறியுள்ளார். ஆனால் அவரது அமைச்சரவையில் இருப்பவரே மாவோயிஸ்ட்டுகளை ஆதரிக்கிறார். இதை பிரதமர் எப்படி ஏற்றுக் கொள்கிறார் என்று தெரியவில்லை. இதுகுறித்து அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உரிமைப் பிரச்சினை எழுப்ப இருக்கிறோம்.

- இப்படி அவர் கூறினார்.

# இந்திய-பாக். இடையிலான பேச்சுக்கு ஏற்ற நேரம் இது!

## மகாத்மா காந்தியின் பேரன் கருத்து



நியூயோர்க், செப். 06

பாகிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட பெருவெள்ளம் இந்திய - பாகிஸ்தான் இடையே அமைதிப்பேச்சு ஏற்படுவதற்கான வாய்ப்பைப் பிரகாசப்படுத்தியுள்ளது - என்று மகாத்மா காந்தியின் பேரன் ராஜ்மோகன் காந்தி தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் பாகிஸ்தான் தூதர் அப்துல்லா ஹுசைனுடன் பேசுகையில், இரு நாடுகளிடையே இப்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழலை அரசியல் ஆதாயமாக்கிக் கொள்ள வேண்டும். கடந்த கால நிகழ்வுகளை இரு தரப்பினரும் மறந்துவிட்டு பேச்சைத் தொடங்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

பெருவெள்ள சேதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நோக்கில் இந்தியா முதல் கட்டமாக 50 லட்சம் டொலர் (ரூபா 23 கோடி) அளிப்பதாக உறுதியளித்தது. பின்னர் நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கூடுதலாக 20 லட்சம் டொலர் (ரூபா 92 கோடி) அளிப்பதாக இந்தியா அறிவித்தது. உதவித் தொகை முழுவதும் ஐக்கியநாடுகள் சபை மூலம் பாகிஸ்தானுக்கு அளிக்கப்படுகிறது. இந்தியாவின் உதவியை பாகிஸ்தான் ஏற்றுக்கொள்ளும் என்று அந்நாட்டு பிரதமர் யூசுப் கிலானி தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் இந்தியா அளிக்க முன்வந்துள்ள உதவியை ஏற்கும் அதேநேரத்தில் பழைய விவகாரங்களை மறந்து பேச்சு நடத்தவேண்டும் என்று அவர் கூறினார். இந்தச் சந்தர்ப்பத்தை உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

ராஜ்மோகன் காந்தி இப்போது இலினாய்ஸ் பல்கலைக் கழகத்தில் தெற்கு ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் பாடப்பிரிவு விரிவுரையாளராக உள்ளார்.

# பாடசாலைகளில் மாணவர்களை கடுமையாகத் தண்டிக்கக்கூடாது

## ஆசிரியர்களுக்கு மன்மோகன் சிங் அறிவுரை

டில்லி, செப். 06

பாடசாலைச் சூழ்நிலை பயம் இல்லாமல் இருக்க வேண்டும் என்றும், மாணவ - மாணவிகளைக் கடுமையாக தண்டிக்கக் கூடாது என்றும் ஆசிரியர்களுக்கு பிரதமர் மன்மோகன் சிங் அறிவுரை வழங்கி உள்ளார்.

ஆசிரியர் தின விழாவையொட்டி நேற்றுமுன்தினம் டில்லியிலுள்ள பிரதமர் மன்மோகன் சிங்கின் இல்லத்தில், தேசிய விருதுக்கு தேர்ந்து எடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

அப்போது அவர் கூறியவை வருமாறு -

இந்தியாவில் [illegible] மான கல்வி வழங்குவதில் அரசு உறுதியாக உள்ளது. சாதி, [illegible] காரணங்களுக்காக எந்தக் குழந்தையும் பாடசாலைக்குப் போகாமல் இருக்கக்கூடாது. இதற்காக கல்வி உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டு அது ஒரு தேசிய இயக்கமாக தொடங்கப்பட்டிருக்கிறது.

எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைப்பதை இந்தச் சட்டம் உறுதி செய்கிறது. மாணவ - மாணவிகளை உடல் ரீதியாக தண்டிப்பதையும், மன ரீதியாக துன்புறுத்துவதையும் இந்தச் சட்டம் தடை செய்கிறது. மேலும் அவர்களை 'பெயில்' ஆக்கவும், பாடசாலையில் இருந்து நீக்கவும் தடை விதிக்கிறது. சட்டத்தில் விதிமுறைகள் இப்படி இருந்தால் [illegible] எப்படி ஒழுங்கு ஏற்படுத்த முடியும் என்று பல ஆசிரியர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

குழந்தைகளை கட்டுப்படுத்துவது எளிது. ஆனால் அது பிரச்சினைகளை அவர்கள் புரிந்து கொள்ள உதவாது. குழந்தைகளின் மீது ஆசிரியர்கள் முழு கவனம், செலுத்தி அவர்களைக் கண்காணித்து உதவிகள் செய்தால் அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்படாது என்று குழந்தைகளை பற்றி தத்துவஞானி ஜே.கிருஷ்ண மூர்த்தி கூறியதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.



பாடசாலைச் சூழ்நிலை மாணவ - மாணவிகளுக்கு பயம் இன்றியும், கவலை இன்றியும் சுதந்திர உணர்வுடன் இருக்க வேண்டும். அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க கூடாது.

- இப்படி அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். ஷியா பேரணியில் குண்டுவெடிப்பு

# 50 பேர் சம்பவ இடத்தில் உடல் சிதறிப் பலி!

## செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள் உட்பட 100 பேர் காயம்

இஸ்லாமாபாத், செப். 06

பாகிஸ்தானில் ஷியா முஸ்லிம்களின் பேரணியை குறிவைத்து வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 50 பேர் உயிரிழந்தனர். 100 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் மரணத்தின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பலுசிஸ்தான் மாகாணத் தலைநகர் குவெட்டாவில் இஸ்ரேலுக்கு எதிராகவும், பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாகவும் ஷியா முஸ்லிம் மக்கள் பேரணி நடத்தினர்.

இந்தப் பேரணி உள்ளூர் நேரப்படி சரியாக மாலை 3 மணிக்கு தொடங்கியது. பேரணி புறப்பட்டு மீஜன் செக் என்ற இடத்தை அடையும்போது தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் சம்பவ இடத்திலேயே 50 பேர் உடல் சிதறி இறந்தனர். 100 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்களில் சில செய்தியாளர்களும், புகைப்பட கலைஞர்களும் அடங்குவர்.

''தாக்குதல் நடந்த இடத்தைப் பார்ப்பதற்கே கொடூரமாக இருந்தது. அப்பகுதி முழுவதும் உடல்கள் சிதறிக் கிடந்தன. இரத்தம் பரவிக் கிடந்தது'' என சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

பேரணியில் பங்கேற்ற பெரும்பாலோர் இளைஞர்கள். தற்கொலைப் படைத் தாக்குதல் நடந்ததுமே பேரணியில் பங்கேற்றவர்கள் அலறியடித்துக்கொண்டு அங்குமிங்குமாக ஓடினர்.

சிலர் சாலையோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கார்களுக்கு கீழேயும், அருகிலுள்ள கட்டடங்களுக்குள்ளும் புகுந்து தஞ்சம் அடைந்தனர்.

தங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதால் பேரணியில் பங்கேற்ற சிலர் ஆத்திரமடைந்தனர். அவர்கள் வைத்திருந்த துப்பாக்கிகளை எடுத்து பொலிஸாரை நோக்கிச் சுட்டு கோபத்தை வெளிப்படுத்தினர். பதிலுக்கு பொலிஸாரும் துப்பாக்கியால் சுட்டனர்.

பேரணியில் ஈடுபட்டவர்கள் கும்பல் கும்பலாகச் சென்று அப்பகுதியிலுள்ள கடைகளை அடித்து நொறுக்கியும், தீ வைத்தும் வன்முறையில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியே வன்முறைக் களமாகக் காட்சியளித்தது என்று தொலைக்காட்சிகள் தெரிவித்துள்ளன.

இந்தத் தற்கொலைப் படைத் தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை.

''பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதால் வேறு வழியில் பேரணி செல்லுமாறு ஷியா முஸ்லிம்களிடம் கேட்டுக் கொண்டோம். ஆனால் எங்களது வேண்டுகோளை அவர்கள் நிராகரித்துவிட்டனர்'' என்று பலுசிஸ்தான் மாகாண பொலிஸ் தலைவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதால் ஷியா முஸ்லிம்கள் திறந்தவெளியில் பேரணி செல்வதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பிட்ட இடங்களில் மட்டும் பேரணி நடத்தவேண்டும் என்று முன்னர் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் வலியுறுத்தியிருந்தார்.



மாஸ்கோவிலுள்ள கோர்கி இல்லத்தில் ஓ.ஏ.ஓ., ரோஸ்நெப்ட் ஒயில் நிறுவனத்தின் துணைத் தலைவர் எட்வர்ட்டுடன் ரஷ்ய ஜனாதிபதி டிமிட்ரி மெட்வதேவ் உரையாடுகிறார்.

# ரஷ்யாவில் காட்டுத் தீயால் 5 பேர் பரிதாபச் சாவு; 500 கட்டடங்கள் சேதம்

மாஸ்கோ, செப். 06

ரஷ்யாவில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர். வனப்பகுதியை ஒட்டியிருந்த 500இற்கும் மேற்பட்ட கட்டடங்கள் முற்றிலுமாக தீயால் சேதமடைந்துள்ளன. சுமார் ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

அங்குள்ள வோல்கோகிரேட் பகுதியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன்னரும் இங்கு காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை மீண்டும் காட்டில் தீ பிடித்தது. வனப்பகுதி வழியாகச் செல்லும் உயர் அழுத்த மின் கம்பிகள், சூறாவளி காற்றினால் உரசிக் கொண்டன. இதனால் தீப்பற்றியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயை அணைக்கும் பணியில் இராணுவ ஹெலிக்கொப்டர்களும் ஈடுபட்டுள்ளன. வனப்பகுதியைச் சுற்றியுள்ள சுமார் 20 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் வீடுகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

வனப்பகுதியில் கடும் வெயில் காரணமாக காய்ந்த புற்கள் மற்றும் மரங்கள் அதிகமுள்ளதால் விரைவில் தீ பற்றிப் பரவுகிறது. 300 ஆயிரம் தீயணைப்பு வாகனங்களும், 300 வீரர்களும் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## உலக அரங்கில்

# பிரி. முன்னாள் பிரதமர் மீது டப்ளினில் சப்பாத்து வீச்சு

லண்டன், செப். 06

அயர்லாந்தின் டப்ளின் நகருக்குச் சென்ற பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் டோனி பிளேர் மீது முட்டையும், சப்பாத்தும் வீசப்பட்டன. ஆனால் முட்டையோ, சப்பாத்தோ அவர் மீது படவில்லை.

டோனி பிளேர் தாம் பிரிட்டிஷ் பிரதமராக இருந்தபோது அமெரிக்காவுடன் இணைந்து ஈராக்கில் போரை நடத்தியமை உள்ளிட்ட தமது நினைவுகளைத் தொகுத்து 'மை ஜேர்னி' என்ற பெயரில் புத்தகம் எழுதியுள்ளார்.

இந்தப் புத்தகத்தை வெளியிடுவதற்காக அயர்லாந்தின் டப்ளினிலுள்ள புத்தகக் கடைக்கு டோனி பிளேர் சனிக்கிழமை வந்தார். ஈராக் போருக்கு எதிரானவர்கள் டோனி பிளேரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தகக் கடையின் இருபுறமும் திரண்டிருந்தனர்.

பிளேர் காரில் வந்திறங்கியதும் போராட்டக்காரர்கள் அவர் மீது முட்டையையும், சப்பாத்தையும் வீசினர். பாதுகாப்பு அதிகாரிகள் அவரை பத்திரமாகக் கடைக்கு அழைத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# மெக்ஸிக்கோ விமான விபத்தில் இரு எம்.பிக்கள் உட்பட 6 பேர் பலி!

ஓயாக்சகா(மெக்ஸிக்கோ), செப். 06

மெக்ஸிக்கோவில் நடந்த விமான விபத்தில், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர் ஒருவர் உட்பட ஆறு பேர் பலியாயினர். அதேபோல், துபாயில் சரக்கு விமானம் விழுந்து நொறுங்கியதில், விமானிகள் இரண்டு பேர் பலியாயினர்.

மெக்ஸிக்கோவின் மெக்சிகோ நகரத்திலிருந்து, அதன் தென்பகுதியிலுள்ள ஓயாக்சகா நகர் அருகிலுள்ள ஹூவாட்லுகோ என்ற இடத்துக்கு, ஒரு விமானம் வெள்ளிக்கிழமை சென்றது. அந்த விமானத்தில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓயாக்சகா நகரின் மண்டல மேயர், ஒரு விமானி மற்றும் இரண்டு பேர் இருந்தனர்.

செல்லும் வழியில் விமானம் திடீரென விழுந்து விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணம் செய்த ஆறு பேரும் அதில் பலியாயினர். விமான விபத்துக்கு, மோசமான வானிலை அல்லது விமானியின் தவறு காரணமாக இருக்கலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல், துபாய் சர்வதேச விமான நிலையம் அருகே அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்குச் சொந்தமான சரக்கு விமானம் விழுந்து நொறுங்கியது. இச்சம்பவத்தில் விமானி இருவர் பலியாயினர். சம்பவம் நடந்த இடத்தில் வேறு யாரும் இல்லாததால், வேறு உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை.

# 14 அல்-குவைதா தீவிரவாதிகள் ஏமன் படையினரால் கைது!

சானா (ஏமன்), செப். 06

ஏமனின் பல்வேறு பகுதிகளில் நாசவேலைகளில் ஈடுபட முயன்ற அல்-குவைதா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 14 பேரை பாதுகாப்புப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

ஏமனின் அபியான் மாகாணத்திலுள்ள லவுடார் மலைப்பகுதியில் அல்-குவைதா தீவிரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் என உள்துறை அமைச்சகத்திற்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து மலைப்பகுதியான அங்கு பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போது 10 அல்-குவைதா தீவிரவாதிகளும், 4 ஜிகாதிஸ்ட் அமைப்பினரும் கைதுசெய்யப்பட்டனர்.

# சீனாவில் மீண்டும் போக்குவரத்து நெரிசல்; 10,000 லொறிகள் நகரமுடியாத நிலை

## ஒழுங்குபடுத்தும் பணிக்கு பொலிஸார் குவிப்பு

பீஜிங், செப். 06

சீனாவின் பீஜிங் - திபெத் தேசிய நெடுஞ்சாலையில் மீண்டும் வரலாறு காணாத வகையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. 120 கி.மீட்டர் தூரத்தில் 10 ஆயிரம் லொறிகள் நகர முடியாமல் ஸ்தம்பித்து நிற்கின்றன.

பீஜிங்-திபெத் தேசிய நெடுஞ்சாலையில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர்தான் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதில் 100 கிலோ மீற்றர் தூரத்தில் வாகனங்கள் சிக்கித் தவித்தன. இந்தப் போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்துவதற்கு 10 நாட்களுக்கு மேலாகிவிட்டது.

இந்நிலையில், இதே சாலையில் வெள்ளிக்கிழமை மீண்டும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. இப்போதும் இப்பாதையில் நடந்துவரும் சாலை பராமரிப்பு பணி காரணமாகவே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சாலையின் வழியாகவே மங்கோலியாவிலிருந்து பீஜிங்குக்கு நிலக்கரி கொண்டுவரப்படுகிறது. இதில் தினசரி ஆயிரக்கணக்கான லொறிகள் சென்று வருகின்றன.

சமீபகாலமாக சாலையின் திறனுக்கு அதிகமாக வாகனங்கள் செல்வதும் இச்சாலையில் போக்குவரத்து நெரிசலுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்த பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வெள்ளிக்கிழமை காலையிலிருந்து இவர்கள் போக்குவரத்தை சீர்செய்ய முயற்சி மேற்கொண்டுவருகின்றனர். ஆனால் அவர்களின் முயற்சிக்கு சிறிதும் பலன் கிடைக்கவில்லை.

வாகனங்கள் ஓரடிகூட நகரவில்லை. இதனால் லொறி சாரதிகள் தங்களது வாகனங்களை அப்படியே சாலையில் நிறுத்திவிட்டு வாகனத்துக்கு கீழ் அமர்ந்து சீட்டாடுதல் உள்ளிட்ட வகையில் பொழுதைக் கழிக்க ஆரம்பித்துவிட்டனர்.

# 237 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முதலாக கேம்பிரிட்ஜ் பல்கலையில் 15 வயது மாணவர்!

லண்டன், செப். 06

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 237 ஆண்டுகளுக்குப் பின்னர், பாடசாலைக்குச் செல்லாத 15 வயதாகும் ஆரன் பெர்னாண்டஸ் கணித பட்டப்படிப்பில் சேருகிறார்.

1773இல் 14 வயதான வில்லியம் பிட் என்பவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த இளம் வயது மாணவர் என்ற பெருமையைப் பெற்றார்.

அவரைத் தொடர்ந்து 237 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆரன் பெர்னாண்டஸ் அந்த கௌரவத்தைப் பெற்றுள்ளார்.

கல்லூரியில் அடுத்த மாதம் சேரவிருக்கும் இவர், உலகின் மிகக் கடினமான கணிதப் பாடத்திட்டம் என்று கருதப்படும் ''திரிபோஸ்' பட்டப்படிப்பை தேர்ந்தெடுத்துள்ளார்.

சேர் ஐசக் நியூட்டன், ஸ்டீபன் ஹாகிங் ஆகியோர் உள்ளிட்ட பிரபலங்கள் பயின்ற அந்தப் பாடத் திட்டம் கணித உலகில் 'புரியாத புதிர்' என்று வர்ணிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பாடத்திட்டம் மிகவும் எளிமையாக இருக்கின்றது என ஆரன் பெர்னாண்டஸ் கூறியுள்ளார். முதலாண்டு பாடங்கள் அனைத்தை யும் தாம் படித்து விட்டார் என்றும், அவை மிக மிக எளிதாக இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் தந்தையிடம் கல்வி பயின்றுவரும் இவர், 5 வயதிலேயே ஜிசிஎஸ்இ எனப்படும் மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று விட்டார். இந்தத் தேர்வு 14 முதல் 16 வயதுக்குட்பட்டவர்களுக்கானது.

ஆரனின் அறிவுத்திறனைப் பார்த்து வியந்து, 14 வயதிலேயே அவருக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இடம் அளிக்கப்பட்டுவிட்டது. இப்போது பல்வேறு ஆய்வுகளுக்குப் பின்னர் கணிதப் பட்டப்படிப்பில் அவர் சேர்க்கப்படுகிறார்.

கணிதம் மட்டுமன்றி பறவைகள் ஆராய்ச்சி, ஆங்கில இலக்கியம் ஆகியவற்றிலும் ஆரனுக்கு அதிக ஆர்வம். விடுமுறையில் பறவைகள் ஆராய்ச்சி குழுவில் ஐக்கியமாகி விடுவார். ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் குறித்து ஆய்வுப் புத்தகம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசமைப்புத் திருத்த அபாயம் குறித்து ஐ.தே.க. மகாநாயக்கரிடம் விளக்கம்



கண்டி, செப்.06

ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரின் தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை கண்டி மல்வத்தை மகாநாயக்கர் திப்பட்டுவாவே சித்தார்த்த சுமங்களவைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் தொடர்ந்து கரு ஜயசூரிய கூறியவை வருமாறு:-

நாட்டில் வறுமை, வேலைவாய்ப்பின்மை போன்ற அவசரமாகத் தீர்க்கவேண்டிய பிரச்சினைகள் இருக்கும்போது அரசமைப்புத் திருத்தங்களை அவசர அவசரமாக நிறைவேற்ற முயற்சிப்பது ஏன்? நாட்டில் தேசிய பிரச்சினைகள் ஏற்படும்போது மகாநாயக்கர்கள் தலையிட்டுத் தீர்வு கண்டுள்ளனர். இப்போது மற்றுமொரு தேசிய பிரச்சினை குறித்து உங்களிடம் முறையிட வந்துள்ளோம்.

இந்த நாட்டில் பேச்சுச் சுதந்திரம் இல்லை. ஊடகங்கள் வாய்மூடியுள்ளன. ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றனர். ஊடகவியலாளர்கள் பயந்துபோயுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராகச் சுவரொட்டி ஒட்டியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். எதிராக பிரசாரம் செய்வது குற்றமா? மதத் தலைவர்களான உங்களது கருத்துகள் அவசியம். இந்த அரசமைப்புத் திருத்தம் நிறைவேறினால் ஜனநாயகம் ஒழியும். பொலிஸார் ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் கட்டுப்பட்டே செயற்படுவார்கள் -என்றார்.

**விஜயதாஸ ராஜபக்ஷ**

விஜயதாஸ ராஜபக்ஷ இங்கு பேசும்போது, பல நூற்றாண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட அமெரிக்க அரசமைப்பு இன்னும் உள்ளது. தொடர்ந்து ஒருவர் ஜனாதிபதியாக இருந்தால் மக்களுக்குப் பாதிப்புகள் ஏற்படும் என்பதால் 1951இல் ஒரு ஜனாதிபதி இரு தடவைகளே பதவியில் இருக்கலாம் என்ற மாற்றத்தைக் கொண்டு வந்தனர். இதன்மூலம் 8வருடங்கள் மட்டுமே ஜனாதிபதியாக ஒருவர் பதவி வகிக்க முடியும். ஜனாதிபதிக்கு அதிகாரம் அதிகரித்தால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரம் இல்லாமல் வெறும் பொம்மைகளாக இருக்கவேண்டிய நிலை ஏற்படும்.

ஜனாதிபதித் தேர்தலின்போது தலதா மாளிகையில் வைத்து ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என்று ஜனாதிபதி சத்தியம் செய்தார். ஆனால் அதற்கு மாறாக இப்போது செயற்படுகிறார் - என்றார்.

**திஸ்ஸ அத்தநாயக்க**

இங்கு உரையாற்றிய திஸ்ஸ அத்தநாயக்க கூறியவை வருமாறு:-

கடந்த தேர்தல்கள் இரண்டிலும் ஜனாதிபதி முறையை மாற்றுவதற்காகவே அரசமைப்பை மாற்றியமைக்க ஜனாதிபதி வாக்குக் கேட்டார். மக்களுக்கு சேவை செய்வதாக மஹிந்த சிந்தனைக்கு வாக்குக் கேட்டார். மக்களுக்கு சேவை செய்வதாக மஹிந்த சிந்தனைக்கு வாக்குக் கேட்டார். ஆனால் ஜனாதிபதி அதிகாரத்தை அதிகரிக்கும் அரசமைப்புத் திருத்தத்தையே முன்வைத்துள்ளார்.



நாட்டில் தேசிய பிரச்சினைகள் ஏற்படும் போது ஆளும் கட்சி, எதிர்க்கட்சித் தலைவர்கள் சந்தித்து தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம். அவ்வாறே நாமும் சந்தித்தோம். அப்போது அரசமைப்புத் திருத்த நகலைக் கேட்டோம். அது எமக்கு கிடைக்கவில்லை.

ஒரு பலமான எதிர்க்கட்சி என்ற வகையில் இந்த அரசமைப்புத் திருத்தத்தை ஆதரிக்கவில்லை. பலர் எதிர்த்து வாக்களித்தாலும் நாடாளுமன்றத்தில் 150வாக்குகளுக்கு மேல் பெற்று நிறைவேறும். நாடாளுமன்றில் 150 பெற்றால் போதாது. மக்கள் அதை ஏற்க வேண்டும். சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் ஏற்றுக் கொண்டால் இத் திருத்தத்தை நிறைவேற்றினால் பரவாயில்லை.

**மகா நாயக்கர் கருத்து தெரிவிக்கவில்லை**

இதில் உள்ள பாரதூரமான விடயம் என்னவெனில் இரண்டாவது தடவை பதவி ஏற்குமுன்னர் இந்த மாற்றத்தைக் கொண்டுவருவதேயாகும்.'' என்றார். மல்வத்த மகாநாயக்க தேரர் எந்த விதக் கருத்தும் தெரிவிக்கவில்லை. ஊடகவியலாளர்கள் வெளியே அனுப்பப்பட்டபின் 30 நிமிட நேரம் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்றது.

ஐ.தே.குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க, ரேணுக்கா ஹேரத், எச்.ஹலீம், ஆர்.யோகராஜன், காமினி ஜயவிக்கிரம பெரேரா, விஜயதாஸ ராஜபக்ஷ, ருவன் விஜயவர்தன, ஹர்சன் சில்வா, நிரோசன பெரேரா ஆகியோரும் மத்திய மாகாணசபை உறுப்பினர்களான லக்ஷ்மன் விஜயசிறி, சாணக்க கிலப்பெரும, கண்டி மாநகரசபை உறுப்பினர்களான ராஜா புஸ்பகுமார, ராஜா சேனநாயக்க ஆகியோர் அங்கம் வகித்தனர்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம்

# முதுகல்விமாணி கற்கைநெறி ஆரம்பம்; இம்முறை 103 மாணவர்கள் இணைவு

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் முதுகல்விமாணி (M.Ed.) கற்கைநெறி நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இதன் ஆரம்ப நிகழ்வு கலைப்பீட மண்டபத்தில் உயர்பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக மங்கள விளக்கை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து மண்டப நிகழ்வில் 8 ஆவது அணியினரான கல்விமாணிக் கற்கை நெறி மாணவர்களை வரவேற்று பேராசிரியர் சத்தியசீலன் உரையாற்றியதை அடுத்து கலைப்பீடாதிபதி பேராசிரியர் ஞானக்குமரன், கல்வித்துறை விரிவுரையாளர்களான பேராசிரியர் க.சின்னத்தம்பி, பேராசிரியர் மா.சின்னத்தம்பி, கலாநிதி திருமதி ஏ.சத்தியசீலன், கலாநிதி திருமதி கே.இராசநாயகம் ஆகியோர் உரையாற்றினர்.

அடுத்து கல்வித்துறை விரிவுரையாளரும் குறித்த முதுகல்விமாணி கற்கைநெறி இணைப்பாளருமான கலாநிதி த.கலாமணி கற்கைநெறி தொடர்பாகவும் நடைமுறைகள் தொடர்பாகவும் மாணவர்களுக்கு விளக்கமளித்தார். அதனைத் தொடர்ந்து விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெற்றன. இக்கற்கை நெறியில் இம்முறை 101 மாணவர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன் கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்டு கல்வியைத் தொடரமுடியாத இருவரும் இணைக்கப்பட்டு 103 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வழமையாக 50 வரையான மாணவர்களுடன் இடம்பெறும் இக்கற்கை நெறிக்கு இம்முறை 1600 பேர் விண்ணப்பித்திருந்ததாகவும் இதனால் 100 பேரையாவது உள்வாங்க வேண்டும் என உயர்பீடப் பட்டப்படிப்புகள் பீடத்தினர் முயன்று இவ்வாறு அதிக எண்ணிக்கையான மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்நிகழ்வில் உரையாற்றியவர்கள் தெரிவித்தனர். (ஓ-405)

# தமிழ்க்கூட்டமைப்பு, இடதுசாரிகள் நிலைப்பாடு இன்று தெரியவரும்

கொழும்பு, செப். 06

உத்தேச அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசு பெற்றுவிட்ட நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இடதுசாரிக் கட்சிகளும் இது குறித்த இறுதி முடிவை இன்று அறிவிக்கவுள்ளன என்று தெரியவருகிறது.

மூன்று இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்புத் திருத்தத்துக்கு எவ்வாறு வாக்களிக்கப் போகின்றார்கள் என்பது இன்று மாலை தெரியவரும்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து மேலும் மூவர் அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளனர் என பொலன்னறுவை மாவட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏர்ள் குணசேகர தெரிவிக்கின்றார்.

இதன்படி ஆறு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளமை உறுதியாகவுள்ளது. அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ள அந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்று ஏர்ள் குணசேகரவிடம் கேட்டபோது அவர்களின் அனுமதியின்றி தம்மால் பெயரை வெளியிடமுடியாதென அவர் மறுத்துவிட்டார். இவர்கள் மூவருடன் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக 160 வாக்குகள் கிடைக்கும்.

அரசமைப்புத் திருத்த விவாதத்தில் கலந்துகொள்ளாவிட்டாலும் இடதுசாரிக் கட்சிகள் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அரசமைப்புக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிக்கவுள்ள நிலையில் இடதுசாரிகளின் எதிர்ப்பால் நடக்கப்போவது எதுவுமில்லை. இவர்களது எதிர்ப்பால் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலை இல்லை என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (ஓ-சி)

# சு.க. மேடையில் காதர் எம்.பி.



கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அப்துல் காதர் கம்பளைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட பொதுக் கூட்டத்துக்கு நேற்றுத் திடீரென வருகை தந்து பரபரப்பூட்டினார்.

கம்பளை நொலுவை வீதியில் பள்ளேவலை ஸ்ரீல.சு.கட்சி காரியாலய மண்டபத்தில் நேற்றுக்காலை பிரதமர் டி.எம்.ஜயரட்ண தலைமையில் தொகுதிக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்துல் காதர் எம்.பி.தன்னுடைய ஆதரவாளர்கள் சுமார் 150 பேருடன் கூட்டம் நடைபெற்ற மண்டபத்துக்குள் பிரவேசித்தார். இதனையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் எழுந்து நின்று பலத்த கரகோஷத்துடன் ஜயவேவா கோஷம் எழுப்பி நாடாளுமன்ற உறுப்பினரையும் அவரின் ஆதரவாளர்களையும் வரவேற்றனர்.

அரசுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் ஆதரவு தெரிவித்து வரும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டது இதுவே முதல் தடவை இதுவாகும்.

இக்கூட்டம் முடிவடைய கம்பளை நகரில் மணிக்கூட்டுக்கோபுரச் சந்தி வரையும் நடைபெற்ற அரசமைப்புத் திருத்த சட்ட ஆதரவுப் பேரணியிலும் பிரதமருடன் அப்துல் காதர் எம்.பியும் பங்கேற்றார். (ஓ-சி)

## கூட்டமைப்புக்கும் ஜே.வி.பி.க்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த தலைமைகளை நாட்டுக்கு கொண்டு வந்து அதனூடாக நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டுசெல்ல சட்டம் வழி செய்யும்.

அரசமைப்புத் திருத்தத்தை சர்வஜன வாக்கெடுப்பு இன்றி நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஏனெனில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்கள் பிரதிநிதிகள் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

அரசியல் வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு நல்லிணக்கத்துடன் செயற்படவேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், குறுகிய அரசியல் வேறுபாடுகளால் மக்கள் பிளவுபடுவர். இனங்களுக்கிடையில் பிளவுகள் ஏற்படும்.

நாட்டில் சுயாதீன ஆணைக் குழுக்களை நிறுவி நல்லாட்சியை கொண்டு நடத்த வழி ஏற்படும்.

**எந்தக் கட்சியும் அச்சம் கொள்ளத் தேவையில்லை**

ஜனாதிபதி மூன்று மாதங்களுக்கொரு தடவை நாடாளுமன்றத்துக்கு வந்துசெல்லும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, எந்த அரசியல் கட்சியும் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டம் மக்களை கஷ்டப்படுத்த மாட்டாது. எமக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து 20 பேர் ஆதரவளிக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்து இன்னும் பலர் இதனை ஆதரிக்கவேண்டும்.

அரசமைப்புத் திருத்தத்தை எதிர்ப்பவர்கள் நாட்டின் முன்னேற்றத்தை விரும்பாதவர்கள். ஐக்கிய தேசியக் கட்சி, எதிர்க்கட்சி என்பதால், எப்போதும் அரசை எதிர்த்துக்கொண்டிருப்பது நல்லதல்ல. அரசின் நல்ல விடயங்களை ஆதரிக்கவேண்டும்.

நாட்டில் சிறந்த நிர்வாகம், அரசியல் கலாசாரம் ஏற்படவும் சகல இன மக்களும் ஒன்றுபட்டு வாழவும் அரசமைப்புத் திருத்தம் வழி வகுக்கும்.

நாட்டின் முன்னேற்றத்துக்கு தேவையான சிறந்த தலைவர்களை ... என்பதை சகலரும் ஏற்றுக்கொள்வர். எனவே, இரு தடவைகளுக்கு மேல் சிறந்த தலைவர்களை மக்கள் ஆட்சியில் அமர்த்துவர்.

மக்கள் நல்ல ஆட்சியாளர்களை கொண்டு வருவர். எனவே ஜனாதிபதியின் ஆட்சிக் காலம் அல்லது பதவிக்காலம் வரையற்றதாய் இருப்பது நியாயமானதாகும்.

1978 அரசமைப்புச் சட்டப்படி சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிப்பதில் பல தடைகளும், சிக்கல்களும் நிலவின. ஆனால், இத்திருத்தச் சட்டம் இத்தடைகளை நீக்கும் என்று நம்ப முடியும் - என்றார் பிரதமர் டி.எம்.ஜயரட்ன. (அ-சி)

## நல்லூரில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கும் மேலாக பரியோவான் முதலுதவிப் படையினர், சாரணர்கள் மற்றும் தொண்டர் படையினரும் சேவையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இன்று மாலை ஐந்து மணிக்கு சப்பறத் திருவிழா நடைபெறும். (ஓ-7-16)

## கூட்டமைப்பின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகிரங்க வேண்டுகோள் விடுத்த சூழ்நிலையில் இன்றைய கூட்டம் நடைபெறுகின்றது.

கூட்டமைப்பின் முக்கிய நிர்வாகிகள் இன்றைய கூட்டத்திற்கு அழைக்கப்படுவார்களா என்பது குறித்து எவ்வித தகவலும் இல்லை.

கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் முடிவு இன்று வெளியிடப்படுமா அல்லது நாளை வெளியிடப்படுமா என்பதும் தெரியவரவில்லை. (அ)

## அஸ்கிரிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்தே மகாநாயக்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் நாட்டை வழி நடத்திச்செல்கின்றார். அவரது தலைமை யுத்தத்தை வெற்றி கொள்ளச் செய்தது. அதேபோல் நாட்டை அபிவிருத்தி செய்வதிலும் அவர் வெற்றி பெறுவார். எனவே இதுபோன்ற தலைமையை சட்டத்தாலோ அரசமைப்பாலோ கட்டுப்படுத்தக் கூடாது. - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-சி)

## இன்றைய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

அரச அதிபர்கள் அனைவரும் ஒன்று கூடி கடந்தகால அபிவிருத்தி குறித்தும்; எதிர்கால அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடி அவற்றைத் துரித கதியில் மேற்கொள்வது பற்றியும் விரிவாக ஆராயவுள்ளனர்.

அத்துடன் இந்த மாநாட்டில் மாவட்ட ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டு அதனைத் தீர்ப்பது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் - என்றார். (ஓ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதீன மண்டபத்தில் இன்றும் நாளையும் ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 6

இலங்கை சின்மயா மிஷின் ஏற்பாட்டில் ''கந்தன் கருணை'' எனும் தலைப்பிலான ஆன்மீகச் சொற்பொழிவு இன்றும் நாளையும் மாலை 6.30 தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவை இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி கிருஷ்ணாத்மானந்தா நிகழ்த்துவார்.

இதேவேளை இம்மாதம் 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை ''உன்னில் நான் என்னில் எல்லாம்'' எனும் தலைப்பில் இவர் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஒ-10)

## கொழும்பில் எதிர்க்கட்சிகள் மக்கள் கருத்தரங்கு

கொழும்பு, செப். 06

நாடாளுமன்றில் எட்டாம் திகதி நாளை மறுதினம் சமர்ப் பிக்கப்படவுள்ள அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இன்று கொழும்பில் மக்கள் கருத்தரங்கு ஒன்றை நடத்துகின்றன.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு 7இல் அமைந்துள்ள ஜே.ஆர்.ஜயவர்தன கேந்திர நிலையத்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறும்.

எதிர்க்கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் கட்சி மற்றும் சமாஜவாதி முன்னணி போன்ற கட்சிகள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)



இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் விஜயகுமார்சிங் நேற்றுப் பிற்பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தை விட்டு இறங்கும் பொழுது வான்படை வீரர் ஒருவர் இராணுவ மரியாதை செலுத்துவதையும் இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய மற்றும் அதிகாரிகளினால் அவர் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டு அழைத்துவரப்படுவதையும் பின்னால் இருநாட்டு தளபதிகளின் பாரியார்கள் வருவதையும் படங்களில் காணலாம்.

# வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு சிங்களவர்கள் முழு மனத்துடன் உதவ வேண்டும்

## இந்திய இராணுவத் தளபதி தெரிவிப்பு

புதுடில்லி, செப். 06

வடக்கு, கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் தமது வாழ்வை துரிதமாக மீளக்கட்டியெழுப்புவதற்கு சிங்கள மக்கள் மிகப்பரந்த மனதுடன் உதவ வேண்டும் என்று இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் விஜய் குமார் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஐந்து நாள் பயணத்தை மேற்கொள்ள முன்னர் ஜெனரல் விஜய் குமார் சிங் புதுடில்லியில் அளித்த செவ்வி ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

போர் நடைபெற்ற காலங்களில் இருந்த எல்லாப் பகையுணர்வையும் காயங்களையும் இலங்கையைச் சேர்ந்த அனைவரும் இப்போது புதைத்து விட வேண்டும் என்று நினைக்கிறேன்.

தமிழ்ச் சகோதரர்கள் போரினால் இழந்து போன வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கு சிங்களவர்கள் மிகவும் பரந்த மனதுடன் உதவ வேண்டும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் எதிர் காலம் மிகவும் நல்லதாக உள்ளது.

எனது பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்துவதை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல.

ஏற்கனவே இருநாட்டு பாதுகாப்புப் படைகளுக்கும் இடையில் நெருக்கமான உறவு இருந்து கொண்டு தான் இருக்கிறது.

ஆனால், வடக்கு,கிழக்கு மாகாணங்களில் எத்தகைய கட்டமைப்பு உள்ளது என்பது பற்றியும் பார்க்க வேண்டியுள்ளது.

எத்தகைய பாதுகாப்பு உறவு பேணப்படவுள்ளது என்பது பற்றி இருநாட்டு அரசியல் தலைவர்களும் தான் தீர்மானிப்பர் - இப்படி அவர் தெரிவித்தார் (ஒ-சி)

## 8 ஆம் திகதியை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊவா மாகாண சபை உறுப்பினருமான கே. வேலாயுதம் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கூறியவை வருமாறு:-

இந்த நாட்டு மக்கள் அரசிடம் கேட்பது அரசமைப்புத் திருத்தம் அல்ல. அவர்களின் சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளுமாறே அவர்கள் அரசிடம் கேட்கின்றனர்.

ஆனால், அரசு யுத்த வெற்றியை பயன்படுத்தி தனிமனிதர் ஆட்சியை இந்த நாட்டில் நிலைப்படுத்த முயற்சி செய்கிறது. அதற்காகவே அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் 15 லட்சம் அரச ஊழியர்கள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பாதிக்கப்படுகின்றனர்.

மக்கள் தமது பிரச்சினைகளைக் கூறுவதற்கு அவர்களுக்குச் சுதந்திரமில்லை. இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த அரசமைப்புக்கு எதிராகப் போராடவேண்டும்.

நாம் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தைக் காப்பாற்றவேண்டும். அதற்காக நாம் போராடவேண்டும். அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் தினமான எட்டாம் திகதியை நாம் கறுப்புதினமாகப் பிரகடனப்படுத்துகின்றோம்.

அதேபோல், அன்றைய தினம் ஐ.தே.கட்சி தொழிற்சங்கங்களும், ஏனைய தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளன. சிலவேளை எட்டாம் திகதி ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாகும் வரை உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபடக் கூடும் என எதிர் பார்க்கப்படுகின்றது. அவ்வாறு இடம் பெற்றால் அது விமல் வீரவன்ஸவின் உண்ணா விரதப் போடம்போல் போலியாக இருக்காது. - என்றார். (ஒ-சி)

## சன் சீ கப்பல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், கனடா 90.7 வீத அகதிகளை உள்வாங்கியது. கனடாவைப் போன்று பிரிட்டனும் கடந்த வருடம் குறிப்பிட்டளவு இலங்கை அகதிகளுக்குப் புகலிடம் வழங்கியுள்ளது.

கனடா 1082 பேருக்கு புகலிடம் வழங்கிய அதேநேரம் பிரிட்டன் 1,099 பேருக்கு புகலிடம் வழங்கியது. 2,636 பேர் பிரான்ஸில் புகலிடம் கோரிய போதும் அதில் 75.9 வீத விண்ணப்பங் களை அந்த நாடு நிராகரித்தது.

இதனுடன் ஒப்பிடுகையில் கனடா, இலங்கையர்களின் விண்ணப்பங்களில் 5.5 வீதத்தை மாத்திரமே நிராகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)


கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| பிரிவு 01 | 05.09.2010 |
| பிரிவு 02 | 06.09.2010 |
| பிரிவு 03 | 24.09.2010 |
| பிரிவு 04 | 25.09.2010 |

இப்பிரிவுகளுக்கு மட்டும் 50% கட்டடணச் சலுகை வழங்கப்படுகின்றது

மேலதிக விபரங்களுக்கு:
இயக்குனர்
IIS , #100, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

இன்று மாலை மெகா மெஜிக்

இந்தியாவில் இருந்து உலகப் புகழ்பெற்ற மாயஜால நிகழ்ச்சி இருகாட்சிகள்
நேரம்: மாலை 3.30மணிக்கும் 6.30 மணிக்கும்
இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
ரிக்கற் மண்டபவாயிலில்..



100/= 200/=
T.P: 077 8060 225

மாடி வீடு விற்பனைக்குண்டு

சுதுமலை தெற்கில் குருந்தடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் அமைதியான சூழலில் சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :- பொ. அருளானந்தன்
0773400918, 0213001692, 0016473471457

ஆள்கள் தேவை

கிளி/உமையாள்புரத்தில் இயங்கிவரும் வெதுப்பகம் ஒன்றுக்கு பணியாள்கள் (Boss உட்பட) தேவை.
✱ உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.
தொடர்பு:- 0777952934
எஸ்.குமார், கதிர் வெதுப்பகம், உமையாள்புரம், பரந்தன்

தேவை

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் தளபாடங்களுக்கு வர்ணம் (வாணிஸ்) பூசுவதற்கும் அனுபவமுள்ளவர்கள் தேவை.
தொடர்பு:- 0773604101

NEW BATCHES START

இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

06 - 09 -2010 (Monday)
8.30 - 11.30 & 12.30 - 3.30
11 - 09 -2010 (Saturday)
8.30 - 11.30 & 12.30 - 3.30

Diploma in Information Technology with e-commerce
Diploma in Software Engineering
Diploma in Web Engineering
Diploma in Business Management

Special Discount for first 50 Students for our 1st year Anniversary

ESOFT
NO. 114 & 267, Navalar Road, Jaffna.
021 222 4142, 021 7501120/21 www.esoft.lk
No.153, Jaffna Road, Nelliyady, Karaveddy. T.P: 021 226 4940
Periya Arasady, Chavakachcheri. 021 227 0333

புள்ளி மயிலேறி விளையாடும் முருகா! சப்பறத்திலே பவனிவந்து அடியார்களுக்கு அருள்மழை சொரிந்திடையா!!



புத்தம் புதிய ஆடைத் தெரிவுகளை மற்றும் நவீன காலணி வகைகளை நித்தம் நித்தம் அறிமுகம் செய்யும் ஸ்தாபனம்

நியூ லலிதா ரெக்ஸ் & ஆ பலஸ்

(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)



இல.42, பஜார் வீதி, வவுனியா.



சரவணபவனே பார்வதி பாலனே! எம் துயர் துடைத்திட சப்பறத்தில் எழுந்தருளி வாருமையா!

திருமணப் பட்டுப் புடைவைகளுக்கும் நவீனரக ஆடைத் தெரிவுகளுக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கான சிறந்த ரெடிமேட் ஆடைகளுக்கும்

லலிதா ரெக்ஸ்

(கல்யாணப் பட்டுப் புடைவைகளின் கைராசி நிறுவனம்)

இல.5, 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5260




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.